Registered as a Newspaper
பக்கம் -20 விலை 12/=

# தமிழ் அலை
Tamilalai

வாரமலர்

அலை - 01 சனிக்கிழமை, 13.09.2003 ஓசை -24

## தியாகி திலீபன் ஒரு இலட்சிய நெருப்பு





## ஆட்சியை கவிழ்க்க தோள் கொடுப்பாயா?

உண்மைகள் உணர்வுகளாய்

உள்ளே:
கொக்கட்டிச்சோலை
ஸ்ரீதான்தோன்றீஸ்வரர்ஆலய
தேரோட்டச்சிறப்புமலர்



செப்ரெம்பர் 22ம் திகதி முதல்
"தமிழ்அலை"நாள் இதழாக வெளிவருகிறது

தமிழ் பேசும் மக்களின் உணர்வலை

F:\computer\13.09.2003 Tamilalai.cdr

தமிழ் அலை
வாரமலர் Tamilalai
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொ. பே, தொலைநகல் 065.2226110
E-MAIL. tamilalai32@yahoo.com
13.09.2003

## பாரததேசம் நாடும் பேரினவாத சக்திகள்

விடுதலைப்புலிகள் மீது கடும் போக்கைக் கொண்டிருக்கும் இந்தியாவை மீள இனப் பிரச்சினை விவகாரத்தில் உட்புகுத்தி விடுதலைப்புலிகளுக்கு ஒரு நெருக்கடியான சூழலைத் தோற்றுவிக்கப் பேரினவாதக் கட்சிகள் ஆர்வம் காட்டி வருகின்றன.

திருமலையில் குரங்கு பாஞ்சான் முகாமை அகற்றுமாறு விடுதலைப்புலிகளுக்குப் பல வழி களிலும் அழுத்தங்கள் கொடுக் கப்பட்டபோதும் தமிழர் தாயகப் பிரதேசத்தில் நிறுவப் பட்டுள்ள தமது முகாமை அகற்ற முடியாது என்பதில் விடுதலைப்புலிகள் மிக உறுதியாகத் தெரிவித்து விட்டனர். இந்த நிலையில் திருமலையில் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் இந்திய நலன்களுக்குப் பாதகமானவை என்ற கருத்துக்களைத் தெரிவித்து இந்திய அரசின் தலையீட்டை மீளக் கொண்டு வருவதற்கு இந்தச் சிங்களப் பேரினவாதக் கட்சிகள் முனைப்புக் காட்டி வருகின்றன.

திருமலைத் துறைமுகம் தமிழர் தாயகத்தில் அமைந்துள்ள இயற்கைத் துறைமுகம், அண்டை நாடான இந்தியாவுக்கு தமது தேசநலனின் பாதுகாப்பிற்குத் திருமலைத் துறைமுகம் ஒரு கேந்திர முக்கியத்துவம் மிக்க இடம்.

எனவே இத்துறைமுகத்தின் மீது கண் வைத்திருக்கும் இந்தியா அதில் தமது பார்வையை உன்னிப் பாக்கும் வகையில் எண்ணைக்குதங்களையும் குத்தகைக்கு அமர்த்தியுள்ளது.

தற்போது குரங்கு பாஞ்சான் உட்பட திருமலையில் உள்ள விடுதலைப்புலிகளால் திருமலைத் துறைமுகத்துக்குப் பெரும் ஆபத்து சூழ்ந்துள்ளது. இதனால் வாடகைக்கு அமர்த்தியுள்ள எண்ணைக் குதங்களும் பாதிக்கப்படலாம் என்ற பொய்யான பரப்புரைகளை இந்தப் பேரினவாதக் கட்சிகள் பரப்பி வருகின்றன.

ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு நம்பிக்கைத் துரோகமிழைத்த பாரத தேசம் இன்னுமொரு கணம் எமது தேசத்தின் விடுதலைப் போராட்டத்தில் தடைக் கற்களாக நிற்கக் கூடாது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அழித்து ஒழிக்க இந்தியா சிங்கள தேசத் தலைமை களுடன் வகுத்த வியூகங்கள் எல்லாம் தமிழீழ விடுதலைப்புலிகளின் வியூகங் களால் தகர்த்தெறியப்பட்டது.

ஈழத்தமிழினத்தின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் தான் என உலகமே ஏற்று அரசியல் ரீதியான தீர்வு முயற்சிகளைக் கையாண்டு வரும் நிலையில் சிங்களப் பேரினவாதக் கட்சிகளான ஜே.வி.பி., சிகல உறுமய, தேசிய பிக்குகள் முன்னணி, மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் லக்ஷ்மன் கதிர்காமர் போன்றோர் இந்தியாவை உள் இழுக்க ஆர்வம் காட்டுவது ஆபத்தானது. இவ்வாறான நடவடிக்கைகளினால் போர் ஓய்வு நிலையில் நடைபெறும் சமாதானத்திற்கான நகர்வுகளில் நம்பிக்கையீனங்களையே இவை ஏற்படுத்தும்.

# புலிகளின் பொறிக்குள் சிறிலங்கா அரசு அரசியல் அரங்கில் அடுத்த நகர்வு என்ன?

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காகப் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் தமிழீழ விடுதலைப்புலிகள் இதுவரையில் கொடுக்காத நீண்ட இடைவெளியைக் கொடுத்துள்ளார்கள். சிறிலங்கா அரசாங்கம் தனது இயலளவுக்கு ஏற்ப ''புலி'' களைத் தனது வழிக்குக் கொண்டு வருவதற்கு வலை விரித்து வரும் அதேவேளை சர்வதேச நாடுகள் சில புலிகளின் தலைமையை வசப்படுத்த மேற்கொண்ட வியூகங்களும் பலிதமாகாத நிலையில் சமாதான முயற்சிகள் தேக்க நிலையை அடைந்துள்ளன.

சிறிலங்கா அரசாங்கமும், யப்பானும் டோக்கியோ கொடையாளி நாடுகள் மாநாட்டிற்குப் புலிகளை அழைத்து தங்களது அரசியல் பொருளாதார வர்த்தக நலன்களைப் பேணுவதற்கு முற்பட்டன. எனினும் புலிகள் நிலைமையின் யதார்த்தத்தை நன்குணர்ந்து கொண்டு டோக்கியோ மாநாட்டைப் புறக்கணித்தார்கள். கொடையாளி நாடுகள் இம்மாநாட்டில் கோடிக்கணக்கான உதவியைச் சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்தால் வழங்குவோம் என உறுதியளித்தனர். ஆனால் சிறிலங்கா அரசாங்கம் புலிகள் புறக்கணித்த நிலையிலும் பலகோடி நிதி கிடைத்ததாக பீற்றிக் கொண்டது.

இன்னும் நிதி உதவி கிடைக்காத நிலையில் யப்பான் விசேட தூதுவர் யசூசி அக்காசி கொழும்பு ஐந்து நட்சத்திர விடுதி ஒன்றில் இரு தரப்பும் கலந்து கொள்ளும் கொடையாளி நாடுகள் கூட்டத்தை ஒழுங்கு செய்வதாக செய்திகள் வெளிவந்தன.

இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்தினால் தான் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்வோம் என அறிவித்த புலிகள் தலைமை இடைக்கால நிர்வாக சபைக்கான பேச்சே ஆரம்பிக்காத நிலையில் கொழும்பு ஐந்து நட்சத்திர விடுதி கலந்துரையாடலிலும் கலந்து கொள்ளும் தீர்மானத்தை எடுக்க மாட்டார்களென்றே திடமாக நம்பலாம்.

இன்னும் ஓரிரு மாதங்களில் அடுத்த வருட வரவு செலவுத் திட்டத்தை சிறிலங்கா அரசாங்கம் சமர்ப்பித்தாக வேண்டும். ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிபீடமேறி இருவருடங்கள் நிறைவு பெறவிருக்கிறது. ஆட்சிபீடமேறியதும் அமைதிச் சூழலை ஏற்படுத்தியதன் மூலம் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்திய அரசு மக்கள் சமாதானத்தின் நன்மைகளை அனுபவிக்க வழி செய்யவில்லை. மாறாக எரிபொருட்கள் உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு, சமாதான பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள தேக்கநிலை மக்கள் மத்தியில் எரிச்சலையே ஏற்படுத்தியுள்ளது.

டோக்கியோ மாநாட்டின் நிலையைப் பயன்படுத்தி பல்வேறு சலுகைத் திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள், அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு என்பவற்றை வழங்கி மக்களை ஆசுவாசப்படுத்தலாமென ஐக்கிய தேசிய முன்னணி அரசு கண்ட கனவு புலிகளின் அரசியல் ரீதியான பொறியால் நனவாக முடியாது தத்தளிக்கிறது.

இடைக்கால நிர்வாக சபைக்கான வரையை புலிகளிடம் கொடுத்து மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கலாமென ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முற்பட்டது. ஆனால் புலிகள் அரசாங்கத்தின் வரைபை முற்றாக நிராகரித்த அதேவேளை சட்ட வல்லுனர்களின் ஆலோசனைகளுடன் சர்வதேச சட்ட நியமங்கள், ஏற்கனவே உலக மட்டத்தில் அமைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைகளின் அனுபவங்களைக் கருத்தில் கொண்டு பதில் வரைபைத் தயாரித்துள்ளனர்.

பதில் வரைபு இன்று வரும், நாளை வரும் வந்தால் பேச்சுவார்த்தை மேசைக்குப் புலிகளைக் கொண்டு வந்து சமாதான நடவடிக்கைகள் தொடர்வதாக கொடையாளி நாடுகளுக்குக் காட்டி உதவிகளை எப்படியும் வசீகரிக்க வேண்டுமென்ற நப்பாசையுடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஓடுமீன் ஓடி உறுமீன் வரும்வரையில் காத்திருக்கும் கொக்கின் நிலையில் உள்ளது.

**<u>பதில் வரைபு இன்று வரும், நாளை வரும் வந்தால் பேச்சுவார்த்தை மேசைக்குப் புலிகளைக் கொண்டு வந்து சமாதான நடவடிக்கைகள் தொடர்வதாக கொடையாளி நாடுகளுக்குக் காட்டி உதவிகளை எப்படியும் வசீகரிக்க வேண்டுமென்ற நப்பாசையுடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஓடுமீன் ஓடி உறுமீன் வரும்வரையில் காத்திருக்கும் கொக்கின் நிலையில் உள்ளது.</u>**

தமிழீழ விடுதலைப்புலிகள் தாம் காட்டும் தாமதம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு நெருப்பாக இருக்குமென்பதை நன்கு தெரிந்தும் ஆறஅமர பதில் வரைபைத் தயாரித்து கடந்த ஒருவாரமாகத் தலைமையின் பரிசீலனைக்கு எதிர் வரைபைக் கொடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு எதிர் வரும் நவம்பர் மாதம் பல்வேறு சலுகைகள், சம்பள உயர்வுகளைக் கொண்ட வரவு செலவுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளது. இந்த நிலையில் புலிகள் இடைக்கால நிர்வாக சபையை அஸ்திரமாகப் பயன்படுத்துவது அரசாங்கத்திற்குப் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களை ஏற்படுத்தி வருகிறது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் செப்டெம்பர் 11ன் பின் ஏற்பட்ட பயங்கரவாதத்திற்கெதிரான அமெரிக்கா தலைமையிலான உலகளாவிய போக்கைப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப்புலிகளை மடக்கி விடலாமென எதிர்பார்த்தது.

ஆனால் புலிகள் இலட்சியப் பற்றுறுதியோடு சமாதான பேச்சுவார்த்தைச் சூழலிலும் தீட்சண்ணயம், தீர்க்க தரிசனத்துடன் காய்களை நகர்த்தி வருகிறார்கள்.

புலிகளுக்குச் சமாதானத்தின் பேரில் பொறி வைக்கமுற்பட்ட அரசாங்கமே இப்போது பொறிக்குள் சிக்கியுள்ளது. ஆட்சியைத் தொடர்வதற்கு மக்கள் ஆதரவு தேவையெனில் தேக்க நிலையில் உள்ள சமாதான பேச்சுவார்த்தைகள் தொடர வேண்டும். சமாதானத்தின் பலாபலன்களை மக்கள் அனுபவிக்கும் வகையில் விலைவாசிகளைக் குறைக்க வேண்டும்.

இல்லையேல் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி மக்களின் அதிருப்தியை மூலதனமாகப் பயன்படுத்தி ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்குத் தலையிடியையே கொடுக்கும்.

இதுவரை காலமும் சமாதானத்தை ஏலத்தில் விட்டு நாட்களை நகர்த்திய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இனிவரும் நாட்களில் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு புலிகளிடம் கையளித்து அவர்களாலேயே நிராகரிக்கப்பட்ட இடைக்கால வரைபுக்கு தென்னிலங்கையில் எதிர்ப்புக்கள் காட்டப்பட்டு ஓய்ந்துள்ளன. இந்த நிலையில் காணி அதிகாரம், சட்டமும் ஒழுங்கும்,பொலிஸ் அதிகாரம் என்பவற்றைக் கொண்டதாகப் புலிகள் சமர்ப்பிக்கவுள்ள வரைபை எப்படிக் கையாள்வது என்பது அரசுக்குப் பெரும் தலையிடியாகவே அமையும்.

நிராகரித்தால் தேக்க நிலையில் உள்ள சமாதான பேச்சுவார்த்தையைத் தொடர முடியாது. சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காவிட்டால் டோக்கியோ உதவி கிட்டாது. டோக்கியோ உதவி கிட்டாவிட்டால் மக்களுக்கு நிவாரணமளிக்கும் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க முடியாது.

புலிகளின் இடைக்கால நிர்வாகசபை வரைபை ஏற்றுக்கொண்டால் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி, சிங்கள உறுமய மற்றும் பிக்குகள் தேசிய முன்னணி என்பவற்றின் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும். நிறுவனமயப்படுத்தப்பட்ட பேரினவாத சக்திகளும், சமாதானம் இங்கு ஏற்படுவதைச் சகிக்க முடியாத அந்நிய சக்திகளும் தத்தமது கைவரிசைகளைக் காட்டும் போது அதனைச் சமாளிக்க வேண்டும்.ஆனால் இதனைத் தனித்து சமாளிக்கக் கூடிய பாராளுமன்ற பலமும், நிறைவேற்று அதிகாரமும் ரணில் விக்கிரமசிங்காவிடம் இல்லை. 109 ஆசனங்களுடன் அறுதிப் பெரும்பான்மைக்கான மூன்று ஆசனங்களுக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயவை நம்பியுள்ளது.

எனவே ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைப் பணயம் வைத்து மறுபுறம் சமாதான விரோதச் சக்திகளைச் சமாளித்து சமாதானத்தைக் கொண்டுவரக் கூடிய துணிச்சலைக் கொண்டிருக்கிறதா? உளப்பூர்வமாக தமிழர்களது அபிலாசைகளைப் புரிந்து தீர்வை கொண்டு வரக் கூடிய மனப்பான்மையைக் கொண்டுள்ளதா, என்பதிலேயே சமாதான நடவடிக்கைகளின் எதிர் காலம் தங்கியுள்ளது.

இந்த நாட்டில் நீண்ட காலம் ஆட்சி செய்து இனப்பிரச்சினை விஸ்வரூபம் எடுத்ததில் ஐக்கிய தேசிய கட்சிக்குப் பாரிய பங்குண்டு. இந்த நிலையில் புதியமொந்தையில் பழைய கள்ளாகவே தற்போதய ஆட்சி உள்ளதென நடுநில ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

தற்போதைய சமாதான நடவடிக்கைகளின் எதிர் காலத்தைத் தீர்மானிக்கப் போகும் நாள் வெகு தூரத்தில் இல்லையென்பதையே தற்போதையே அரசியல் கள நிலவரங்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

ஜி.நடேசன்

# தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையை பேணி பாதுகாக்க தமிழீழக் காவல்துறையை நிறுவினோம்.

## தேசியத் தலைவர் வே.பிரபாகரன்



சமூக வாழ்வு உயர் நிலை அடையும் பொழுதே ஒரு இனம் மகிமை பெறுகிறது மனித வாழ்வு உன்னதம் பெறுகிறது அதன் சமூக உறவு வளர்ச்சி பெறுகிறது இப்படியான சமூக வாழ்வு ஒரு இனத்திற்கு வரப் பிரசாதகமாக அளிக்கப்படுவதல்ல. அன்றி காலத்தால் உவந்தளிக்கப்படுவதுமல்ல அத்தோடு இது அடையப்பட முடியாத பொருளுமல்ல இதனை நாம் தான் நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும் நாம்தான் அமைத்துக்கொள்ள வேண்டும் இதற்காக நாம்தான் உறுதியோடு போராட வேண்டும்.

இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் தெரிவித்தார்.

கடந்த செப்டெம்பர் 7ம் திகதி கிளிநொச்சியில் தமிழீழக் காவல்துறை நடுவகப் பணியகத்தை திறந்து வைத்து உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் உரையாற்றுகையில்,

இற்றைக்குப் பத்தாண்டுகளுக்கு முன்னர் எமது மண்ணிலே தமிழீழக் காவல்துறை நிறுவப்பட்டது அப்போது இருந்த நிலைமை மிகவும் நெருக்கடியானது இடர்கள் நிறைந்தது சிங்கள அரசின் இன அழிப்புப்புப்போர் எமது மண்ணில் முனைப்புற்றிருந்தது பொருளாதாரத் தடை இறுக்கமாக்கப்பட்டு உணவுப் பொருட்கள் ஈறாக அனைத்திற்குமே தட்டுப்பாடுகள் நிலவின. சட்ட ஒழுங்கு முற்றாக சீர்குலைந்து மனுநீதிக்கொவ்வாத ஈனச்செயல்களெல்லாம் பெருகின. எல்லாவற்றுக்கும் அப்பால் நாம் கட்டிக்காத்த சமூக வாழ்வை அடியோடு சிதைத்து அதனூடாக எமது இனத்தின் இருப்பையே அழித்துவிட சிங்கள இனவாத அரசு பல வழிகளிலும் முயன்றது.

இந்த நெருக்கடிமிக்க ஆபத்தான சூழ்நிலையில்த்தான் ஆயிரமாயிரம் போராளிகளின் உதிரத்தாலும் தியாகத்தாலும் உருப்பெற்று வரும் எமது தாயகத்தை உன்னதமான மேன்மையான சமூதாயமாக மாற்றி அமைத்து எமது தேசியத்தின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கட்டுக்கோப்பையும் பேணிப் பாதுகாக்கும் நோக்குடன் எமது தமிழீழக் காவல்துறையை எமது மண்ணில் நாம் நிறுவினோம் இது எமது விடுதலைப் போராட்டத்தில் முக்கியமான திருப்புமுனை, எமது தேச நிர்மாணத்திலே முக்கியமான மைல்கல்.

இன்று உலகிலே பெரிதும் விபரீதமான மாற்றங்கள் நிகழ்கின்றன. பெரிதும் வளர்சியுற்ற செல்வச் செழிப்பான நாடுகளில் கூட வன்செயல்கள் மலிந்து வருகின்றன. கொலைகளும் கொள்ளைகளும் காமுகர்களது வெறியாட்டங்களும் பெருகி வருகின்றன. அங்கு குற்றங்கள் ஒழியவில்லை குற்றவாளிகளும் குறையவில்லை. மாறாக குற்றங்கள் பெருகி குற்றவாளிகளும் பெருகிவருகின்றன. அவர்களை அடைக்கும் சிறைகளும் பெருகிவருகின்றன. ஆனால் ஆளணிகளும் வளங்களும் வசதிகளும் போதுமானதாக இல்லாத போதும் எமது காவல்த்துறை மக்களை உள்வாங்கி உறவை வளர்த்து அவர்களது பேராதரவோடும் பங்களிப்போடும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தி சிறப்பாக செயற்படுகிறது. எமது எதிரியின் பத்திரிகைகளே போற்றி பொறாமைப்படுமளவிற்கு கடமை, கண்ணிம், கட்டுப்பாடு, தவறாது செயற்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக எமது தமிழீழக் காவல்த்துறை தேசப் பற்றுணர்வோடும் மனித நேயத்தோடும் அற்பணிப்பு உணர்வோடும் செயற்படுகிறது இதையிட்டு நான் உண்மை யிலேயே பெருமிதம் கொள்கிறேன். எமது காவல்த்துறை சட்ட ஒழுங்கைப் பேணுவதோடு மட்டும் நின்றுவிடாது சமூகத்தின் வளர்ச்சி க்கும் உயர்ச்சிக்குமான புறநிலைகளை உருவாக்கிச் செயற்படுகிறது. சமூகத்திலே நிலவுகின்ற தவறான கருத்துக்களையும் பார்வைகளையும் காலத்திற்கொவ்வாத வழக்குகளையும் மடமைத்தனமான சம்பிரதாயங்களையும் களைய நடவடிக்கை எடுத்து வருகின்றது இவற்றை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

அத்தோடு இன்றைய நன்நாளில் தமிழீழக் காவல்துறை நடுவகப்பணியகத் திறப்பு விழா நிகழ்வு சிறப்புறவும் வெற்றி நடைபோடும் காவல்துறையின் பணி மென்மேலும் வியாபித்து வளரவும் எனது நல்லாசிகளையும் நல்லாதரவையும் தெரிவித்துக் கொள்கிறேன் மேலும் எமது காவல்துறையின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அயராது பற்றுறுதியோடு உழைத்து வரும் காவல்துறைப் பொறுப்பாளருக்கும் போராளிகளுக்கும் காவல்துறை வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

### கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழின உயிர்க் கொலை நாள் செப் 05 நினைவுகூரல்கள்


















காணாமல் போன

## முஸ்லிம் நபருடைய மோட்டார் சைக்கிள் புலிகளால் கண்டு பிடித்து ஒப்படைப்பு

(நமது நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் திருட்டுச் செயல்களில் ஈடுபடும் கும்பல்களை கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதன் அடிப்படையில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன் சம்மாந்துறைப் பகுதியில் வைத்து காணாமல் போன எஸ்.எம். பாறூக் என்பவரின் மோட்டார் சைக்கிள் ஒன்றை விடுதலைப்புலிகள் கண்டு பிடித்ததுடன் திருடிய கள்வனுக்குத் தண்டனையும் வழங்கியுள்ளனர்.

இம் மோட்டார் சைக்கிளை அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதி றிச்சேட்குரோஸ் முன்னிலையில் கடந்த 10ம் திகதி புதன்கிழமை உரிமையாளரான சம்மாந்துறை 5ம் குறிச்சியைச் சேர்ந்த எஸ்.எம். பாறூக் என்பவரிடம் அம்பாறை மாவட்ட விடுத லைப்புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் குயிலின்பன் கையளித்தார்.

## போடியார் பொறிவெடி

முஸ்லிம் காங்கிரஸ் பொறுமையின் உச்சத்தில் உள்ளது

–அமைச்சர் றவூஹக்கீம்–



மரத்தில பொறுமையாக ஏறி
உச்சத்தில, வறுமையால சறுக்கி
விழாம இருக்கிறயள் தானே
நானா....

# தியாகி திலீபன் ஒரு இலட்சிய நெருப்பு



''ஐயா திலீபா எங்கு ஐயா போகின்றாய்? ஐயா திலீபா எங்கு ஐயா போகின்றாய்?'' எங்கள் உணர்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் நல்லூர் வீதியிலே உரத்து கேட்டது இன்றும் உணர்வு சேர எங்கள் நெஞ்சங்களில் ஒலிக்கின்றது.

***"பாடும் பறவைகள் வாருங்கள்***
***புலி வீரன் திலீபனைப் பாடுங்கள்***
***தியாகத்தில் ஆகுதி ஆனவன் நாமத்தை***
***ஆயிரம் ஆயிரம் காலங்கள் பாடுங்கள்"***

என்ற பாடல் எங்கள் உள்ளங்களிலே பதினாறு ஆண்டுகள் கடந்தும் பசுமரத்தாணியாய் ஒங்கி ஒலிக்கின்றது. தியாக தீபம் லெப்.கேணல் திலீபன் அவர்களது ஈகத்தை இவ்வாரக் கட்டுரை பேசுகின்றது.

இராசையா பார்த்திபன் என்ற சொந்தப் பெயரைக் கொண்ட ஊரெழுவைச் சேர்ந்த திலீபன் அவர்களது அறப்போருக்கான காரணம் என்ன? யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இருந்த திலீபன் அவர்களது சாகும் வரை உண்ணாவிரதத்திற்கான காரணத்தை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் பின்வருமாறு கூறுவதிலிருந்து காணுங்கள்.

''சிங்கள அரசுடன் உரிமை கோரிப் போராடுவதில் அர்த்தமில்லை. பாரதம் தான் எமது இனப் பிரச்சினையில் தலையிட்டது. பாரதம் தான் எமது மக்களின் உரிமைக்கு உத்தரவாதமளித்து. பாரதம் தான் எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது. பாரதம் தான் எமது ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைத்தது. ஆகவே,பாரத அரசிடம் தான் நாம் உரிமை கோரிப் போராட வேண்டும். எனவேதான் பாரத்துடன் தர்மயுத்தம் ஒன்றைத் தொடுத்தான் திலீபன் அத்தோடு பாரதத்தின் ஆன்மீக மரபில் பெறப்பட்ட அகிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக் கொண்டான்''

13.09. 1987 இல் இந்தியத் தூதருக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகளுக்கு எவ்வித சாதகபதிலும் கிடைக்காத நிலையிலேயே, காந்தியின் தேசத்திற்குக் காந்திகையாண்ட கருவியையே கையிலெடுத்தான் எங்கள் மகாத்மா. லெப். கேணல் திலீபன் அவர்கள். ஏலவே முன்வைக்கப்பட்ட 5

**துரைமேகநாதன்**

அம்சக்கோரிக்கைகளையே முன்னிலைப்படுத்தி

15.09.1987செவ்வாய் காலை 9.55க்கு ''வெள்ளி மயிலேறி வரும் வேலவனின் வீதியிலே'' நீராகாராம் ஏதுமின்றி சாகும் வரை உண்ணா நோன்பை ஆரம்பித்தமை மனக் கண் முன் இன்றும் நிழலாடுகின்றாது. தியாக தீபம் திலீபன் அவர்கள் முன் வைத்த கோரிக்கைகளாவன,

(1). பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இன்னமும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.

(11).புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டும்.

(111). இடைக்கால அரசு நிறுவப்படும் வரை''புனர்வாழ்வு'' என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

(1V). வடக்கு.கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

(V) இந்திய அமைதிப் படையின் மேற்பார்வையில் ஊர்காவல் படையினர் என அழைக்கப்படு வோருக்கு வழங்கப்படும் ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு, தமிழ்க்கிராமங் கள், பள்ளிக் கூடங்களில் நிலை கொண்டுள்ள இராணுவப் பொலிஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

மேற்கூறிய நியாயபூர்வமான 5 கோரிக்கைகளையே திலீபன் அவர்கள் முன்வைத்திருந்தார். இவருக்கு ஆதரவாக மட்டக்களப்பு. திருகோணமலை. முல்லைத்தீவு மாவட்டங்களிலும் விடுதலைபுலி வீரர்கள் சாகும் வரை உண்ணா விரதம் இருந்தார்கள்''நேருபேரனின் தூதுவன் ஏன் எனக் கேட்காது ஏளனத் தோடு நடந்தான்'' முன்னம் நடந்த தாக்குதலொன்றில் குடலின் ஒரு பகுதியை இழந்திருந்த திலீபன் அதை சிறிதும் பொருட்படுத்தாது வயிற்றினிலே போர் தொடுத்தார்.



இந்திய தேசத்திடம்,''திலீபன் அழைப்பது சாவையா? இந்த சின்ன வயசில அது தேவையா? என்று சிறுமியொருத்தியின் கணீரென்று குரல் நியாயம் கேட்டது.

மக்களின் உணர்வுக் கொந்தளிப்பைக் கண்டுணர்ந்த திலீபன் அவர்கள் உண்ணாவிரத மேடையிலே இரண்டவது நாள் ஆற்றிய உரை முத்திரை பொறித்தது.

''மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும்'' அது நிச்சயமாகத் தமிழீழத்தை, தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தரும். அதனை வானத்திலிருந்து அந்த அறுநூற்று ஐம்பது போராளிகளுடன் நானும் பார்த்து மகிழ்வேன். உண்மையான, உறுதியான இலட்சியம் எமது இலட்சியம். அந்த இலட்சியத்தை எமது தலைவருடன் சேர்ந்து நீங்கள் அடையுங்கள். எனது இறுதி விருப்பமும் இதுதான்'' என்று உண்ணா நோன்பின் களைப்பின் மத்தியிலும் சோர்வு குன்றாது உறுதிபடக் கூறியிருந்தார்.

இது மக்கள் எழுச்சிகளைப் பரவலாகக் கிளர்ந்தெளச் செய்தது. குறிப்பாகப் பருத்தித்துறைக் காவல்துறை நிலையத்திலிருந்த சிங்களக் காவல்துறையினர் 18.09.1987இல் மக்களால் விரட்டப்பட்டதைக் குறிப்பிடலாம். காந்தீயத்தைத் தந்த பாரத நாடு தமிழீழக் காந்தீயத்தை அலட்சியம் செய்ததால் 26.09.1987 சனி காலை 10.48க்கு தியாக தீபம் அவர்கள் தியாகச்சாவடைந்தார். பாரதத்தின் பொய் வேடம் போட்டு உடைக்கப்பட்டது. ஈழத்தமிழ்த் தேசிய ஆன்மாவில் ஆழமான வடுவை ராஜீவ்காந்தி உண்டு பண்ணிய அவலம் அரங்கேறிது.

தியாகதீபம் திலீபனைத் தேசியத் தலைவர் அவர்கள் பின்வருமாறு நினைவு கூறுகிறார்.

''நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதிவாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவு கடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடிதுடித்துச் செத்துக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம், என் ஆன்மா கலங்கும். ஆனால், நான் திலீபனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்துக் கொணடிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக்கண்டேன். அதில் நான் பெருமை கொண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக் கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை. காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்''

வரலாற்றில் இதற்கு முன்னரும் உண்ணாவிரதமிருந்து சிலர் உயிர் நீத்திருக்கிறார்கள். அன்றைய பர்மாவில் ஒரு பௌத்த துறவி அவ்வாறு உயிர் நீத்ததையே ஆரம்பமாக எங்கோ அறிந்த நினைவு ஐரிஷ் போராளியான ''பொபிசாண்ட்ஸ்'' சிறையிலே உண்ணாவிரதமிருந்து உயிரிழந்தமையும் நினைவிற்கு வருகின்றது. ஆனால், முதன் முதல் நீராகாரம் ஏதுமின்றி சாகும் வரை உண்ணாவிரதமிருந்த பெருமை 1986 நவம்பரில் தமிழீழத் தேசியத் தலைவரையே சாரும்.

திலீபன் நினைவு நாளை தமிழர் தேசியப்படை தமக்கேயுரித்தான பாணியில் நினைவு கூர்ந்ததை வரலாற்றில் காணலாம். யாழ் கோட்டை கைப்பற்றப்பட்டது. (1990-09-26), ஓயாத அலைகள் -2 மூலம் கிளிநொச்சி தமிழர் தரப்பால் சிங்களத்திடமிருந்து மீட்கப்பட்டது. (1998 செப்டெம்பர்) முதலானவை சில எடுத்துக்காட்டுக்கள். நல்லூரிலே நிறுவப்பட்ட திலீபனது நினைவுத்தூபி மீள புனரமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டமை வரவேற்கத்தக்கது.

தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டி எழுப்பிய ஈகத்தை நினைவுகூறும் எமக்கு முன்னால் விரிந்து கிடக்கும் தேசப் பணியை விரைவுபடுத்துவதன் தேவையைத் தேசியத் தலைவர் அவர்களின் பின்வரும் வரிகளே போதிக்கின்றன.

''மக்களின் ஒன்றுதிரண்ட சக்தி மூலமே - மக்களின் ஒரு முகப்பட்ட எழுச்சி மூலமே - நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கலாம். திலீபனின் ஈடு இணையற்ற தியாகத்திற்கு நாம் செய்யும் பங்களிப்பு இதுதான்''

# சரிந்தது கூட்டு அழிந்தது அனுராவின் ஆசை

சமாதானமுயற்சிக்குப் பெரும் ஆபத்தை விளைவிக்குமோ என அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி கூட்டு துரதிஸ்ரவசமாகக் கலைந்து விட்டது.

தற்போது ஐ.தே.கட்சி உட்பட சமாதானத்தை அவாக் கொண்டிருந்த தரப்பினருக்கு இவ்விடயம் சற்று ஆறுதலை அளித்துள்ளது.







எனினும் ஜே.வி.பியுடன் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கவிழ்த்து சுகம் காணத்துடித்த அனுரா பண்டார நாயக்கா அவர்கள் தமது சகோதரியார் இப்படிச் செய்வார் என்று கனவிலும் நினைத்திருக்கவில்லை.

தற்போது கண்கலங்கி நிற்கிறார். அவரது அடுத்தகட்ட முயற்சி சகோதரியாரை மீளவும் சம்மதித்து ஜே.வி.பி.யுடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதா அல்லது ஐக்கிய தேசியக் கட்சி அரசை கவிழ்க்க சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஆறுமுகம் தொண்டமான் அணி ஆகியவற்றை தன் வயப்படுத்துவதா எனச் சிந்தித்து வருவதாக அரசியல் நோக்கர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2001ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சந்திரிக்கா அரசுக்கு ஆபத்து வந்தபோது ஜே.வி.பி கைகொடுத்து உதவியது .

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசைத் தொடர்ந்து பதவியிலமர்த்துவதானால் தாம் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்கவேண்டும். எனக்கூறி ஜே.வி.பி. அப்போது நிபந்தனைகளை முன்வைத்தது.

இதில் பிரதானமாக விடுதலைப் புலிகளை இராணுவமுறையில் தோற்கடிக்க வேண்டும். அதிகாரப் பரவலாக்கல் குறித்து பேசக்கூடாது.

மற்றும் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அமைச்சரவையை 20 பேராகக் குறைத்தல்.

* அவர்களுக்கான சொகுசுவாகன இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தல்.
* நான்கு சுதந்திர ஆணைக் குழுக்களை நிறுவுதல்.
* விவசாயிகள் கடன்களை இரத்துச் செய்தல்.
* தனியார் மயமாக்கலை தகுதி காண்காலமாகிய ஒருவருடத்திற்கு ஒத்திவைத்தல், போன்ற கோரிக்கைகளை முன்வைத்தனர், அன்றைய சூழலில் ஜே.வி.பியின் கோரிக்கைகள் நியாயமற்றவை போன்று பொது ஜன ஐக்கிய முன்னணிக்குத் தென்பட்ட போதிலும். சிலவற்றை நிறைவேற்றினர். தனியார்மயமாக்கல் விடயத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணி இழுத்தடிக்கும் போக்கினைக் கடைப்பிடித்து வந்தது.

இதேவேளை பொது ஜன ஐக்கிய முன்னணியின் முன்னணி உறுப்பினர்களான. எஸ்.பி. திஸநாயக்கா, ஜி.எல்.பீரிஸ் போன்றோர் அக்கட்சியைவிட்டு ஐக்கிய தேசியக் கட்சிப்பக்கம் தாவியதால். ஜே.வி.பி.பொது ஜன ஐக்கிய முன்னணி நன்நடத்தை அரசு கலையவேண்டிய சூழல் ஏற்பட்டது.

தற்போது ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு ஏன் ஏற்படவில்லை என அலசி ஆராய்ந்தால், அதில் பல்வேறு சிக்கல்கள் நிறைந்திருப்பது தெரியவந்துள்ளது.

விடுதலைப் புலிகள் மீது கடும் போக்கைக் கொண்டிருக்கும். ஜே.வி.பி தற்போதய சமாதான நடவடிக்கைகளை முற்றாக எதிர்த்து வருகிறது.

அத்துடன் விடுதலைப்புலிகள் கோரும் சுயநிர்ணய உரிமை தொடர்பான எந்த ஒரு அதிகார. அலகும் வழங்கப்படக்கூடாது. ஒற்றையாட்சியின் கீழ்தான் தீர்வு காணப்பட வேண்டும். விடுதலைப் புலிகளை ஆயுதரீதியாக ஒழித்துக் கட்டவேண்டும் இவைதான் ஜே.வி.பியின் கோட்பாடு.

பொது ஜன ஐக்கிய முன்னணி யில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட் சிகளுக்கு சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையில் ஒர் கூட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவது பிடிக்கவில்லை. இவை ஒருபுறமிருக்க

**வேணிதன்**

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் உட்பூசல்கள் கொந்தளித்துக் கொண்டிருந்தன.

அனுரா பண்டாரநாயக்கா கூட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் கதாநாயகனாக விளங்கினார். இவருக்குப் பக்கத் துணையாக மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான மங்கள சமரவீர மற்றும் ஆனந்த அளுத்கமகே, டிலான் பெரேரா உட்பட பல சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட்டுள்ளனர்.

மகிந்த ராஜபக்ஸ எதிர்க் கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டது மங்கள சமரவீரவுக்கு அப்போது இருந்தே பிடிக்கவில்லை. அதேபோன்று சந்திரிக்காவுக்கு அடுத்ததாகப் பண்டாரநாயக்கா குடும்பத்தின் வாரிசாக அரச பதவியில் அமர வேண்டும் என்பது அனுராவின் ஆசை.

இதனால் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஸவின் நடவடிக்கைகளுக்கு அனுரா பண்டார நாயக்கா, மற்றும் மங்கள சமரவீர ஆகியோர் நேரிடை இல்லாவிட்டாலும் மறைமுகமாக ஒத்துழையான்மையைக் கடைபிடித்து வந்தனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரிசையில் தற்போது கட்சியை வழிநடத்தக் கூடியவரும். ஆளுமை உடையவரும். மகிந்த ராஜபக்ஸதான். இதனை ஜனாதிபதி சந்திரிக்காவும் உணர்ந்துதான் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஸ அணிசார்ந்த நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்.

இதேவேளை மங்கள சமரவீர, அனுரா பண்டாரநாயக்கா ஆகிய இருவரும் தம்மீது அதிருப்தி கொண்டிடுப்பது மகிந்தைக்கு தெரிந்த விடயம்.

எதிர் காலத்தில் நாடாளுமன்றத் தேர்தல் அல்லது ஜனாதிபதி தேர்தல் வந்தால் பொது ஜன ஐக்கிய முன்னணியின் தலைமை வேட்பாளராக தாம் போட்டியிட வேண்டும். அதுவரைக் கும் தமது உச்ச தலைமைத்துவத்தைத் தக்க வைப்பதில் மகிந்த கவனம் செலுத்தி வருவதாக அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

தற்போதய ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக் கட்சிகூட்டு முயற்சியில் கூட எதிர்க்கட்சித் தலைவர் அதிக அக்கறை காட்டவில்லை எனத் தெரிவிக்கப்ப டுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் கடந்த ஏழு மாதங்களாகக் கூட்டு அணி உருவாக் குவது தொடர்பாகப் பல கட்டங்களாகப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இறுதியில் கடந்த செப்ரெம்பர் 5ம் திகதி ஜனாதிபதி மாளிகையில் இருதரப்புப் பிரதிநிகளுக்குமான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

ஜே.வி.பி சார்பில் அதன் பிரசார செயலாளர் விமல் வீரவம்ஸ, பொதுச் செயலாளர் ரிஸ்வின் சில்வா, அனுராதிஸநாயக்கா ஆகியோரும். சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, கட்சியின் செயலாளர் மைத்திரிபாலசிறிசேன, நிமால் சிறிபாலடிசில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தையின் போது நோர்வே அனுசரணையாளராக செயற்படுவதை நிறுத்துவதுடன் விடுதலைப் புலிகளுக்கு எதிரான கடும் போக்கை கொண்டிருக்கும் இந்தியாவின் உதவியை நாடி விடுதலைப் புலிகளை ஓரம்கட்ட வேண்டும் என ஜே.வி.பி பிரதி நிதிகள் வலியுறுத்தினர்.

இதனை மகிந்த ராஜபக்ஸ அணி சார்ந்த எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரும்பவில்லை. அத்துடன் இக்கருத்தை ஜனாதிபதி விரும்பினால் சர்வதேச சமூகம் சமாதானத்தைக் கொண்டுவரும் பால் காட்டிவரும் அக்கறைக்குக் குறுக்கீடான ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்திவிடும். இவை இரண்டையும் விட பொதுத்தேர்தல் ஒன்று நடைபெற்றால் 26 இடங்களை மட்டுமே சுதந்திரக் கட்சி ஜே.வி.பி.க்கு வழக்கத் தீர்மானித்தது அதனையும் ஜே.வி.பி பிரதிநிதிகள் ஏற்கவில்லை. இதனால் உடன்பாடு எட்டாக்கனியாய் போய்விட்டது.

இப்பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடியப்போகிறது. என்ற தருணத்தில் கூட அனுராபண்டார நாயக்காவும் மங்கள சமரவீரவும் இதனை மீள இணக்கப்பாட்டை உருவாக்க முயற்சி எடுத்தார்களாம் இறுதியில் எல்லாம் தவிடுபொடி இப்போது அனுராபண்டார நாயக்கா ''விழுந்தும் மீசையில் மண் ஓட்டவில்லை'' என்பது போல ஏதோ பேசிவருகிறார். இந்தக் கூட்டு பலிக்காது படுதோல்வி கண்ட பிற்பாடு ரணில் அரசு நிதானமாக நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்கிறது.

கழுத்துக்குநேரே தொங்கிக் கொண்டிருந்த கூரிய கத்திபோன்று ஆட்சிக்கு ஆபத்து விளைவித்துவிடுமா ஜே.வி.பி சிறிலங்கா கூட்டு என ஐக்கிய.தேசிய கட்சி ஆட்சியாளர்கள் பீதியடைந்திருந்தனர் இப்போது பீதி நீங்கிவிட்டது.

இனிமேல் ஆட்சிக் கலைப்பு என்பது ஜனாதிபதிக்கு அவ்வளவு சுலப மான ஒருகாரியமாக்கக் கைகூடாது. ரணில் அரசு சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என ஆழமாகச் சிந்தித்தால். தற்போதுவிடுதலைப் புலிகளின் சட்டவல்லுனர்கள் தீட்டியுள்ள இடைக்கால நகல் வரைபை ஆமோதித்து அமுல்படுத்த வேண்டும். அதற்கான ஒரு காலச் சூழல் . தற்போது அரசியல் அரங்கில் உருவாகியிருக்கிறது.

அதனைச் சாதகமாகப் பயன்படுத்தவேண்டும் அவற்றை விடுத்து முழுக்க முழுக்க பேரினவாதப் பரப்புரைகளை தென்னிலங்கையில் விதைத்து அரசியல்லாபம் தேடும் ஜே.வி.பி சிகல உறுமய, இவர்களுடன் இணைந்து உறுமும் அனுராபோன்ற அரசியல் வாதிகளின் மிரட்டல் பேச்சுக்களை ஒருசாட்டுப் போக்காகக் கூறி தமிழினத்தின் உரிமைகளை வழங்க இந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசு முனையக் கூடாது.

அது ஆட்சியாளர்களுக்கு பெரும் அபகீர்த்தியையும், ஆபத்தையுமே ஏற்படுத்தும்..

□□□

## சொன்னாலும் குற்றம்



தேனகத்து மாநகரத்துக்குள்ள மகாசனங்கள் நடமாடும் சந்தியொன்றுக்குப் பக்கத்தில் இருக்கும் கலவன் கல்லூரிக்குப் பொறுப்பாக இருக்கிற பெரிய ஐயா ஒருவர் அந்த பள்ளிக் கூடத்தில படிச்சு உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து ஆசான் அறிவகத்துக்குத் தெரிவான மாணவி ஒருத்தி நற்சான்றிதழ் பெறச் சென்ற போது அந்த மாணவிக்கு, சேட்டை விட்ட சம்பவம் கடந்த வாரம் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தச் சங்கதியால பெற்றோர், பழய மாணவர்கள் அங்க படிப்பிக்கிற வாத்திமார் எல்லாரும் அந்த பாண்டவர் முதல்வரை பள்ளிக் கூடத்தில இருந்து வெளியேறும்படி தொந்தரவு செய்கிறார்களாம், குருகழகத்துக்கு தலைவரான இந்த மனிசனா இப்படி எண்டு சனங்கள் கதைப்பதும் காதுகளில் விழுகிறது.

அதுமட்டுமல்ல இந்தக் கல்லூரியில சேவை அடிப்படையில ஆசிரியையாக பணிபுரிகிற ஒருவர் போன கிழமை வேலைக் கந்தோரில சேவை புரிகிற ஒரு இளைஞருடன் மாநகரத்து ஒதுக்குப்புறம் ஒண்டில நீலப்படம், பார்க்கக்குள்ள கையும், மெய்யுமாக நம்மட பொடியனுகள் பிடிச்சு பதிவுத் திருமணம் செய்து போட்டாங்களாம். சொர்க்கத்தில நிட்சயிக்கப்படுற திருமணம் நீலப்படத்தில் நிட்சயிக்கப்பட்டிருக்குது எண்டு அந்த தம்பதிகள் கதைக்குதுகளாம்.

# இலங்கையின் தொன்மைக்குடியினர் தமிழர்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

பூ.ம.செல்லத்துரை

குமரிக்கண்டம் கடலில் மூழ்கியதும், இலங்கைத்தீவு தனியாகப்பிரிந்ததும் ஒரே பிரளயத்தில் அல்லது பல பிரளயங்களில் நடைபெற்றிருக்க வேண்டும். எத்தனை பிரளயங்கள் எவ்வெக் காலத்தில் நிகழ்ந்தன என்பதைப் பற்றி அறிஞர் சிதம்பரநாதர் தனது "சங்ககால வரலாறு" என்னும் நூலில் (History of Sangam Pemod ) கூறியுள்ளார்.

01. கி.மு. 30,000 ஆண்டு முதல் கி.மு 16500ம் ஆண்டு வரை தென் மதுரையில் பஃறுளி ஆற்றங்கரையில் முதல் தமிழ்ச்சங்கம் அமைந்திருந்தது. பஃறுளி என்பது குமரிக்கண்டத்தில் ஓடிய ஆறாகும். ஆகவே முதல் தமிழ்ச்சங்கம் குமரிக் கண்டத்தில் மிகவும் சிறப்பாக இயங்கி இருக்க வேண்டும். அக்காலத்தில் முதியன் நிலந்தருதிருவிற் பாண்டியன் அரசனாக இருந்தான்.



அவனுடைய பண்டைய வம்சம் நீண்ட காலம் ஆட்சி செலுத்தியிருக்கவேண்டும். வான சாஸ்த்திரத்தின் படி இக்காலப்பகுதி கி.மு 16500 காலப்பகுதி அடங்குவதால் இக்காலப்பகுதி கி.மு 8576க்கு முந்திய "மனுவந்தர" காலத்தில் இடம்பெற்றிருக்க வேண்டும்.

கி.மு. 16,500ற்கு முன் ஒரு தமிழ்ச்சங்கம் இருந்தது என்றால் தமிழ் மொழியே மிகத் தொன்மையானது என்பதுவும் தமிழர்களே மிகத் தொன்மையானவர்கள் என்பதும் புலப்படுகிறது.

02. கி.மு. 16500ம் ஆண்டு முதல் கி.மு. 16000ம் வரை இக்காலம் ஆபிரிக்க நீக்கிரோக்கள் குமரிக் கண்டத்தை ஆட்சி செய்த காலமாகும். உடுக்கண்ணன், மறைக்கண்ணன், அறிவடமாலி, திருப்புறத்துக்கன் என்ற பெயர்கள் காணப்படுவதால் நிச்சயம் இக்காலம் ஆபிரிக்கர் ஆட்சிக்காலம் எனச் சொல்லலாம்.

03. கி.மு. 16500-14500 இக்காலப்பகுதியில் மற்றும் ஒரு தமிழ்ச் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதை இறையனார் ஆரம்பித்து வைத்தார்.

04. கி.மு. 14500 -14490 இக்காலப்பகுதியில் மீண்டுமொரு பெரிய தமிழ்ச்சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இச்சங்கம் "மணிமலைத்தமிழ்ச்சங்கம்" என அழைக்கப்பட்டது.

05. கி.மு. 14490 - கி.மு 14058 வரை இது மங்கோலியர் ஆட்சிக் காலம் - சிங்கமுகன் - தாருகன் - பானுகோபன் ஆகியோர் தலைமையில் ஆட்சி நடைபெற்றது.

06. கி.மு. 14058 இக்காலத்தில் குமரவேள் என்ற பெயர் கொண்ட மன்னன் சூரபத்மனை வெற்றி கொண்டான். இவ் வெற்றியின் காரணமாகக் குமரவேளுக்குத் தமிழகத்தின் பல இடங்களில் சிலை வைக்கப்பட்டது. பின் இவை அனைத்தும் குமரவேள் ஆலயமாகின. இவைகளை இன்று முருகனின் ஆறுபடை வீடுகள் என அழைக்கின்றனர். குமரவேள் தலைமையில் சிவனொளிபாதமலையில் ஒரு தமிழ்ச்சங்கம் நடைபெற்றதாகத் தமிழ் விடுதூது கூறுகிறது. கி.மு. 14058ம் ஆண்டில் இலங்கை கதிர்காமத்தில் சூரபத்மன் வீழ்ச்சி அடைந்து - குமரவேள் ஆட்சி இடம் பெற்ற தென்றால் இலங்கையில் தமிழ்ச்சங்கமும் தமிழர்களும் வாழ்ந்தார்கள் என்றால் இலங்கையின் தொன்மைக் குடியினர் தமிழர் என்பதில் தவறில்லை.

07. முதலாவது பிரளயம். கி.மு. 14058ம் ஆண்டளவில் ஏற்பட்டது. இதனால் குமரிக் கண்டத்தின் சில பகுதிகள் முற்றாகக் கடலில் மூழ்கின.

08. கி.மு. 14058 - 14004வரை முதல் கடற்கோனை கவனத்தில் கொண்டு முருகவேள் தன் தலைநகரைத் திருச்செந்தூருக்கு மாற்றி அங்கே ஒரு தமிழ்ச் சங்கம் கூட்டினார்.

09. கி.மு. 14004 - 9564 குமரிக் கண்ட வரலாற்றில் ஒரு முக்கியமான காலப்பகுதியாகும். இக் காலத்தில் குமரி ஆற்றுத் தென் மதுரைச் சங்கம் உருவாகியது.

10. கி.மு 9564ம் ஆண்டளவில் மற்றுமொரு பெரும் பிரளயம் ஏற்பட்டது. இதனால் குமரிக் கண்டத்தின் பெரும் பகுதி கடலில் மூழ்கியது.

11. கி.மு. 9564 - 3105ம் ஆண்டு வரை இராட்சகர்களின் ஆட்சி நடைபெற்றது. இவர்கள் இராவணனின் முன்னோர் ஆகும்.

12. கி.மு 7500ம் ஆண்டில் "முதுகுடுமி பெருவழுதி" என்னும் குமரி நாட்டு மன்னன் ராட்சகர்களைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றினான்.

13. கி.மு. 7500 - கி.மு. 6900 இக் காலப்பகுதியில் இந்திரன் தலைமையில் ஒரு பெரிய தமிழ்ச்சங்கம் உருவாக்கப்பட்டது.

14. கி.மு. 6900 - 6805 மீண்டும் இராட்சகர்கள் குமரிக்கண்டம் முழுமையையும் தம் ஆட்சிக்குள் கொண்டு வந்தார்கள்.

15. கி.மு. 6805 - 3105ம் ஆண்டுக் காலப்பகுதியை இடைக்காலத் தமிழ்ச்சங்கப் பகுதி என அழைக்கிறார்கள். இக்காலப் பகுதியில் பழைய தாமிரபரணி ஆற்றோரத்தில் அமைந்த கபாடபுரம் என்னும் நகரம் பெரும் புகழ் பெற்றிருந்தது. இதையாண்ட பாண்டிய மன்னனான முடத்திருமாறன் ஒரு பெரிய தமிழ்ச்சங்கத்தைக் கூட்டினான். கி.மு 3105ல் துவாரகைக் கோமான் தென்னாட்டின் மீது படை எடுத்தான். இக்காலத்தில்தான் பாரதப்போர் நடந்ததாக வரலாறு கூறுகிறது.

16. கி.மு. 3102 இல் இக்காலம் கலியுக ஆரம்பகாலமாகும். சிதம்பரனார் கூறிப்பிட்ட இக்காலம் பேராசிரியர் கே. சிறிநிவாசராகவனால் குறிக்கப்பட்ட காலக்கணிப்புடன் கிட்டத்தட்ட ஒத்துப் போவதை அவதானிக்க முடிகிறது.

17. கி.மு 2387 - 2939ல் மீண்டும் ஒரு பிரளயம் ஏற்பட்டு குமரிக்கண்டத்தில் ஒரு பகுதி கடலில் மூழ்கியது.

18.கி.மு 1915 - 1715ல் திருப்பரங்குன்றத்தில் ஒரு தமிழ்ச்சங்கம் தோன்றியது. இதைத் திருப்பரங்குன்றத்து தென்மதுரைச் சங்கம் என அழைத்தார்கள்.

19. கி.மு 1715ம் ஆண்டில் குமரிக்கண்டத்தில் இறுதிப்பிரளயம் ஏற்பட்டது.

20. கி.மு 1715 - கி.பி 23 வரையுள்ள காலப் பகுதி கடைச்சங்ககால மெனப்படுகின்றது. இவ்வாறு 10க்குமேற்பட்ட தமிழ்ச் சங்கங்கள் மூலம் தமிழ் ஆய்வு செய்யப்பட்டு பல்வேறு அறிஞர் பெருமக்களால் கடைந்தெடுத்த முத்து - முத்தமிழ்.

## வாசகர்களுக்கோர் வேண்டுகோள்

தினக்கதிரில் என்னால் தொடர் கட்டுரையாக எழுதப்பட்ட ''சிங்களவர்களின் பூர்வீகம்'' என்னும் வரலாற்று ஆய்வுக் கட்டுரைகளை நூல் வடிவில் வரலாற்று ஆவணமாக்குமாறு பல அன்பர்களும் நண்பர்களும் என்னினிய வாசகர்களும் வேண்டிக் கொண்டே இருக்கிறார்கள்.

எனவே இது நூலாக வேண்டும். வரலாற்று ஆவணமாக வேண்டும் என எண்ணும் இனிய நெஞ்சங்கள் தங்கள் வசதிக்கேற்ற முறையில் உதவிகளை பின்வரும் முகவரிக்கு அல்லது இலங்கை வங்கி களுவாஞ்சிகுடிக் கிளையில் 9872ம் இலக்க கணக்குக்கு அனுப்பி வைத்தால் வரலாற்று ஆவணம் உருவாகிவிடும்.

*முகவரி*
*பூ.ம.செல்லத்துரை ஜே.பி.*
*பெரியபோரதீவு*

*அன்புடன்*
*பூ.ம.செல்லத்துரை*

இந்தியாவும் ஈழத்தமிழரும்

# ஸ்ரீலங்கா இராணுவத்துடன் கைகோர்த்த 'புளொட்'

துரோகங்களின் அத்தியாயங்கள் - 24

> *"இந்திய இராணுவம் எமது தாயக மண்ணில் காலடியெடுத்து வைத்த தினத்தையே எமது போராட்டத்தின் இருண்ட நாளாக நான் கருதுவேன். எமது போராட்டத்தில் இந்திய இராணுவம் தலையீடு செய்தது, ஒரு இருண்ட அத்தியாயம் என்றே சொல்லவேண்டும்."*
>
> \- தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்

ஈ.பி.ஆர்.எல்.எப்., டெலோ, ஈ.என்.டி.எல்.எப். போன்ற மூன்று அமைப்புக்களும் இணைந்து 'திறீ ஸ்டார்' என்ற பெயரில் ஈழ மண்ணில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்திருந்தது பற்றியும், இந்த அமைப்புக்களுக்கு இந்தியாவின் 'றோ' அமைப்பு பின்பலமாக இருந்தது பற்றியும், கடந்த வாரங்களில் பார்த்திருந்தோம்.

இதேவேளையில், அக்காலப்பகுதியில் 'புளொட்' அமைப்பும் தமிழ் பிரதேசங்களில் அதிக அளவில் ஊடுருவி நிலை கொள்ள ஆரம்பித்திருந்தது. 'புளொட்' அமைப்பின் நடவடிக்கைளும் விடுதலைப் புலிகளுக்கு எதிரானதாகவே அமைந்திருந்தன.

ஆனால் 'புளொட்' அமைப்பின் செயற்பாடுகளின் பின்னணி, மற்றய தமிழ் இயக்கங்களின் பின்னணியில் இருந்து மாறுபட்டுக் காணப்பட்டது. 'புளொட்' அமைப்பின் செயற்பாடுகளுக்குப் பின்னால் இந்திய 'றோ'வின் கைகள் நிச்சயமாக இருக்கவில்லை.

'புளொட்' இற்கு அக்காலத்தில் அனுசரணை வழங்கிக்கொண்டிருந்தது வேறொரு தரப்பு. எவருமே எதிர்பார்க்காத வகையில், 'புளொட்' அமைப்புஸ்ரீலங்காஅரசிடம் அனு சரணைகளைப்பெற்றே அக்கால கட்டத்தில் செயற்பட ஆரம்பித்திருந்தது.

### கையறு நிலையில் 'புளொட்':

புலிகளைப் போலவே 'புளொட்' அமைப்பும் ஆரம்பம் முதலே இந்தியாவின் கைகளுக்குள் சிக்கவில்லை.

இந்தியா வழங்கிய பயிற்சியை 'புளொட்' பெற்றிருந்தாலும், இந்தியாவின் கைக்கூலிகளாக அவர்கள் செயற்படத் தலைப்படவில்லை. அதனால் ஈழத்தில் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே 'புளொட்' அமைப்பு பலவழிகளிலும் இந்தியாவினால் ஓரங்கட்டப்பட்டே வந்தது.

சிறிது காலத்தின் முன்னர், 'புளொட்' அமைப்பு ஈழத்தில் தனது போராட்டத்தை விரைவு படுத்துவதற்கு என்று வெளிநாடொன்றில் இருந்து கொள்வனவு செய்திருந்த பெரும் தொகை ஆயுதங்கள் தமிழ் நாட்டுக் கரையில் வந்திறங்கிய போது, இந்தியா அதனைக் கைப்பற்றியிருந்தது. அதேபோன்று தமிழ் நாட்டில் பலவழிகளிலும் 'புளொட்' அமைப்பிற்கு எதிராக தனது நடவடிக்கைகளை இந்தியா முடுக்கிவிட்டிருந்தது.

அதேவேளை, அளவிற்கதிகமான போராளிகளை உள்வாங்கிவிட்ட நிலையில் அவர்களைப் போஷிக்க முடியாமல் தடுமாறிக்கொண்டிருந்த 'புளொட்' அமைப்பினுள், உள் முரண்பாடுகளும் தலைவிரித்தாட ஆரம்பித்திருந்தன. திறமையான பல போராளிகள் புளொட் அமைப்பினுள் காணப்பட்டிருந்த போதிலும், சரியான வழிநடத்தல்கள் இல்லாத காரணத்தால் புளொட் அமைப்பு சரியானமுறையில் இயங்கமுடியாத ஒரு அமைப்பாகவே மாறி இருந்தது.

உட்படுகொலைகள், தலைமைத்துவ ஊழல்கள், கீழ்மட்டப்போராளிகளிடையேயான வறுமை, கந்தசாமி அணியினர் ஆடிய தாண்டவம் என்பன, 'புளொட்' அமைப்பை பலவழிகளிலும் செயற்படமுடியாத ஒரு அமைப்பாக மாற்றியிருந்தது.


கட்டுப்பாடிழந்த நிலையில் விரக்தியுடன் கூடிய பல போராளிகள் தமிழ் நாட்டில் சமுக விரோத செயற்பாடுகளில் ஈடுபட ஆரம்பித்திருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் புளொட்டிலிருந்த ஒரு முக்கிய தளபதியான பரந்தன் ராஜன் என்பவர் இந்திய 'றோ' அமைப்பினால் உள்வாங்கப்பட்டு, முக்கிய போராளிகள் அடங்கிய ஒரு குழுவுடன் ஈ.என்.டி.எல்.எப்.(Eela National Democratic Liberation Front- ENDLF)என்ற அமைப்பை ஸ்தாபித்துச் சென்றுவிட, எஞ்சிய 'புளொட்' அமைப்பு செயற்பட முடியாத அளவு தனித்து நிற்கவேண்டி இருந்தது.

ஆரம்பம் முதலே புலிகளுக்கு எதிராக 'புளொட்' மிகவும் தீவிரமாக செயற்பட்டுவந்த அமைப்பென்ற காரணத்தினால், புலிகளுடனும் கைகோர்த்துக்கொள்ள முடியாத நிலை 'புளொட்டிற்கு இருந்தது. அத்தோடு, புலிகள் அமைப்பு மீது ஜென்மப் பகை கொண்ட ஒரு அமைப்பாகவே 'புளொட்' அமைப்பும், அதன் தலைமையும் செயற்பட்டு வந்திருந்தது.

'புளொட்' அமைப்பின் இந்த கையறு நிலையை ஸ்ரீலங்கா அரசு நன்றாகப் பயன்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டது.

இந்தியப் படையின் வருகையின் பின்னர், எதுவுமே செய்யமுடியாமல் தடுமாறிக் கொண்டிருந்த 'புளொட்' தலமையை தொடர்பு கொண்ட ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி, 'புளொட்' அமைப்பிற்கு அபயம் அளிப்பதற்கு தாம் விரும்புவதாகத் தெரிவித்தார்.

அப்பொழுது ஈழமண்ணில் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்த புலிகள் மற்றும் இந்தியா- என்ற தமது இரண்டு எதிரிகளையும் மீறி, எவ்வாறு அங்கு மீண்டும் கால்பதிப்பது என்று தடுமாறிக்கொண்டிருந்த 'புளொட்' அமைப்பின் தலைமைக்கு, அத்துலத் முதலியின் அழைப்பு ஒரு பெரிய வரப்பிரசாதமாகவே இருந்தது.



ஸ்ரீலங்கா அரசின் அழைப்பின் பெயரில் 'புளொட்' அமைப்பின் தலைவர் உமா மகேஸ்வரன் கொழும்பிற்கு வந்தார். ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியுடன் பல பேச்சு வார்த்தைகளை நடாத்தினார். இதனைத் தொடர்ந்து, 'புளொட்' அமைப்பு கொழும்பில் பல முகாம்களை அமைக்க ஆரம்பித்தது. பெருமளவு போராளிகள் அந்த முகாம்களில் தங்கவைக்கப்பட்டார்கள். அந்த அமைப்பைச் சேர்ந்த பல முக்கிய உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா படை அதிகாரிகளுடன் இணைந்து செயற்படவும் ஆரம்பித்தார்கள்.

### ஸ்ரீலங்கா இராணுவத்தை திருப்திப்படுத்த புலிகள் மீது பாய்ச்சல்:

வவுனியாவிலும் பல 'புளொட்' முகாம்கள் அமைக்கப்பட்டன. அப்பொழுது வவுனியாவில் தங்கியிருந்த மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, வவுனியாவில் 'புளொட்' அமைப்பு முகாம்களை அமைக்க உதவி புரிந்தார். மாணிக்கதாசன் தலைமையில் வவுனியாவில் புளொட் அமைப்பு காலூன்ற ஆரம்பித்தது.

இதேபோன்று மட்டக்களப்பிலும், 'புளொட்' அமைப்பின் அரசியல்துறைச் செயலாளர் வாசுதேவா மற்றும் படைத்துறைச் செயலாளர் கண்ணன் தலைமையில் அந்த அமைப்பு காலூன்ற ஆரம்பித்திருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவு போராளிகள் 'புளொட்' அமைப்பில் இருந்ததால், அந்தப் போராளிகளின் பெற்றோர், உறவினர்களைச் சந்தித்து தமது அமைப்பிற்கு ஆதவு தேடிக்கொள்ளும் எண்ணத்துடனும், தமது அமைப்பை மீளவும் கட்டியெழுப்பும் நோக்கத்துடனும், செயற்பட ஆரம்பித்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே மன்னாரில் புலிகள் அமைப்பு மீது 'புளொட்' தாக்குதல் ஒன்றை மேற்கொண்டிருந்தது. இந்தத் தாக்குதலில் கில்மன், அர்ச்சுனா, ரஞ்சன் என்ற மூன்று விடுதலைப் புலி உறுப்பினர்கள் வீரச்சாவடைந்தனர். புலிகள் மீது புளொட் உறுப்பினர்கள் காலாகாலமாகக் கொண்டிருந்த பகை உணர்வின் வெளிப்பாடாக இந்த தாக்குதல் இருந்தாலும், தமது புதிய எஜமானர்களாகிய ஸ்ரீலங்காப் படையினரைத் திருப்திப்படுத்துவதற்காகவே 'புளொட்' இந்தத் தாக்குதலை அப்பொழுது மேற் கொண்டிருந்தது.

### புலிகளின் பதிலடி:

தமது உறுப்பினர்கள் மீது 'புளொட்' அமைப்பு மேற்கொண்ட தாக்குதல்கள் பற்றி இந்தியப் படையினரிடம் தமது முறைப்பாட்டை தெரிவித்த புலிகள் சம்பந்தப்பட்வர்களுக்கு



எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரினார்கள். இந்தியப்படை எந்த நடவடிக்கையும் எடுக்க முன்வராத காரணத்தினால், புலிகள் 'புளொட்டிற்கு பதிலடி கொடுக்க தயாரானார்கள்.

மன்னாரில் 'புளொட்' அமைப்பு மீது புலிகள் மேற்கொண்ட பதில் தாக்குதலில் 50 இற்கும் அதிகமான புளொட் உறுப்பினர்கள் கொல்லப்பட்டார்கள்.

மட்டக்களப்பில் பாசிக்குடா கடற்கரைக்கு சென்று திரும்பிக்கொண்டிருந்த சில புளொட்' முக்கியஸ்தர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 34 பேர் கொல்லப்பட்டார்கள். 13.09.1987 அன்று கும்புறுமூலை சந்தியில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் 'புளொட்' அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கொல்லப்பட்டார்கள். 'புளொட்' அமைப்பின் அரசியல் துறைச் செயலாளர் வாசுதேவா, இராணுவத்துறைச் செயல்ாளர் கண்ணன், மட்டக்களப்பு பொறுப்பாளர் சுபாஸ், ஆனந்தன் போன்றவர்கள் உட்பட, இந்தியாவில் இருந்து அப்பொழுதுதான் இலங்கை திரும்பியிருந்த முக்கிய உறுப்பினர்கள் பலரும் கொல்லப்பட்டார்கள்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பில் புலிகளுக்கும் 'புளொட்' அமைப்பிற்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களில், 70 இற்கும் அதிகமான 'புளொட்' உறுப்பினர்கள் கொல்லப்பட்டார்கள் என்று ஊர்ஜிதப் படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. வடக்கு கிழக்கின் பல பகுதிகளிலும், இந்த இரு அமைப்புக்களுக்கும் இடையிலான மோதல்கள் பரவின.

புலிகளுக்கும் 'புளொட்' அமைப்பிற்கும் இடையில் நடைபெற்ற இந்த மோதல்களை இந்தியப்படை வேடிக்கை பார்த்தபடி இருந்தது. இந்தியப்படையினரைப் பொறுத்தவரையில், இந்த இரு அமைப்புக்களுமே அவர்களுக்கு வேண்டப்படாத அமைப்புக்ளாகவே இருந்தன.

*துரோகம் தொடரும்....*

\- நிராஜ் டேவிட் -

# வீரம் விளைநிலத்தில் தமிழின உயிர்க்கொலை நாள் பிரகடனம்.

தமிழின உயிர்க் கொலை நாளாக செப்டெம்பர் 5ம் திகதி மட்டக்களப்பு மக்கள் பெருமன்றத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை காலமும் அநியாயமாகக் கொல்லப்பட்ட புனிதர்களைக் காலங் காலமாக நினைவு கூரும் நினைவுத் தூபிக்கான அடிக்கல் நடும் நிகழ்வும், தமிழின உயிர்க் கொலை நாள் நினைவுக் கூட்டமும், மட்டக்களப்பு மாவட்டமெங்கும் துக்க தினமாகவும் கடந்த 5ம் திகதி நினைவு கூரப்பட்டது. எல்லோரும் அறிந்ததே.

அன்று காலை 6.30 மணிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் தமிழின உயிர்க் கொலை நாள் மணியோசை மூலம் மக்களை விழிப்படையச் செய்ததுடன், அன்று காலை 7.00 மணிக்கு விசேட பூசைகளும் ஆராதனைகளும் நிகழ்ந்தன.

மட்டக்களப்பு புளியந்தீவு ஆனைப்பந்திப் பிள்ளையார் ஆலயத்திலும், கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் நினைவுக் கருத்தரங்குகளும், இறந்தவர்களின் ஆத்மா சாந்திக்காக அர்ச்சனைகளும் விசேடமாக இடம் பெற்றன.

வர்த்தக நிலையங்கள், பொது இடங்கள், காரியாலயங்கள், வாகனங்கள், பாடசாலைகள் அனைத்திலும் கறுப்புக் கொடிகள் பறந்தன. மாணவர்கள், மக்கள் எல்லோரும் கறுப்புப் பட்டி அணிந்து அன்றைய தினத்தில் உயிர்நீத்த உறவுகளை நினைத்தனர். வீதிகளில் தமிழின உயிர்க் கொலைநாள் செப்டெம்பர் 5 என எழுதப்பட்ட பாதாதைகளும் சுவரொட்டிகளும் காணப்பட்டன.

அன்று காலை 10 மணியளவில் பிரதான நிகழ்வானது வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராசசிங்கம் தலைமையில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யன் அவர்களின் தேசியக் கொடியேற்றலுடனும் தனது இரண்டு பிள்ளைகளை இழந்த தாயாரான திருமதி ஆறுமுகம் என்பவரின் பொதுச்சுடர் ஏற்றலுடனும், இரண்டு நிமிட அகவணக்கத்துடனும் அந்த ''தமிழின உயிர்க் கொலைநாள்'' நினைவுகள் ஆரம்பமானது.

தலைமையுரை நிகழ்த்துவதற்கு முன் கொல்லப்பட்ட தமிழர்களின் நினைவுத் தூபிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ''பொங்கு தமிழ்'' பிரகடனத் தூபிக்கு சமீபமாக கடந்த 1990ம் ஆண்டு சிங்களப்படைகளால் தமது மகனையும் உறவினர்களையும் சத்துருக் கொண்டானில் பலி கொடுத்து மயிரிழையில் உயிர்தப்பி இருந்த சண்முகம் இராசநாயகம் எனும் பெரியாரினால் அடிக்கல் நடப்பட்டது. இத்தூபிக்கான முழுச் செலவினையும் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நினைவுத் தூபி அடிக்கல் நடும் நிகழ்வுக்குப் பின் வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த அரங்கில் நினைவுக் கூட்டம் ஆரம்பமானது.

தலைமை உரையின் போதே மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராசசிங்கம் மட்டக்களப்பில் மாற்றான் படைகளால் தமிழ் மக்கள் பட்ட துன்பங்களின் அவலங்களையும், வதைகளையும், கொலைகளையும் விபரித்தார். ஆம் செப்டெம்பர் மாதம் சிங்கள இராணுவத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறத்தாள 344 படு கொலைச் சம்பவங்கள் இடம் பெற்றதாகவும், இதில் 9வயதுச் சிறுவன் தொடக்கம் 56 வயது முதியவர் வரை கொல்லப்பட்டதாகவும், இக்கொலையை நேரடியாகத் தலைமை தாங்கிச் செய்த சிங்களப் படைகளின் கப்டன் முனாஸ், பாலித குணரெட்ண, மேஜர் மஜீத், மேஜர் மோகன் ஆகியோர்களே




இதனைச் செய்தவர்கள் என ஆதாரத்துடன் ஜனாதிபதி ஆணைக்குழு முன் நிரூபிக்கப்பட்டிருந்தும் அவர்களுக்கு எந்தத் தண்டனைகளும் வழங்கப்படவில்லை என்பதை ஆதாரங்களுடன் எடுத்தியம்பினார்.

இன்னும் ஒன்றையும் ஜோசப் பரராசசிங்கம் அங்கு தெரிவித்தார். விசாரணைக் கமிசன் முன் வாதிடுவதற்கு எந்த ஒரு சட்டத்தரணியும் அந்தக் காலத்தில் முன்வரவில்லை. பல சட்டத்தரணிகளிடம் வாதிட வாருங்கள் என்ற போதும் எவரும் பயத்தினால் முன் வரவில்லை. ஆனால் மாமனிதரான குமார் பொன்னம்பலம் மாத்திரமே முன் வந்தார் எனவும் கூறினார்.

நினைவுரை நிகழ்த்திய மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தமிழன் என்ற காரணத்தினால் கொல்லப்பட்டவர்களை நினைவு கூற வேண்டியது தமிழினத்தின் கடமை. இக் கொலைகளை சம்பவங்களாக மட்டும் பார்க்காமல் சரித்திரங்களாகப் பதியப்பட வேண்டும். இவ்வாறான புனிதர்களை வழிபாடு செய்து காலங்காலமாய் ஒவ்வொரு செப்டெம்பர் 5ம் திகதியும் தொடர்ந்து

**பாத்திரன்**

இத்தினம் துக்க தினமாக அனுஷ்டிக்க கிழக்குப் பல்கலைக்கழக சமுகம் முன்வர வேண்டும். இனிமேல் இவ்வாறான கொலைகள் நிச்சயம் இடம் பெறக் கூடாது. அவ்வாறான கொலைகள் இடம் பெறாமல் இருக்கவே எமது பலம் இன்று உயர்ந்துள்ளது எனக் கூறினார்.

மட்டக்களப்பு மக்கள் பெருமன்றத்தினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் அழைப்பு விடுத்திருந்த போதிலும் இந்நிகழ்வில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு, மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜி.கிருஷ்ணபிள்ளை. ஜோசப் பரராசசிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ் சுரேஸ் அணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரே வருகை தந்திருந்தனர்.

செல்வம் அடைக்கலநாதன் தமது உரையின் போது இனியும் இவ்வாறான கொலைகள் இடம்பெறாமல் இருக்க நாம் அனைவரும் ஒரு குடையின் கீழ் ஒன்றுபட்டு எமது பலத்தைக் கூட்டி சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதுடன் கொல்லப்பட்டவர்களின் ஆத்மா சாந்தியடைய வன்னி மாவட்ட மக்கள் சார்பாகவும் பிரார்த்தித்தார்.

ரவிராஜ் தமது உரையின் போது கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்கள் மூன்று விதமான நெருக்குதல்களினால் கொல்லப்பட்டார்கள். முதலாது முஸ்லிம் ஊர்காவற் படையினர், இரண்டாவது சிங்கள இனவாதப் படையினர், மூன்றாவது தமிழ் பிரதேசங்களில் திட்டமிட்டு குடியேறியசிங்கள முஸ்லிம் கும்பல்கள் இவ்வாறான ஆக்கிரமிப்புக்களின் வெளிப்பாடாகவே தான் கிழக்கு மாகாணத்தில் தமிழர் என்ற காரணத்தினால் ஆயிரக்கணக்கான எமதுறவுகள் கொல்லப்பட்டன. இனியும் இவ்வாறான கொலைகள் இடம் பெறாமல் நாம் பலமாயிருக்க வேண்டியது காலத்தின் தேவை எனக் கூறிய ரவிராஜ் பகிரங்கமாக மாற்றுக் கட்சிகளில் உள்ளவர்களுக்கு அழைப்பு விட்டார். ராசிக்குழு , டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி. கட்சி மற்றும் காட்டிக் கொடுக்கும் சகல அமைப்புக்களும் இன்றைய நிலையின் யதார்த்தத்தை உணர்ந்து இனிமேலும் இவ்வாறான காட்டிக் கொடுப்புக்களைக் கைவிட்டு ஒற்றுமையாகத் தமிழ் மக்களின் விடிவுக்காக உழைக்க வாருங்கள் என பகிரங்கமாகவே வேண்டுகோள் விடுத்தார்.

அரியநாயகம் சந்திரநேரு கூறுகையில் எமது ஒற்றுமையின் மூலமாகவேதான் இவ்வாறான கொலைகளைத் தடுக்க முடியும். இனியும் தமிழ் மக்கள் வேறு வேறாகப் பிரிந்து நிற்காமல் விமர்சனங்களைத் தவிர்த்து விடுதலைப்புலிகளின் பின்னால் சென்று எமது உரிமைகளை வென்றெடுப்போம் எனக் கேட்டார்.

ஞா.கிருஸ்ணபிள்ளை தமதுரையில் மட்டக்களப்பு மக்கள் பெருமன்றத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இத்தினமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் அனுஷ்டிக்காமல் தமிழீழத்திலும் தமிழினம் வாழுகின்ற முழு உலகமும் காலப் போக்கில் முக்கிய தினங்களில் ஒன்றாக செப்டெம்பர் 5ம் திகதி தமிழின உயிர்க் கொலை நாளாக அனுஷ்டிக்க வேண்டும் எனக்கூறினார்.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

பகிரங்கமடல்

அலைமகன் எழுதும் பகிரங்கமடல்.

## பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவுக்கு



## ரணில் ஐயா நொண்டிக் குதிரைக்கு சறுக்கின சாட்டு வேண்டாம்.

வடக்குக் கிழக்கில் இப்போது துப்பாக்கி வேட்டொலிகள் எழவில்லை. போர் ஓய்வு நிலையில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என சர்வதேச சமூகம் தமது முகங்களை இலங்கைத்தீவின் பக்கம் திருப்பியிருக்கிற ஒரு காலகட்டம்.

இத்தனைக்கும் இந்த ஸ்ரீலங்காப் பிரதமரின் சமாதான நகர்வுகள் தான் காரணம். அவர் இப்போது வெறும்பிரதமர் மட்டுமல்ல ஆசிய நாயகன் விருதுக்கும் சொந்தக்காரன்.

பாவம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவருக்கு நல்ல விருப்பம். ஆனால் அம்மாவிடந்தான் எல்லா நிறைவேற்று அதிகாரமும். அதனால் ரணில் ஐயாவால் இப்போது எல்லாவற்றையும் தீர்க்க முடியாது.

இவ்வாறு சமூகத்தில் உள்ள ஒரு பிரிவினர் நினைத்து நினைத்துத் திருப்திப்படுகின்றனர். இந்த திருப்தியை அதிருப்தியாக்காது நீங்களும் ஒரு சமாதான நாயகனாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் காட்டி வருகின்றீர்கள்.

ஆனால் எனக்கு மட்டும் உங்களின் இந்த நடிப்புப் பிடிக்கவில்லை. நிறைவேற்று அதிகாரம்தான் உங்கள் கையில் இல்லாவிட்டாலும் ஆட்சி அதிகாரம் இருக்கிறது அல்லவா? அது கூடச் சரியான முறையில் பயன்படுத்தப்பட வில்லை. என்றுதான் கருதுகிறேன்.

வடக்குக் கிழக்கில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் விடுதலைப்புலிகளுக்கு ஸ்ரீலங்கா படைத்தரப்பு மிக அச்சுறுத்தலாக இருக்கிறது.

திருமலை குரங்கு பாஞ்சான் பிரச்சினையை மிகைப்படுத்தி அதில் குளிர்காயப் படை அதிகாரிகள் முயற்சி செய்கின்றனர். வவுனியாவில் தேசியக் கொடி ஏற்றுவதற்கு இந்தப் படைத்தரப்பு தடை விதிக்கிறது.

வன்னி மண் தமிழன் ஆண்ட மண். பண்டார வன்னியன் என்னும் தமிழ் மறவன் அந்நியப்படைகளுக்கு அஞ்சாது ஆண்ட தமிழ் நிலத்தில் தமிழ்த் தேசியக் கொடி ஏற்றுவதற்குத் தடையா? தமிழ் மக்களின் புராதன வரலாற்றுப் பாரம்பரிய மண் திருமலை. இந்தத் திருமலை மண்ணில் பாசறை அமைப்பதற்கு எதிர்ப்பா?

இவ்வாறு தமிழ், உறவுகள் தமது உணர்வுகளை குமுறல்களாக வெளிப்படுத்துகின்ற னர். இந்தப் பிரச்சினைகள் எல்லாம் இந்தப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலையிட்டால் தீர்த்து வைக்க முடியும்.

எனவே எல்லாவற்றிக்கும் சந்திரிக்கா அம்மாதான் முட்டுக்கட்டை போடுகிறார் என்று சொல்லித் தட்டிக்கழிக்காமல் பிரதமர் என்ற அதிகாரத்தைச் சமாதானத்திற்கு எதிராக நிற்கும் சக்திகள் மீது பலமாகப் பாய்ச்ச வேண்டும் எனக் கூறுகிறேன்.

இவ்வாறு பிரயோகித்து வடக்குக் கிழக்கில் அரசியல் பணிகளில் ஈடுபடும் விடுதலைப் புலிகளுக்குப் படைத்தரப்பு விடுக்கும் அச்சுறுத்தல்களைக் களைய வேண்டும். இதுதான் நீங்கள் பிரதமர் என்ற வகையில் செய்ய வேண்டிய முதற்பணி.

அல்லாது விட்டால் சமாதானம் என்பது சாத்தியப்படாத விடயமாகும். இடைக்கால நிர்வாகம் அல்லது வேறு எந்த அரசியல் நடவடிக்கைகளோ அதில் விடுதலைப் புலிகள் பங்கு பற்றுவதாக இருந்தால் படைத்தரப்பின் குறுக்கீடுகள் அழுத்தங்கள் துளி அளவும் இருக்கக் கூடாது.

எனவே சமாதான நாயகன் என்ற சொல் பெயரளவில் மட்டும் சூடிக் கொண்டிருந்தால் போதாது செயல் வடிவமாக்க வேண்டும்.

~அலைமகன்~

# அரிவையர்அலை



## பெண்கள் வீட்டின் கண்கள்



பெண்கள் வீட்டின் கண்கள் என்பதெல்லாம் போய் பெண்கள் நாட்டின் கண்கள் என்னுமளவிற்குச் சிறந்து விளங்குகின்றார்கள். ஆனால் சில பெண்கள் நம்முடைய பாரம்பரிய கலாசாரத்தை மறந்து ஆள்பாதி ஆடை பாதி என்று நவீன கால கலாசாரத்தை உருவாக்கி வருகின்றனர். பெண்மணிகளே! பாரதி புதுமைப் பெண்ணை உருவாக்கியது ஆண்களைப்போல் பெண்களுக்கும் சமவுரிமை இச்சமூகத்தில் கிடைக் கவேண்டுமென்பதற்காகத்தான். இதைப் புரிந்து கொள்ளாமல் ஆள் பாதி ஆடைபாதி எனத் திரிவ தற்கல்ல. நம்முடைய பண்டைக் காலப்பெண்கள் இந்தப் பருவத்தில் இப்படி இப்படித்தான் இருக்க வேண்டும் என்று மட்டும் வகுத்து வைக்கவில்லை. திருமணமான பெண்கள் சமூகத்தில் இப்ப டித்தான் நெற்றியில் குங்குமப் பொட்டு வைத்து, தலைநிறையப் பூவைத்து , காலில் மெட்டி போட்டு, களுத்தில் தாலியுடன், சேலை கட்டி பார்ப்பவர்கள் கையெடுத்துக் கும்பிடுமளவிற்கு வாழ்ந்து காட்டி யிக்கிறார்கள். ஆனால் சில பெண்கள் இதைச் சிறிதும் பின் பற்றாமல் நடப்பது வேதனைக்குரியது.

பெண்மணிகளே பாரதி புதுமைப் பெண்களை உருவாக்கியது வீட்டுக்குள் ஆணாதிக்கத்தின் கீழ் அடைபட்டுக் கிடந்த பெண்களை அடிமைத்தனத்திலிந்து விடுபடச் செய்து ஆண்களை விடப் பெண்கள் சளைத்தவர்கஎல்ல. எனச் சாதித்துக் காட்டுவதற்குத் தான். இப்படிக் கலாசாரத்தை அழிப்பதற்கல்ல. பெண்கள் தான் இப்போ எல்லாவற்றிலும் முதலிடத்தில் இருக்கிறார்கள். இதை நினைக்கும் போது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. ஆனால் தமிழினத்தின் பாரம் பரிய கலாசாரத்தை அழித்து வருபவர்களாகப் பெண்கள் இருக்கக் கூடாது என்று தமிழ் அலையில் தவழ்ந்து வரும் அரிவையர் அலையினூடாகக் கேட்டுக் கொள்கின்றேன். நாளைய தலைமுறைதான் இவ்வுலகத்தின் கண்கள் புரிந்து கொள்ளுங்கள்.

**பு.லதா**

□□□

## கச்சான் அல்வா

தேவையான பொருட்கள். **(25துண்டுகள் செய்வதற்கு)**

| | |
|---|---|
| கச்சான் முத்து | - 1/4 கிலோ கிராம் |
| சீனி | - 1/4 கிலோ கிராம் |
| அப்பச்சோடா | - 2 சிட்டிகை |
| கோதுமைமா | - 2 மே.க (நிரப்பி) |
| மாஜரின் | - 1 தே.க (உருளைக்குப் பூசுவதற்கு) |

***செய்முறை***

கச்சான் முத்தைப் பொன்னிறமாக வறுத்து ஆறிய பின்னர் கசக்கித் தோல் நீக்கிப் பாதி முத்துக்களாக எடுத்து வைத்துக் கொள்க. ஈரமான தட்டையெடுத்து கோதுமை மாவை விசிறிச் சீராகப் பரவி வைத்துக் கொள்க. பின்பு தாச்சியில் சீனியைப் போட்டு அடுப்பில் வைத்து சீனியை இடைவிடாது வறுத்துக் கொண்டிருக்கவும். சீனி முழுவதும் இளகிப் பாவாக வரத் தொடங்கியதும் அதனுள் அப்பச் சோடாவைப் போட்டு நன்கு சேர்த்துக் கொள்க. பின்பு இப்பாகினில் கச்சான் முத்தைச் சிறிது சிறிதாகத் தூவி முழுவதுமாகச் சேர்த்துக் கொண்ட பின் உடனடியாக அடுப்பில் இருந்து இறக்கி மாப்பூசிய தட்டில் கொட்டி ஒரு மாஜரின் பூசிய உருளையினால் நன்கு அழுத்திப் பரவி உடனடியாக ஒரு கூரான கத்தியால் ஒரு அங்குல அளவான துண்டுகளாகக் கீறிக் கொள்க. நன்கு ஆறிய பின்பு துண்டுகளைப் பிரித்தெடுத்துப் பரிமாறலாம்.

**இராசதுரை வாணி**
**இராஜதுரை கிராமம், ஆரையம்பதி ~ 03.**

## தயிரின் மகத்துவம்

*.தயிருடன் அரிசிமாவைக் கலந்து முகத்தில் தடவி பின் 15 அல்லது 20 நிமிடங்கள் கழித்து மிதமான சுடுநீரில் கழுவி விட்டால் முகம் நன்றாகவும் மிருதுவாகவும் இருக்கும்.

*.தலைமுடியை நன்றாகப் பாதுகாக்க சிறந்த மருந்தாக இருக்கிறது தயிர். தயிரை நன்றாகத் தலையில் தடவி சிறித நேரம் கழித்து குளித்து விட்டால் தலைமுடி மிருதுவாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்.

*.சொறி மற்றும் தோல் வியாதிகளுக்கு மோர் ஒரு சிறந்த நோய் தீர்க்கும் மருந்தாகும். தோலின் பாதிக்கப்பட்ட பகுதியில் மோரில் நனைத்த துணி ஒன்றை வைத்து நன்றாகக் கட்டவேண்டும். இப்படிச் செய்து வருவதால் குணமடையும்.

*.மஞ்சள் காமாலை ஏற்பட்டவர்கள் தயிரிலோ அல்லது மோரிலோ சிறிதளவு தேன் கலந்து உட்கொண்டு வர காமாலை நோய் குணமடையும்.

*.தயிரை சரியாக உபயோகித்து வருவதால் அல்லது வந்தால் நாளடைவில், எதிர்ப்புச் சக்தி குறைந்து உடம்பில் பரவும் ஒரு விசத் தன்மையால் ஆரோக்கியம் ஏற்படுவதைக் கூட தடுத்து விடலாம்.

*.தயிர் உணவை ஜீரணிக்க உதவுவதோடு மட்டுமல்ல வயிற்றில் ஏற்படும் வாய்வுத் தொல்லையையும் குணப்படுத்தும்.

*.குடலில் சதை வளரும் ''அப்பண்டிசைடிஸ்'' மற்றும் வயிற்றுப் போக்கு போன்றவற்றிற்குக் காரணமாக இருக்கும் கிருமிகள் தயிர் மோர் இவற்றில் உள்ள லக்டிக் அமிலத்தால் விரட்டியடிக்கப்படும்.

*.தயிரில் உள்ள பக்ரீரியா, தோலை மிருதுவாகவும் பளபளப்பாகவும் மெருகு ஏற்ற அருமையான ஒரு மருந்தாகும். தோடம் பழத்துடனோ அல்லது எலுமிச்சம் பழச்சாற்றுடனோ தயிரைக் கலந்து முகத்தில் தடவினால் முகம் நாளடைவில் பருக்களற்றுப் பளபளப்பாகும்.

**~வாசகி~ மட்டுநகர்~**

## பிராமணனும் புலியும்.



ஒரு காட்டில் ஒரு கிழப்புலி இருந்தது. அதனால் அதற்கு உணவு தேட முடியவில்லை. ஒரு நாள் புலி ஓர் ஏரியில் நீராடி விட்டு கையில் தருப்பைப் புல்லையும் ஓர் தங்கக் காப்பையும் வைத்திருந்தது.

அப்போது அந்த வழியாகப் போய்க் கொண்டிருந்த அந்தணரைக் கண்டு அழைத்து ''இந்தத் தங்கக் காப்பைப் பெற்றுக்கொண்டு போ'' என்று கூறியது.

அந்தணரோ புலியை நோக்கி ''நீ கொடிய பிராணி, உன் சொல்லை நம்பி நான் வர மாட்டேன்'' என்றார்.

ஆனால் புலியோ அந்தணரிடம் ''நான் கிழப்புலி பற்கள் விழுந்து விட்டது. இப்போது நான் பாவம் செய்வதை விட்டு விட்டேன். என் பேச்சை நம்பி என் அருகில் வா!'' என்று அழைத்தது.

அந்தணரும் புலியின் சொல்லை நம்பி ஏரியினுள் இறங்கி நடந்தார். சேற்றில் கால்கள் புதைந்தது. கிழட்டுப் புலி இது தான் சமயம் என்று நினைத்து பிராமணன் மேல் பாய்ந்து அவரைக் கொன்று தன் பசியைத் தீர்த்தது.

'முன் யோசனை இல்லாமல் கண்டவற்றில் ஆசை கொள்ளக் கூடாது''

**பி.கீர்த்தனா**
**தரம் ~05ஏ**
**மட்~அரசடித்தீவு வி.ம.வி.**

## சிறுவர் சிகரம்



### பொது அறிவு

01. உலகில் நீண்ட கழுத்துள்ள பெண் இருக்கும் நாடு எது
**பர்மா**

02. உலக அழகிப்போட்டி ஆரம்பமான ஆண்டு?
**1951ம் ஆண்டு**

03. உலகின் மிகப் பெரிய அஞ்சல் துறை முகம் உள்ள நாடு எது?
**அமெரிக்கா.**

04. உலகின் முதலாவது தேசிய கீதம் எந்த நாட்டில் இயற்றப் பட்டது?
**ஜப்பான்**

05. உலகில் மிக வேகமாக வளரும் மரம் எது?
**யூக்கலிப்டஸ்**

***செ. புவி, அம்பிளாந்துறை***

### பொன் மொழிகள்

* மூளையின் இருண்ட பகுதிகள் பயமும் தீர்மானமின்மையும் தான்.

* உங்களை முன்னேற்றிக் கொள்ள உங்களுடனேயே போட்டியிடுங்கள். அதுதான் அதிக பலன் தரும்.

* வெற்றிகரமாய் வாழ, நீங்களும் பிழைபுரியக் கூடியவர்தான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

* தன்னிடமே தன்னை மறைத்துக் கொள்பவன், கடவுளிடம் தன்னை மறைத்துக் கொள்கிறான்.

* நினைவாற்றலின் துவக்கம் நிகழ்காலமாக இருக்க வேண்டும்.

* காலம் நல்லதை நோக்கி மாறும், நீங்களும் மாறும் போது.

* வ்ழங்க வழங்க பெருகுவது சந்தோஷமும், கல்வியுமே.

* தைரியம் மற்றவர்களோடு பங்கு போடும் போது தான் பலப்படுகிறது.

***பே.சுகுணா, ஊறணி***

### நாடுகளும் தேசிய சின்னங்களும்.

| | |
|---|---|
| 01. பிரான்ஸ் | -அல்லிமலர் |
| 02. அராபியா | -ஒட்டகம் |
| 03. பர்மா | -மயில் |
| 04. ஆபிரிக்கா | -யானை |
| 05. ஜப்பான் | -கூட்டுப்புழு |
| 06. இந்தியா | -சிங்கத்தின் தலை |
| 07. பாகிஸ்தான் | -பிறை |
| 08. தென்ஆபிரிக்கா | -தீக்கோழி |
| 09. ஜேர்மனி | -கான்பூ |
| 10. சீனா | -திராட்சைமலர் |

வி. ரம்மியா
சின்னத்தம்பி வீதி
ஆரையம்பதி :02

### கிளி



பச்சைக் கிளியே
பறந்து வா
பஞ்சு மிட்டாய்
பரிசாய்த் தருவேன்
பறந்து வா
பஞ்ச வர்ணக் கிளியே
பறந்து வா
பழங்கள் பறித்து தந்திடுவேன்

**மதிரூபன் ~ தவஷ்கா**
**முனைக்காடு**

### பிரதான கால நிலை காரணிகளும் அவற்றைப் பதிவு செய்யும் கருவிகளும்

| கால நிலை காரணிகள் | பதிவு.செய்யும் உபகரணம் |
|---|---|
| வளிமண்டல வெப்பநிலை | உயர் இழிவு வெப்பமானி |
| வளியின் ஈரம் | ஈர உலர்குமிழ் வெப்பமானி |
| காற்றின் வேகம் | காற்று வெப்பமானி (அனிலோமீற்றர்) , |
| மழை வீழ்ச்சி | பதிவு செய்யாமழைமானி (பதிவுசெய்யும் மழைமானி) |
| சூரிய ஒளி | சூரிய பிரகாசமானி |
| காற்றின் திசை | காற்றுத்திசை காட்டி |
| ஆவியாதல் | ஆவியாதல் தட்டு |

அ.சுபாஜினி, தரம் 10 மட் – களுதாவளை ம.வி.

## கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம்

# தேரோட்டப் பெருவிழா

சிறப்பு மலர்
14-09-2003

புதிய பழைய ஓடியோ CDக்களைப் பெற்றுக் கொள்ளவும், புதிய பழைய பாடல்களை துல்லியமாக பதிவு செய்யவும்.
**STAR VIDEO & MUSIC CENTRE**
18 பார் வீதி, மட்டக்களப்பு
தொலைபேசி : 065/25939
Adv-0012

மட்டு மா நகரில் மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு மங்காப் புகழ் பெற்ற நகையகம்
**ஆர்த்தி ஜுவலர்ஸ்**
இல. 22,பிரதான வீதி மட்டக்களப்பு.
தொலை பேசி :065-2222305
Adv-0013

உன்னதமான நகைகளை உத்தர வாதத்துடன் பெற்றுக்கொள்ள உங்களுக்கோர் நகையகம் தேவையெனில் பின்னடிக்காது முன்னேறுங்கள் உமையாளை நோக்கி
**உமையாள் நகை மாளிகை**
பிரதான வீதி,பட்டிருப்பு, களுவாஞ்சிகுடி.
Adv-0014

மட்டு மா நகரில் அழகிய வர்ணங்களில் ஓப்செற் பிரிண்டிங் தரமாக செய்து கொள்ள நாடுங்கள்
**ஆதவன் அச்சகம்**
அரசடி, மட்டக்களப்பு.
தொ.பே :- 065-2222076
Adv-0015

அன்றாடத் தேவைக்கான அனைத்துப் பொருட்களுக்கும் இன்றே நாட வேண்டிய இடம்
**குகன் ஸ்ரோர்ஸ்**
இல. 58, கல்முனை வீதி, (அரசடி) மட்டக்களப்பு.
தொலை பேசி : 065-2222185
Adv-0016

சோலையூரில் ஒரு சொர்ணச் சுரங்கம்
தரமான தங்கத்தில் உங்கள் ஆபரணங்களை செய்து கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்

**சஜி ஜுவலரி**
பிரதான வீதி கொக்கட்டிச்சோலை
Adv-0020

இந்து, கிறிஸ்தவ ஆலயங்களுக்குத் தேவையான சகல பொருட்களுக்கும், வீட்டுப் பாவனைக்குரிய எவர்சில்வர், அலுமினியம், பிளாஸ்டிக், மின் உபகரணங்களுக்கும்,மற்றும் ஆடம்பர,அலங்கார அன்பளிப்புப் பொருட்களுக்கும் நாடுங்கள்

**சண் fபன்சி ஹவுஸ்**
163, திருமலை வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி : 065-2223092
Adv-0021


**கௌரி ஜுவலரி**
இல 15,முனை வீதி, மட்டக்களப்பு
தொலைபேசி: 065-2222838
Adv-0017

தரமான தங்க நகைகளுக்கு சிறந்த ஓர் இடம்

**தேவி ஜுவலர்ஸ்**
இல 25,முனைவீதி, மட்டக்களப்பு
தொலைபேசி: 065-2224155
Adv-0018

கிழக்கில் அச்சுக் கலையில் அற்புத பிரகாசிப்பாய் சுடர் விடும்
**கிறேட்ரஸ்ற் வியு அச்சகம்**
மட்டு நகர் வீதி, கல்முனை
T.P 067.2220233
Adv-0019

நவீன மயப்படுத்தப்பட்ட (ஓவ்செற்) இயந்திர சாதனங்களுடன் கொக்கட்டிச்சோலையில் அச்சுக்கலைக்கு ஓர் பிரசித்திபெற்ற இடம்

# நித்தி பதிப்பகம்

பிரதான வீதி கொக்கட்டிச்சோலை தொலைபேசி இல. 065 -226110

## மண்முனை தென்மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

**சேவைகள்:-**

**நுகர்ச்சிப்பகுதி:-** வாடிக்கையாளர்கள் பிரதம களஞ்சியத்தில் மொத்தமாகவும் 10 மாதிரிக்கடைகளில் சில்லறையாகவும் நுகர் பொருட்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**எரிபொருள் பகுதி:-** டீசல், பெற்றோல்,மண்ணெண்ணெய் மற்றும் இதர பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

**கிராமிய வங்கிப் பகுதி:-** தற்போது நடைபெறும் சேமிப்பு, அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கல் போன்ற சேவைகளுடன் எதிர்வரும் 01-10-2003 தொடக்கம் நகை அடகுச்சேவையும் இடம் பெறவுள்ளது.

**பசளை,நாசினிவகைப்பகுதி:-** எதிர்வரும் பெரும்போக நெற்செய்கைக்கு தேவயானஅளவுகளில் பசளை மற்றும் நாசினி வகைகள் அரசடித்தீவு ,கொக்கட்டிச்சோலை ,மாவடிமுன்மாரி ஆகிய இடங்களில் விற்பனை செய்யப்பட இருக்கின்றது.

**வாகனப்பகுதி:-** பாவனையாளர்களின் தேவைக்கு சங்கத்தின் லொறி வாடகைக்கு விடப்படுகின்றது.

**தொலைத்தொடர்புப் பகுதி:-** எதிர்வரும் 01-10-2003 இலிருந்து உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்பு வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

"கூட்டுறவே நாட்டுயர்வு"

ம.தெ.மே.ப.நோ.கூ.ச அரசடித்தீவு , கொக்கட்டிச்சோலை.
Adv-0022

மட்டு நகரில் தரமான பாண், பணிஸ், கேக் சிற்றுண்டி வகைகள், குளிர்பானங்கள் என்பவற்றை வழங்கி வந்த சண் சைன பேக்கரி நிறுவனத்தினர் வாடிக்கையாளரின் நலன் கருதி மதிய இரவு நேரங்களில் எல்லாவகையான.

* பிரைட்றைஸ்
* நூடில்ஸ்
* புரியாணி
* கொத்து ரொட்டி
* மரக்கறி பிரைட்ரைஸ்





**வகைகளை தரமான முறையில் தயாரித்து வழங்குகின்றார்கள்.**

உங்கள் வீட்டு விசேட வைபவங்களுக்குத் தேவையான எல்லா விதமான உணவு வகைகள், சிற்றுண்டி வகைகள், குளிர்பானங்கள் அனைத்தையும் உங்கள் வீடுகளுக்கே விநியோகிக்கின்றார்கள்.

சுத்தமான சுகாதாரமான சூழலில் உணவுப் பண்டங்களை மட்டு நகரில் தயாரிக்கும் ஒரே நிறுவனம்

# சண் சைன் பேக்கரி

136,திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே.இல : 065-2225159.
Adv-0023

# கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம்

# தேரோட்டப் பெருவிழா

சிறப்பு மலர் 14-09-2003

## "தமிழினத்தின் பெருமையைக் கட்டிக்காக்கும் தான்தோன்றீஸ்வரர் ஆலயம்"

-நாளை தேரோட்டப் பெருவிழா-

ஈழமணித்திருநாட்டில் தான்தோன்றீஸ்வரர் ஆலயமாக அதாவது சுயம்லிங்கமாகக் காட்சியளிக்கும் ஆலயங்கள் இரண்டு. ஒன்று கிழக்கு மாகாணத்தில் மீன்பாடும் தேனாட்டின் வீரம் விளைநிலமான படுவான் கரை மண்ணில் கொக்கட்டிச்சோலையிலும், அடுத்தது வடமாகாணத்தில் யாழ்மாவட்டத்தில் ஒட்டிசுட்டானிலும் உள்ளது.

இரண்டு ஆலயங்களும் எமது தாயக மண்ணில் மட்டுமே அமைந்திருப்பது. எமக்குக் கிடைத்த பெருமையாகும். கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயமானது மகோன் மன்னனினால் வகுக்கப்பட்ட தமிழ்த் தேசிய பாரம்பரிய திருப்படை நடைமுறையினை அன்று தொடக்கம் இன்று வரையும் பேணிக்காக்கப்பட்டு வரும் ஆலயமாகும்.


அன்னியனின் ஆக்கிரமிப்பை என்றுமே தடுத்த ஒரு பகுதியாக மட்டக்களப்பு பெருநிலத்தில் படுவான்கரை மண் போர்த்துக்கேயர் அரசின் ஆட்சிக்காலம் தொடக்கம் ஸ்ரீலங்கா அரசின் ஆட்சிக் காலம் வரையும் இருந்து வருகின்றது. இதற்கு ஒரு காரணம் கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் பெருமையும் அருளும் எனப் பல மக்கள் நம்புவதிலும் அர்த்தம் இல்லாமல் இல்லை.

கிழக்கு மாகாணத்தில் போர்த்துகேயர் வருகையினால் பல இந்து ஆலயங்கள் இடித்து அழிக்கப்பட்ட வரலாறு. ஆனால் கொக்கட்டடிச்சோலை ஸ்ரீ தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தைப் போர்த்துக்கேயர் படை முற்றுகையிட்ட போது ஆலயத்தை அழிக்க வந்த அந்தத் தளபதியும் படையினரும் புறமுதுகு காட்டி ஓடவைத்த வரலாற்றுப் பெருமை கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான் தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு மட்டுமே உண்டு.

ஆம் ஆலயத்தை அழிக்க வந்த அந்தப் போர்த்துக்கேயத் 'தளபதி' ஆலயத்தினுள் இருந்த கல்நந்தியைக் கேலி செய்து இந்த மாடு புல் உண்ணுமா? எனச் சிலேடை பண்ணிக் கேட்டான். அப்போது அங்கு பூசைமுடித்துக் கொண்டிருந்த 'குருக்கள்' ஆம் புல்லுண்ணும். இன்று உண்டு விட்டது. இனி நாளை தான் உண்ணும், எனக் கூறினார். அவர் கூறியதற்கும் காரணம் இருந்தது. அவ்வாறு கூறினால் அந்தத் தளபதி திரும்பிப் போய்விடுவான் இனிவரமாட்டான் என்ற நோக்கில் தான் குருக்கள் அப்படிச் சொன்னார்.

ஆனால் அந்தத் தளபதி எச்சரிக்கையுடன் "நாளை வருகிறேன் கல் மாடு புல் தின்னா விட்டால் உன்னையும் சேர்த்து இந்தக் கோயிலில் போட்டு எரிப்பேன்." எனக் கூறிச் சென்றான்.

குருக்களுக்கு உடம்பெல்லாம் நடுங்கியது. நாளை தளபதி வந்தால் கல் நந்தியை எப்படிப் புல் உண்ண வைப்பது என்ற கவலையுடன் உண்ணாமல் உறங்காமல் ஆலயத்தின் முன் அமர்ந்து தவம் செய்தார். 'தான் தோன்றியப்பனே நாளை அந்தப் போர்த்துக்கேயர் படைத் தளபதி வரும் போது எப்படியாவது என்னையும் இந்த ஆலயத்தையும் காப்பாற்றி அருளும் அப்பனே' என வேண்டினார். விடிந்தது அன்று பகல் அந்தத் தளபதியும் அவனின் படைகளும் ஆலயத்தை முற்றுகையிட்டனர். தளபதி குருக்களை அழைத்து 'எங்கே இப்போது புல்லைக் கொடு சாப்பிடுகிறதா? என்று பார்ப்போம். என ஆணவத்துடன் சொன்னான்.'



ஏற்கனவே மஞ்சள் நீரினால் கழுவி வைத்திருந்த அறுகம் புல்லைக் குருக்கள் நந்தியின் வாய்ப்பக்கம் பிடித்த வாறு 'நந்தா எழுந்து சாப்பிடு' என ஆலய மூலவரை நினைத்துக் கூறினார்.

என்ன அதிசயம் கல்லால் செய்யப்பட்ட அந்த நந்தி (மாடு) எழுந்து நின்று அந்தப் புல்லை உண்டு சாணத்தையும் போட்டது.

இதைக் கண்ட அந்த அன்னியப் படைத் தளபதி கண்ணீர் மல்கி வணங்கி அந்தக் குருக்களிடம் மன்னிப்புக் கேட்டதும் மட்டுமின்றி படுவான்கரைப் பகுதியில் இருந்தே முற்றாகத் தமது படைகளுடன் பின்வாங்கிச் சென்றான். இதனால் போர்த்துக்கேயரின் படை எடுப்பினால் அழிக்கப்படாத ஒரேயொரு ஆலயமாக இவ்வாலயம் திகழ்ந்தது.

போர்த்துக்கேயர் படைகளைத் தெய்வ அருளால் புறமுதுகு காட்டி ஓட வைத்த வீரம் விளை நிலமான படுவான்கரை மண்ணில் கடந்த இரு தசாப்தங்களாக இடம் பெற்ற இனப்போரின் போது சிங்களப் படைகள், இந்தியப்படைகள் எல்லாவற்றையும் இந்த மண்ணில் இருந்து விடுதலைப் புலிகளால் பல தடைவை விரட்டப்பட்டே வந்தது. கடந்த போராட்ட காலத்தில் ஆரம்ப காலத்தில் கிழக்கு மாகாணத்தில் தளமாக சகல இயக்கங்களும் தமது பாசறைகளை வழிநடாத்திய பெருமையும் படுவான்கரை மண்ணிற்கு மட்டுமே உண்டு.

இன்று முழுமையாக அன்னிய ஆக்கிரமிப்பு இல்லாத விடுவிக்கப்பட்ட மண்ணாக விளங்கும் படுவான் கரைப் பிரதேசத்தில் கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான் தோன்றீஸ்வரர் ஆலயமானது எமது தாயக மண்ணின் ஆண்டபரம்பரையின் வரலாற்றைப் பேணிக்காத்து அன்றய மன்னர் ஆட்சிக் காலத்தில் எவ்வாறு இவ்வாலய நடைமுறைகள் பின்பற்றப்பட்டதோ அதேநடைமுறைகளை இன்றும் கடைப்பிடித்து எமது வருங்காலச் சந்ததியினருக்குத் தமிழ்த் தேசியத்தை ஆதார பூர்வமாக நிரூபிக்கும் ஆலயமாகவும் இவ்வாலயம் விளங்குகின்றது.

வருடாந்த மகோற்சவம் ஆவணி உத்தர நட்சத்திரத் திதியில் கொடியேற்றப்பட்டு அதற்கு அடுத்த பௌர்ணமி தினத்தின் பின் ஞாயிற்றுக் கிழமையில் வளமையாகத் தேரோட்டம் இடம் பெறுகின்றது. ஞாயிற்றுக் கிழமையை முன்னோர்கள் தேரோடும் தினமாக எடுத்தமைக்கு முக்கிய காரணம், அன்றைய நாள் சூரியனுக்குரிய நாளாகவும், விடுமுறை நாளாக இருப்பதனாலும் ஆகும்.

தேரோட்டம் என்பது தற்போது பல ஆலயங்களில் இரும்பினாலும், மரத்தினாலும் செய்யப்பட்டு சில்லுகள் (டயர்) இலகுவாகப் பொருத்தப்பட்ட ரதம் என்று இத் தேர்களைக் கருத இடமில்லை. பாண்டிய மன்னனினால் இற்றைக்கு 2600 வருடங்களுக்கு முன் மரத்தினால் செய்யப்பட்ட மரச்சில்லுகளை உடைய பெரிய வடம் (கயிறு) கட்டி தனிமணலில் ஆலயத்தைச் சுற்றி விநாயகர்தேர், சித்திரத்தேர் ஆகிய இரண்டு தேர்களும் வலம்வரும் காட்சியானது கிழக்கிலங்கையில் கொக்கட்டிச்சோலையில் மட்டுமே காண முடியும்.

ஏர் ஓடும் மண்ணில் தேரோடும் காட்சியைக் காண ஈழ மணித்திருநாட்டின் பல பாகங்களிலும் இருந்து இலட்சக்கணக்கான 'மக்கள் அரோகரா அரோகரா' என ஆடி அசைந்து அந்த இரண்டு தேர்களும் வலம்வரும் வேளை அனைத்து மக்களும் அருள் வேண்டிப் பிரார்த்திப்பார்கள்.

தற்போது யுத்தம் ஓய்ந்த வேளையில் தேரோட்ட விழாவைக்காண திரள் திரளாக மக்கள் வெள்ளமாய் காட்சியளிப்பதில் தவறில்லை.

-அரிய ரதாட்சன்-

## கொக்கட்டிச்சோலையானே அருள் செய்வாயே

சர்வலோக ஈஸ்வரனே வாருமையா
சண்டைமீண்டும் மூளாமலே பாருமையா
கர்வம்கொண்டு கயரரெமை வதைக்கையிலே
கண்மூடிக் கொண்டுநீயும் இருக்கலாமோ
ஆர்நாங்கள் அடிமைகளா இன்னுமிங்கே
ஆதிநாதனே நீதான்பதில் சொல்லுமையா
சீர்பெருகும் சிறப்பூராம் சோலையூரில் உறையும்
சோதிநாதனே சங்கரனே அருள்செய்வாயே.

சாலவுனை நாம்தொழுதோம் காருமையா
சகலபிணி எலாமகற்றி அருளுமையா
காலமெலாம் நாமிங்கே துடிக்கின்றோமே
காக்கமனம் இன்றிநீயும் இருக்கலாமோ
ஆலமுண்டு தேவர்க்கருள் செய்ததேவே

அப்பாவிகள் எங்களுக்கும் அருள்செய்வாயே
சீலமுறு கொக்கட்டிச்சோலையூரில் வாழும்
செம்பவள ஈஸ்வரனே ரெட்சிப்பாயே.

செகம் காக்கும் காவலனே வாருமையா
செந்நீரில் விழாமலெமைப் பாருமையா
சகவாழ்வே நாட்டிலினி வேண்டுமையா
சண்டையொரு போதுமினி வேண்டாமையா
சுகவாழ்வை சகலருக்கும் தருவாயய்யா
சாந்தி சமாதானம் வர அருள்வாயய்யா

முகமலர வருவே ஈரைக் காத்து வாழும்
முப்புரம் எரித்ததேவே அருள்செய்வாயே
சேட்டைசெய்து உன்தலத்தை அழிக்கவென்று
சீற்றமுடன் வந்த போத்துக்கீசர் தம்மை
ஓட்ட மது காட்டியெங்கள் உயிரைக் காத்த
உன் புகழை உலகமெலாம் அறிவுமையா
ஓட்டம்காட்ட வேண்டுமையா துட்டரையும்
உன்னால்தான் அதுமுடியும் ஐயா வாவா
அட்டவீரச் செயலெல்லாம் புரிந்ததேவே
அனுதினமும் அருள்செய்து ரெட்சிப்பாயே

- வெல்லபதியான் -


நவீன கணணி முறையிலான சகல விதமான அச்சு வேலைகளும் ஜொலிக்கும் வண்ணக்கலவையில், குறைந்த செலவில், குறித்த நேரத்தில் அழகு சொட்டச் சொட்ட அச்சடித்துத்தரப்படும். தொடர்பு கொள்ளவும்.
நியூ கீன் அச்சகம்
73,முனைவீதி, மட்டக்களப்பு
தொலைபேசி-065/2222204
Adv-0002

பெண்களின் அங்கமெல்லாம் மின்னி ஜொலிக்கின்ற தங்க நகைகளை தரமான 22 கரட்டில் பெற்றுக்கொள்ள நம்பிக்கையுடன் நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம
நியூ கணேஷா நகையகம்
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை
Adv-0003

தங்க மகள் மேனியிலே மின்ன லிடும் அபிராவின் தங்க நகைகள் எதிர் காலத்தில் உங்கள் கன்னி மகள் மேனியிலும் மின்ன லிடும் என்பதற்கு உத்தர வாதம் அளிக்கின்றது.
அபிரா நகை மாளிகை
பிரதான வீதி, மார்க்கட்றோட்,
பட்டிருப்பு, களுவாஞ்சிகுடி.
Adv-0004

அழகிய சிறந்த பவுண் தங்க நகைகளுக்கும் நவீன டிசைன்களுக்கும் நம்பிக்கையுடன் விஜயம் செய்யுங்கள்
கே.எம்.எஸ். நகை மாளிகை
பிரதான வீதி, களுவாஞ்சிகுடி
தொலைபேசி : 065-2250015
Adv-0005

சகல விதமான இரும்பு வேலைகளுக்கும், ஓட்டு வேலைகளுக்கும், கிறீல் யன்னல் மற்றும் கதவுகளுக்கும் படுவான்கரைப் பிரதேசத்தில் நாட வேண்டிய ஒரே இடம்
தர்ஷிகா இரும்பகம்
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
Adv-0006

22 கரட் தங்க நகைகளை புதிய வடிவங்களில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
பிரண்யா ஜுவலரி
பிரதான வீதி, பட்டிருப்பு,
களுவாஞ்சிகுடி.
Adv-0007

உங்கள் நகைத்தேவைகள் எதுவாகினும் நம்பிக்கையுடன் நாடுங்கள் 22 கரட் தங்க மற்றும் வெள்ளி நகை வடிவமைப்பில் நிபுணத்துவம் பெற்ற
ரஞ்சனாஸ் நகை மாளிகை
பிரதான வீதி,பட்டிருப்பு,
களுவாஞ்சிகுடி.
Adv-0008


கொடுக்கும் பணத்திற்கு புன்னகை பூக்க வைக்கும் வண்ணம் 22 கரட் தங்க நகைகளை நியாய விலையில் பெற நாடுங்கள்
லக்ஸ்மி நகையகம்
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
Adv-0009

அழகிற் சிறந்த 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
நம்பிக்கை,நாணயம், நேர்மை நிறைந்த
நியூ கணேஷா ஜுவலரி
பிரதான வீதி, பட்டிருப்பு,
களுவாஞ்சிகுடி.
தொலை பேசி: 065-2250119
Adv-0010

பழைய, புதிய வடிவமைப்புக்களில் தங்க நகைகளுக்கு பிரசித்தி பெற்ற ஒரே ஸ்தாபனம்
அருள் சுப்பிரமணியம் நகை மாளிகை
22, யூ.டி.ஏ. கட்டடம்,
லேடி மெனிங் ரைவ்,
மட்டக்களப்பு.
தொலைபேசி : 065-2222682
Adv-0011

# முஸ்லிம்களால் ஆயுதப் போராட்டம் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது

**மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் தமிழ் அலை இதழ் 22க்கு வழங்கிய செவ்வியின் தொடர்ச்சி..**



**கேள்வி : கிழக்கில் முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கென பொலிஸ்படையையும், ஊர்க்காவல்படையையும் உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை முஸ்லிம் அரசியல்வாதிகளால் முன்வைக்கப்பட்டிருக்கிறதே, அது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்:- தனித்துவமான படைகளைச்சேர்ப்பதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. ஏற்கனவே முஸ்லிம் ஊர்க்காவல் படையை ஸ்தாபித்ததன் மூலம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள், படுகொலைகளை தமிழ் மக்கள் இன்னமும் மறந்துவிடவில்லை. எனவே அரசாங்கம் இது சம்பந்தமாகக் கூடிய கவனம் செலுத்த வேண்டும். ஒரு சமூகத்திற்கென படையணிகளைச் சேர்ப்பது தற்போதைய சமாதானச் சூழலில் இனமோதல்களை ஏற்படுத்துகின்ற செயலாகும். தனிப்பட்ட இனங்களுக்கென படையணிகளைச் சேர்ப்பது இனங்களுக்கிடையே மோதல்களையும் விரிசல்களையும் ஏற்படுத்தும்.

**கேள்வி : அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மீண்டும் சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பிக்கும் போது முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்ற வேண்டும் என முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் கோரிக்கை விடுத்திருக்கிறது. இது அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப்பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டையாக அமையாதா?**

பதில்:- முஸ்லிம்கள் தனித்தரப்பாக பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டும் என்பது சமாதான முயற்சிகளைக் குழப்புகின்ற நடவடிக்கைதான். இந்த நாட்டில் இனப்போர் இரு தரப்பிற்கு இடையில்தான் நடைபெற்றது. பிரச்சினையைத் தீர்ப்பதாக இருந்தால் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். அதற்காக இருதரப்பும் யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும். இருதரப்பும் யுத்தநிறுத்தம் மேற்கொண்டதன் காரணமாகத்தான் இன்று பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. யுத்தத்தில் ஈடுபட்ட இருதரப்பும்தான் முதலில் பேசவேண்டும். இதில் பங்கு கேட்பதற்கு இன்னொரு சமூகத்திற்கு அதிகாரமோ, தார்மீக உரிமையோ கிடையாது. ஆனால் முஸ்லிம்களின் அபிலாசைகளும் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் விடுதலைப்புலிகளும் அக்கறையோடு இருக்கிறார்கள். சிங்களவர்களால் தமிழ் மக்கள் பட்ட துன்பங்களை நாங்கள் அறிவோம். அடக்குமுறைக்குள்ளான தமிழ் மக்கள் இன்னொரு சிறுபான்மை இனமான முஸ்லிம் இனத்தை அடக்க முற்பாடுவார்கள் என அஞ்சவேண்டியதில்லை. எனவே தீர்வு வருகின்றபோது முஸ்லிம்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வை வழங்க வேண்டியது அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் உள்ள பொறுப்பாகும்.

**கேள்வி : அரசாங்கம் கொடுத்திருக்கும் நகலை விடுதலைப்புலிகள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள், விடுதலைப்புலிகள் கொடுக்கப்போகும் நகலை அரசாங்கம் அரசியல் அமைப்பிற்கு உட்பட்டதாக இல்லை எனக் கூறி நிராகரித்தால் அடுத்த கட்டம் என்னவாக இருக்கும்?**

பதில்:- அரசாங்கம் சமர்ப்பித்திருப்பது கலந்துரையாடல் , பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு பத்திரம்தான். (Discussion Paper) இதற்கான தங்கள் நிலைப்பாட்டை சமர்ப்பிப்பதற்கான நகலை விடுதலைப்புலிகள் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த பின்னர் அந்த கலந்துரையாடலுக்கான பத்திரத்தை வைத்துக்கொண்டு இருதரப்பும் பேசி முடிவுக்கு வருவார்கள். அரசு நிட்சயமாக அதை நிராகரிக்க முடியாது. அரசு நிராகரிப்பதாக இருந்தால்

**செவ்வி கண்டவர்**
**இரா துரைரத்தினம்**

கலந்துரையாடலுக்கான பத்திரத்தை சமர்ப்பித்திருக்க வேண்டிய தேவை இருந்திருக்காது.

**கேள்வி:~ அரசியல் அமைப்புக்கு உட்பட்டுத்தான் இடைக்கால நிர்வாக சபையோ தீர்வுகளோ இருக்கும் என அமைச்சர் பீரிஸ் உட்பட அரசாங்கத் தரப்பினர் கூறிவருகின்றனர். ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் கீழ் சமஷ்டி ஆட்சிக்கு இடமே இல்லை. இடைக்கால நிர்வாகசபை கூட அரசியல் அமைப்புக்கு உட்பட்டதாக இருக்க முடியாது. தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத அரசியல் அமைப்பைப்பற்றி நாங்கள் அக்கறைப்படப்போவதில்லை என்று விடுதலைப்புலிகள் கூறியிருக்கிறார்கள். இந்த முரண்பாட்டின் மத்தியில் எதிர்கால பேச்சுவார்த்தைகள் அல்லது இடைக்கால நிர்வாக சபை எவ்வாறு அமையும்?**

பதில்:- அந்த முரண்பாட்டில்தான் சட்டநுணுக்கம் இருக்கிறது. அதை எப்படி ஆராய்ந்து நகலைத் தயாரிக்கப்போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால் அரசு அரசியல் அமைப்புக்கு அப்பாலும் சில பிரச்சினைகளைத் தீர்க்க முற்படலாம். இடைக்கால நிர்வாகசபையை அரசியல்அமைப்புக்குப் புறம்பாகவும் செய்ய முடியும். இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் இடைக்கால நிர்வாக சபை அமைப்பதற்கான இடம் இருந்தது,

உதாரணத்திற்கு இந்தியாவின் கிழக்குப் பகுதியான மிசோராவில் நடந்த கிளர்ச்சியை ஒரு முடிவுக்குக் கொண் டுவருவதற்காக இந்தியா தீட்டிய திட்டம் அரசியல் அமைப்புக்கு உட்பட்டதாக அல்லாமல் இடைக்கால நிர்வாகசபை ஒன்றை அமைத்தார்கள். சாதகமாக அமைந்தது என்ன வென்றால் மத்திய அரசிலும், மாநில அரசிலும் காங்கிரஸ் கட்சியே இருந்தது. மாநில அரசியலில் இருந்தவர்கள் விட்டு விலகினார்கள். இடைக்கால நிர்வாகம் கிளர்ச்சியை நடத்திய தலைவர்களிடம் கொடுக்கப்பட்டது.

இடைக்கால நிர்வாகம் கொடுப்பதற்குக் காரணம் என்னவென்றால் நீண்டகாலமாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்த ஒரு கொரில்லா அமைப்பு, அல்லது ஆயுதரீதியில் விடுதலைப்போராட்டத்தை நடத்திய அமைப்பை அரசியலில் உட்படுத்துவதாக இருந்தால் உடனடியாக அவற்றைத் தேர்தல் மூலம் செய்ய முடியாது. அதற்காகத்தான் இந்தியா மிசோரா மாநிலத்தில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்ப டுத்தியது. அது வெற்றியும் அளித்தது. மூன்று ஆண்டுகளின் பின் தேர்தலில் போட்டியிட்டு ஆட்சியைக் கைப்பற்றினார்கள். இங்கு மாத்திரமல்ல, பல நாடுகளில் இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட்டிருக்கிறது.

**கேள்வி:~ போர்நிறுத்த ஒப்பந்தம், பேச்சுவார்த்தை , இடைக்கால நிர்வாகசபை என்ற இன்றைய நிலையில் இந்தியா சில முட்டுக்கட்டைகளைப்போடுவதாகக் குற்றஞ் சாட்டப்படுகிறது. ஆனால் இந்தியா சமாதான முயற்சிகளுக்குத்தான் தடை இல்லை எனக் கூறிவருகிறபோதிலும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்வதில்லை என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இந்நிலையில் இந்தியா என்ன நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

பதில்:- மாகாண ஆட்சி முறையையே இந்த நாட்டில் கொண்டுவந்தது இந்தியாதான். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோது பெரும் பங்கு விடுதலைப்புலிகளுக்குக் கொடுக்க வேண்டும் என இந்தியா குறிப்பிட்டிருந்தது. அந்த நேரச் சூழலிலும் பலமாக இருந்தவர்கள் விடுதலைப்புலிகள்தான். இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, வட கிழக்கு இணைந்த தமிழ் மாகாண சபைய்ய உருவாக்கிய இந்தியா, வடக்குக் கிழக்கை இணைப்பதற்குப் பக்கபலமாக இருந்த இந்தியா எந்தச் சந்தர்ப்பத்திலும் ஈழத்தமிழர்களைக் கைவிடாது என்றுதான் நான் நினைக்கிறேன். தற்போதைய அரசியலில் சில மாற்றங்கள் இருந்தாலும் ஈழத்தமிழர்கள் மீது இந்தியாவுக்கு அக்கறை இருக்கும் என்றுதான் நான் நம்புகிறேன்.

இந்தியா இப்பிராந்தியத்தில் பெரிய சக்தி, அவர்களது அனுசரணையுடன்தான். அவர்களையும் சேர்த்துத்தான் பிரச்சினையைத் தீர்க்கமுடியும். இதை விடுதலைப்புலிகளும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். தம்பி பிரபாகரன் கூட அவருடைய பத்திரிகையாளர் மாநாட்டில் கூட இந்தியாவுடன் சேர்ந்து இயங்குவதைத்தான் விரும்புகிறோம் எனக்கூறியிருந்தார்.

**கேள்வி:~ அண்மையில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயற்பாடுகள் பற்றி விமர்சனங்கள் வந்திருக்கின்றன. அண்மையில் தமிழ்செல்வன் தமிழ்க் கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகளை அழைத்துப் பேசிய போதிலும் தமிழர் விடுதலைக்கூட்டணியை அழைத்துப்பேசவில்லை . இது தொடர்பாக உங்கள் மனஆதங்கம் என்ன? உங்கள் கட்சியின் தலைமையின் நடவடிக்கைதான் இதற்கு காரணம் என்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா?**

பதில் : என்னைப்பொறுத்தவரை தலைமைப்பீடத்தில் ஏற்பட்டிருக்கின்ற பிசகான கொள்கைக்கு மாறான செயற்பாட்டை மாற்றி அமைக்கவேண்டும். விரைவில் பொதுச்சபையைக் கூட்டி இதற்குச் சரியான முடிவு எடுக்கவேண்டும் என செயலாளரைக் கேட்டிருக்கிறேன். பொதுச்சபை முடிவெடுப்பது கஸ்டமாக இருக்கும் எனச் செயலாளர் என்னிடம் தெரிவித்தார். ஆனால் நான் கூறினேன் , பொதுச்சபைதான் தலைவரையும் நியமித்தது, உங்களையும் நியமித்தது, என்னையும் நியமித்தது. பொதுக்கூட்டத்திலோ, மாநாட்டிலோ இந்தத் தெரிவுகள் நடைபெறவில்லை. எனவே பொதுச்சபையைக் கூட்டி சரியான முடிவுகளை எடுக்கவேண்டும் என கூறியிருக்கிறேன். பொதுச்சபை தீர்மானித்தால் தான் பதவியை விட்டு செல்வதற்குத் தயார் எனத் தலைவர் ஆனந்தசங்கரியே கூறியிருக் கிறார். எனவே இதை நடைமுறைப்படுத்த வேண்டும் எனச் செயலாளரை நான் கேட்டிருக்கிறேன்.

**கேள்வி:~ 1977ம் ஆண்டில் தமிழ் மக்கள் மத்தியில் தனிப்பெரும் கட்சியாக தமிழர் விடுதலைக்கூட்டணி திகழ்ந்தது. ஆனால் இன்று தமிழர் விடுதலைக்கூட்டணியைப் பின்தள்ளுவதற்குச் சில சக்திகள் முயற்சிப்பதாகவும், குறிப்பாக தமிழ் தேசியக்கூட்டமைப்பில்உள்ள தமிழ்க் கட்சிகள் மீது கட்சித்தலைவர் ஆனந்தசங்கரி குற்றம் சாட்டியிருக்கிறார். அவ்வாறு ஏதாவது சக்திகள் இயங்குவதாக நீங்கள் கருதுகிறீர்களா?**

பதில்:- தமிழர் விடுதலைக்கூட்டணிக்குள் பிரச்சினையை ஏற்படுத்த எந்த ஒரு தீயசக்திகளும் பின்னணியில் இருப்பதாக நான் கருதவில்லை. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளைக் குறைகூறுவது தவறு.

தலைவரின் செயற்பாடுகள், அறிக்கைகள் மூலம் தான் கட்சிக்குப் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. அது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். ஆனால் தலைவர் கூறியதற்காகத் தமிழர் விடுதலைக்கூட்டணியின் கருத்து என்று ஏற்றுக்கொள்ள முடியாது. அது அவரின் தனிப்பட்ட கருத்து, தற்போதைய அரசியல் நீரோட்டத்திற்கு ஏற்ப கட்சியின் கொள்கைகளையும் செயற்படுத்த வேண்டும். அவ்வாறு மாற்றிஅமைப்பதாக இருந்தால் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படுத்துவது தவிர்க்கமுடியாததாகும். அதைச் செய்வதற்குத் தற்போது பொதுச்சபையில் உள்ள உறுப்பினர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

**கேள்வி: தீமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகளை முன்னுக்குக் கொண்டுவருவதற்கு விடுதலைப்புலிகள் முயற்சிக்கிறார்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியை ஓரங்கட்ட நினைக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டும் எழுந்திருக்கிறது. இது பற்றி நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

பதில்:- விடுதலைப்புலிகள் தமிழர் விடுதலைக்கூட்டணியை ஓரங்கட்டுகிறார்கள் என நான் நினைக்கவில்லை. எப்படியாவது தமிழர் விடுதலைக்கூட்டணியை நல்லவழிக்குக் கொண்டுவரவேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் அவர்கள் இருக்கிறார்கள்.

**கேள்வி:~ தமிழ்செல்வன் கூட்டணியை வன்னிக்கு அழைத்துப் பேசவில்லை என்பதைப்பற்றி கூட்டணித்தலைவர்கள் கவலை கொண்டிருக்கிறார்களா? அவ்விடயத்தை அக்கறையோடு பார்க்கிறார்களா? அல்லது விடுதலைப்புலிகளை அழைத்துப் பேசவில்லை என்பது ஒரு பெரிய விடயமல்ல என நினைக்கிறார்களா?**

பதில்- அக்கறையோடு இருக்கிறார்கள். அதைச் செயற்படுத்துவதற்குத்தான் காலஅவகாசம் தேவைப்படுகிறது. விரைவில் அது செயற்படுத்தப்படும் என்பது எனது நம்பிக்கை.

**கேள்வி: தமிழர் விடுதலைக்கூட்டணி 1976ம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டிற்குப்பின் பொதுக்கூட்டத்தைக் கூட்டவில்லை. மீண்டும் மாநாட்டைக் கூட்டித்தான் தலைவர் செயலாளர் உட்பட பொதுச்சபையைத் தெரிவு செய்யவேண்டும் என்ற விதிக்குப் புறம்பாக பொதுச்சபையே தலைவர் உட்பட பொதுச்சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்கிறது. இது சட்டத்திற்கு முரணானது அல்லவா? நீங்கள் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் என்ற ரீதியில் மாநாட்டைக் கூட்டுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா?**

பதில்:- பலர் இந்தக் கருத்தைக் கூறிவருகிறார்கள். மீண்டும் ஒருமாநாடு கூட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருக்கிறது. மாநாட்டைக் கூட்டுவதாக இருந்தால் கிராமக்கிளைகள், வட்டக்கிளைகள், மாவட்டக் கிளைகள் அமைக்கப்பட வேண்டும். அதற்குப் பாரிய காலம் எடுக்கும். அதற்கு இப்போது சூழலும் இல்லை. எனவே பொதுச்சபையைக் கூட்டி முடிவெடுப்பதுதான் இப்போது இருக்கும் சூழலில் பொருத்தமாக இருக்கும்.

(முற்றும்)

## இவ்வாரச் சிறுகதை

# காமாட்சி கல்யாணம்!

**யாழ்தாசன்**

கரியபவளம் நிறத்தில் இருக்கும் தேகத்தில் நச்சென அழுத்திச் சாத்திய பட்டைத் திருநீறு, கழுத்தில் உருத்திராட்சமாலை. சொண்டை எந்தப் பக்கம் நெளித்தாலும் சிவசிவா என்று கொட்டுப்படும் சிவ நாமகரணம்.... ஓய்வு பெற்ற போஸ்ற் மாஸ்டரின் தோற்றம் இப்படிப் போகும்....



அம்பாள் தோத்திரப் பாமாலை, பஞ்சபுராணம் போன்றவற்றை முறைப்படி ஓதி, சடாரெனத் தேங்காயை அடித்துப் பிளந்தாரென்றால் எங்கும் பக்தி மணம் கமழும். இதுவரை அவர் அடைந்த வாழ்வின் சிறப்பெல்லாம் காமாட்சியம்மனின் கருணையால் வந்ததென்று அடிக்கடி புகழ்ந்து கொள்வார்.

இவ்வளவு அழுகி ஒழுகிய பழமாக இருந்தும் போஸ்ற் மாஸ்டரின் பிள்ளைகள் எல்லாமே கோணங்கிகளானது ஏனென்று தெரியாமல் தடுமாறுவோர் பலர். மூத்தவள் மூளாயில் முடித்தாள். அடுத்த இரண்டு பெடியளும் முடிச்சு வைக்க முந்தியே முடிச்சு, விட்டு முடிச்சு... கடைசியில் அவர்கள் வாழ்வே முடிச்சுக்களாகப் போய்விட்டன.

கடைசி மகன் காந்தர்வசேனாதிபதி மட்டும் கட்டாமல் இருந்தான். அந்தப் பிள்ளைகள் ஒரு நல்ல வாழ்க்கை அமைய வேண்டுமென அவர் காலையிலேயே சூரிய நமஸ்காரம் செய்து வருவது வழமை.

''போஸ்ட் மாஸ்டரையா! போஸ் மாஸ்டரைய்யா!''

''ஆரது?''

''நான் நல்லதம்பி... பொம்பிளை வீட்டுக்காரர் கையோடை கூட்டி வரட்டாம்...''

''எட... தாலியக்கட்டு.. இண்டைக்குக் கலியாண வீடெல்லே? பிள்ளையளா பூசைக்கு வரச் சொன்னதுகள் அயத்துப் போனன்... நீ போ நல்லதம்பி.. நான் பின்னாலை வாறன்...''

''அப்ப நான் மாப்பிளை வீட்டை போய் அதுகளோட வாறனே...'' நல்லதம்பி மாப்பிளை வீட்டுப் பக்கம் புறப்பட்டான்.

''கலியாணமும் கொள்ளி வைப்பும்...'' மனதிற்குள் திட்டினார். உமிக்கரியை கையில் எடுத்து, பல்வரிசையை கிழக்கும் மேற்குமாக இழுத்தார். களகளவென வாயை அலசித் துப்பிவிட்டு, தண்ணியை இறைத்து தேகத்தில் ஊற்றினார். நடுங்கும் தேகத்துடன் கொடகொடவென அவசரமாகப் புறப்பட்டார்.

''மலடா மலை! அண்ணாமலை... முகத்தில் அடித்தது போல திடீரெனச் சத்தம் கேட்டதும் பயந்துவிட்டார். எதிரே காந்தர்வசேனாதிபதி கோவணத்தோடு நின்று கொண்டிருந்தார்.

''ஊசி மூஞ்சி மூடா! இதென்னடா கோலம்?''

''காமாச்சியை எனக்கும் தெரியும்! நானும் கலியாண வீட்டுக்கு வரட்டே?''

''என்ன கோவணத்தோடையே? வேட்டியைக் கட்டிக் கொண்டு வா!'' மத்தியானச் சாப்பாடு மிச்சமென மனதிற்குள் நினைத்துக் கொண்டார்.

மிதிவண்டியில் அவனையும் ஏற்றிக் கொண்டு போகும்போது நினைவுகள் கவலையுடன் சுழலுவது தெரிந்தது. முப்பது வயதாகியும் இப்பிடியொரு பிள்ளை. முருங்கை மரத்தால் விழுந்ததிலை இருந்து ஒரு மா:றாட்டம்... கீலாப்போக்கு... வலி... வீணம்..

போஸ்ற்மாஸ்டர் போய்ச்சேர கலியாண வீடு மெல்லக் களைகட்டிவிட்டது. மட்டுக்குள் கைக்கடக்கமாகத் தெரிந்த பத்துப் பதினைந்து பேருக்குச் சொல்லி ஒரு கல்யாணம். இனி மாப்பிளை வீட்டுக்காரர் வந்தால் சரி, எண்ணிப் பத்துப்பேர் இருந்தார்கள். மாப்பிளை, பொம்பிளை இருக்க பாய் விரித்திருந்தார்கள்.

காமாட்சியைச் சோடித்து அந்தப் பாயில் இருத்தி வைத்திருந்தார்கள். அவள் போஸ்ற் மாஸ்டரைப் பார்த்து நாணப்பட்டுக் கொண்டாள். முகூர்த்தம் நெருங்கிக் கொண்டிருந்தது. தேங்காயைக் கழுவி,வத்திக்குச்சை கொழுத்தினார்.. வத்திக்குச்சைக் கொழுத்தும் போதே யாருக்காவது வத்தி வைக்க வேண்டும் போல மனதில் ஒருவித துடிப்பு. மனதை அடக்கி பழம், பாக்கு, வெற்றிலையை பிள்ளையார் படத்தின் முன்பாகப் பரவினார்.

புதிதாக வந்த துர்க்கையம்மன் பாடலை ஒரு இழுவை இழுத்தெறியக் கூடியவாறு குரலை வாகுபடுத்திக் கொண்டார்.

''காமாச்சி பாவம் கஸ்டப்பட்ட பெட்டை, அவளுக்குப் பின்னாலையும் நாலும் பெட்டைக் குட்டியள்..ம்... தகப்பன் ஐயாமுத்து கட்டு வேலைக்குப் போய் இதுகளை எப்பிடிக் கரைசேர்க்கிறது..'' மனதில் நினைத்தார்.

மாப்பிளை கதிரேசு இப்ப சுந்தரம் மேத்திரியோடை முட்டாள் வேலை பார்க்கிறான். கலியாணத்துக்குப் பிறகு மேசனா வரப்போறானெண்டு ஐயாமுத்து கூறினார்.

கதிரேசுவை போஸ்ட் மாஸ்டருக்கும் தெரியும். காத்தான் கூத்தெண்டால் மாப்பிளைப் பெடியன் வலுதிறமாகப் பாடுவான். கள்ளுக் கொட்டிலிலை அவனுடைய குரலைக் கேட்டு போஸ்ற் மாஸ்டர் மகிழ்ந்திருக்கிறார். முகூர்த்தம் நெருங்கியது...

''மாப்பிளை எங்கே..?'' ஐயாமுத்து வேலியால் தலையை நீட்டி வீதியைப் பார்த்தார் எங்கோ தூரத்தே, கட்டுக்கட்டாக பட்டாசு வெடிகள் கொழுத்தும் சத்தம்.

''என்னடி பிள்ளை வெடிச் சத்தம்?'' போஸ்ற் மாஸ்டர் வினவினார்.

''தெரியேல்லை!'' காமாட்சியின் தாய் சின்னப்பிள்ளையின் முகத்தில் கலவரம்.

''மாப்பிள்ளை வீட்டுக்கு ஒரு ஆளை அனுப்புங்கோ... பூத்தவளே புவனம் முழுவதும் காத்தவளே!'' குரலை பாடலுக்காக வசப்படுத்தினார். அகிலமே ஆடுவதுபோலப் பிரமை. அவர் தான் ஆடினாரா அல்லது அகிலம் தான் ஆடியதா அவருக்குத் தெரியவில்லை. படபடவெனச் சத்தம், நல்லதம்பி ஓடி வந்து படலையைத் தட்டினான் திடுக்கிட்டு விட்டார்.

''என்ன... என்ன... முருகேசு?'' எல்லார் முகங்களிலும் மெல்லிய கலவரம்.

''நான் மாப்பிளை வீட்டிலை இருந்து வாறன்! மாப்பிளை வர மாட்டார்.''

''ஏன்?''

''வெடிச்சத்தம் கேட்டனீங்கள் தானே? மாப்பிளைக்கு வேற ஒரு இடத்திலை கலியாணம் முடிஞ்சுது.. சீதனம் கொஞ்சம் கூடவாம்.''

''ஐயோ...!!!!

கல்யாண வீடு ஒரு நிமிடத்தில் செத்தவீடாக மாறியது.

காமாட்சி அழ, ஐயாமுத்து சாகப்போவதாக கிணற்றடிக்கு ஓட.... ஒரே அமளிதுமளியாய்ப்போய்விட்டது.

''மூதேவி சண்டாளி! மூளி அலங்காரி! அப்பவே சாத்திரி சொன்னவன்...., தாயர் அல்லிக்கண்டு காமாட்சியின் தலைமயிரைக் கோலிப் பிடித்து முருங்கை மரத்தில் இடித்தாள்.

''சாவடி! சாவடி! செத்துத் துலை யடி! இனி உன்னை ஆரடி கட்டப் போறான்.... நாலு பெட்டையளைப் பெத்தன் எல்லாம் நாசமாய்ப் போச்சுதே?'' ஓங்கி ஓங்கி அவளை அடித்தாள்.

''ஐயோ கடவுளே! எனக் கேன் இந்தச்சோதினை? நான் ஆருக்கு என்ன பாவம் செய்தனான்? காமாட்சி தலையைத் தலையை அடித்து அழுதாள்'' பூமாலை சிதறியது.

''நிப்பாட்டுங்கோ! பூத்தவளோ பூவனம் முழுதும் காத்தவளே!'' போஸ்ற் மாஸ்டர் அம்பாள் பாடலை ஆக்ரோசமாகப் பாடினார். தேங்காயை நிலத்தில் எறிந்து உடைத்தார். அவருக்கு தேகமெல்லாம் நடு நடுங்கியது.

''காமாட்ச்சி என்றால் யார்?'' பலத் துச் சத்தமிட்டார். காமாட்சி யார்? பதில் தெரியாது எல்லோரும் அவரையே பார்த்தபடி நின்றனர்.

''அவள்தான் என்னை வாழ வைச்ச அம்மன். அவள் கண்ணீர் விட நான் அனுமதிக்க மாட்டன். இப்பவே இந்த முகூர்த்தத்திலேயே காமாட்சி அம்மன் கல்யாணம் நடக்க வேணும். டே! காந்தர்வசேனாதிபதி!'' மகனைக் கூப்பிட்டார் அவன் மாந்தி மாந்தி அருகில் வந்தான்.

ஒருபிடி திருநீறை அள்ளி அவன் மீது வீசினார். இதுதான் மகேந்திரப் பொருத்தம்! சரியான முகூர்த்தமும் இதுதான். ஒரு மஞ்சள் துண்டு எடுத்து வாருங்கோ . யாரோ கொண்டுவர, அதை ஒரு நூலில் முடிந்தார். பஞ்சபுராணத்தைப் பாடி மீண்டும் ஒரு தேங்காயைக் கொத்தி உடைத்தார். காந்தர்வசேனாதிபதி கட்டடா தாலியை!, மஞ்சள் கயிற்றைக் கொடுத்தார்.

''ஐயா என்ரை மானத்தைக் காத்த தெய்வமே!'' ஐயாமுத்து தடாலென போஸ்ற் மாஸ்டரின் காலில் விழுந்தார்.

''ஐயாமுத்து அழாதை இனி நீயும் நானும் சம்மந்தியள்!'' அவரைத் தூக்கி எழுப்பினார். காந்தர்வசேனாதிப்தி, காமாட்சி கல்யாணம் இனிது முடிந்தது. காமாட்சி யோசித்துப் பார்க்க முன்னரே தா்லி அவள் கழுத்தில் ஏறியது.

போஸ்ற் மாஸ்டரின் கவலை தீர்ந்தது. மனதிற்குள் காமாட்சி அம்மன் அருளை மெச்சியபடி மணமக்களுக்கு அரிசி அள்ளிப் போட்டு வாழ்த்தினார்.

அவர் போடும் அரிசி தன் வாழ்வின் முடிவுக்குப் போடப்படும் வாய்க்கரிசி என்று தெரியாத காமாட்சி கண்களில் நீர் மல்க அவரைக் கையெடுத்துக் கும்பிடுகிறாள்.

□□□

### நகைச்சுவைத் துணுக்கு

''அம்மா, தீபாவெளி என்றால் என்ன?''

''கோழி வெட்டி, சாராயம் குடித்து, அப்பா கூத்தாடும் திருநாள்!''

– அமிர்தகழியான் –

விறுவிறுப்பான தொடர் நாவல்

# என் கணவன்




# எனக்கு மட்டும் தான்

நடந்த - நடக்கிற சம்பவங்களை யெல்லாம் எண்ணிப் பார்த்தபோது சுகுமாருக்குத் தலை இடித்து வந்தது. அப்படியே மோட்டு வளையைப் பார்த்தபடி மல்லாக்கப் படுத்துக் கிடந்தான். சிந்தனைகள் அவன் நெஞ்சில் அலைபாயத் தொடங்கின.

எவ்வளவு அன்போடும், பாசத்தோடும் அவளை நான் நேசித்தேன்! அவளுக்குக் கைநீட்டி ஒரு அடிகூட அடித்திருக்க மாட்டேனே! ஏதோ ஆத்திரத்தில் முன்பின் யோசிக்காமல் வடுச் சொல்லி விட்டேன் என்பதற்காகத் திடீரெனக் கோபித்துக் கொண்டு போய்விட்டாளே! என்மீதுதான் எல்லாப் பிழையும்! தீயினால் சுட்டிருந்தால் சில வேளை அவள் தாங்கியிருப்பாள். நாவினால் சுட்டபுண் ஆற எவ்வளவு காலம் எடுக்கப் போகிறதோ!

அவள் பிழை செய்திருந்தால் நான் இன்னொருத்தியோடு நெருங்கிப் பழகுவதாக யார்தான் கட்டிவைத்துக் கதைத்தாலும் நமக்கென்ன நானும் அப்படி! அவரும் நடந்தால்தான் என்ன என்று போசாமல் விட்டிருப்பாள்.

எப்போதோ ஒருநாள் பரிமளத்திடம் குடித்துக் கொண்டிருந்தபோது ஒருத்தர் சொன்னார். நம்மள விட்டுப்போட்டு ஓடிப் போன வள மறக்கிறத்துக்கு ஒரேயொரு வழி நாம இன்னொருத்தியச் சேத்துக் கொள்ள வேணு மெண்டு.

இதநினைச்சித்தானே நான் பரிமளத்திட்டப் போய் வந்தன். அவளப் பாத்து பேசிறதில ஒருவித சுகம் இல்லாமலில்ல. அந்த நேரமெல்லாம் நான் பூங்கோதைய மறந்துதானே இருந்தன்!

இன்னும் பரிமளத்தோட மனம் விட்டு என்ர நெஞ்சில இருக்கிற ஆசையச் சொல்லல்ல. அதை வெளிப்படையாகக் கேட்கிறதுக்கும் துணிவு வருகுதில்ல! சிலவேள அவள் மறுதலிச்சி ஏதாவது சொல்லித்தாளென்றால் பிறகு அத மறக்க இன்னொருத்தியையா தேடுற? சேச்சேச்சே எதுவும் நடக்காமலேயே என்னையும், பரிமளத்தையும் பற்றி ஆரோ பூங்கோதையிட்டச் சொல்லியிருக்கிறாங்க! நாளைக்கு ஊரெல்லாம் இந்தக்கத பரவிச் சென்றால்;;;;; அல்லது இவள் பூங்கோத நேரடியாகவே அங்க பரிமளத்திட்டப்போய்க் கேட்டுவிட்டால்;;;; பூங்கோதை ஆத்திரக்காரி! புத்தியில்லாதவள்!;; இப்படிச் சிந்தித்த சுகுமார் சட்டென எழுந்து வந்து இந்திராவிடம் கேட்டான்.

"மகள், கொம்மா வரக்குள்ள கழுத்தில தாலிக் கொடி கிடந்ததா?"

"ஓமப்பா"

"நெத்தியில என்ன பொட்டு வச்சிருந்தாள்?"

"குங்குமப் பொட்டுத்தான் வச்சிருந்தாவு. ஏனப்பா?"

"இல்ல சும்மா கேட்டனான்"என்று சொல்லிவிட்டு, மீண்டும் போய்க் கட்டிலில் படுத்துக் கொண்டான்.

மீண்டும் எண்ண அலைகள் எழுந்தன.

சுதன் நாளைக்குத் தொழிலுக்குப் போய்விடுவான்! வீட்டில் இந்திரா மாத்திரம். குமர்ப்பிள்ள. பாதுகாப்புக்காவது தாய் பக்கத்தில் இருக்க வேண்டாமா?

எந்தச் சாத்திரியிடம் போய்க் கையைக் காட்டினாலும், பிறந்த தெரிப்பைக் கொடுத்தாலும் எங்கள் எல்லோருக்குமே ஏழரைச்சனி என்கிறார்கள். அடிக்கடி கிரகங்களெல்லாம் மாறுகின்றன. ஆனால் ஏழரைச் சனி மாத்திரம் எங்கள் வீட்டைத்தானே பார்த்துக் கொண்டிருக்கு.

சனியைப்போல கொடுப்பாருமில்லை எடுப்பாருமில்லை என்கிறார்கள். ஆனால் உயிரை எடுக்கிறேன் பார் என்று நிற்கும் சனி தொலைந்து போகத்தான் வழியைக் காணோம்.

சனியும், வியாழனும்! நாம சரியாக இருந்தால் எந்தக் கிரகமும் நம்மை எதுவும் செய்துவிட முடியாது.

ரோசத்தைப் பார்க்காமல், வெட்கத்தைப் பராமல் எப்படியாவது லீவைப் போட்டுக் கொண்டு மூத்தவன் முரளிட்டப் போகவேண்டியதுதான்.

கடைசிச் சாண்ஸ்! இதற்கும் ஓம்பட்டுப் பூங்கோதை மனம் திருத்தி வரல்லையென்றால்....'டிவோஸ்' பண்ணு வதைத் தவிர வேறு வழியில்லை. இந்திராவும் இன்னும் சில மாதங்களில் யூனிவசிற் றிற்குப் போய் விடுவாள்.

இங்கே வீட்டில் பிரச்சினை என்றால் அவள் நம்மதியாகவிருந்து எப்படிப் படிக்கமுடியும்? பூங்கோதை கொஞ்சமாவது இதைப் பற்றி யெல்லாம் சிந்தித்தாளா? அப்படிச் சிந்தித்திருந்தால் இன்னும் மூத்த மகன் வீட்டில் கிடப்பாளா?

அவள் என்னோடு வெறுப்பாக இருந்தால் என்னோடு வாழச் சம்மதம் இல்லையென்றால் தாலிக் கொடியை அணிந்திருப்பாளா? நெற்றியில் குங்குமத்திலகம் வச்சிருப்பாளா? நான் எங்கே போகிறேன் வருகிறேன் என்பதையெல்லாம் நோட்டம் பண்ணிக் கொண்டிருப்பாளா?

அவளில் உள்ள பெரிய தவறு மனம் விட்டு என்னோடு பேசாததுதான். கேள்விக்குப் பதில் சொல்வாள். மற்றப்படி புதிதாக அவளாகவே எந்தக் கதையும் பேச மாட்டாள். ஏதாவது வீட்டில் பிரச்சினை வந்து விட்டால் மளமளவெனப் பொரிந்து தள்ளு வாள்! அப்போது அவள் கேட்கும் கேள்விகளும், சொல்லும், பழமொழிகளும் வியப்பை உண்டுபண்ணும். இவளா பேசாத மடந்தை இவளுக்குள்ளே இத்தனை ஞானமா என்று ஆச்சரியப்படவைக்கும்.

பாவம் இந்திரா! இளைய பிள்ளை அவளும் தாயோடு போயிருந்தால் தேநீர் குடிப்பதற்கும் நான் தவிக்க வேண்டித்தான் வந்திருக்கும்.

சரி இந்தப் பிரச்சினைக்கு நான் பொறுப்பாக இருக்கக் கூடாது. பிள்ளைகளின் நன்மைக்காகவாவது நானேதான் சரணா கதியடைய வேண்டும்."

இவ்வாறெல்லாம் சிந்தித்தபடி கட்டிலில் படுத்துக் கிடந்த சுகுமார் அவனையுமறியாமல் தூங்கிப் போனான்.

இந்திரா இரவுச் சாப்பாட்டிற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தாள். அப்பா வாங்கிவந்த மரையிறச்சி வத்தல் நினைவுக்கு வந்தது.

பிட்டவித்து, ஒரு சம்பல் போடலாம் என்று எண்ணியபடி மாவை எடுத்து வர சின்ன வீட்டுக்குள் சென்றபோது அங்கே சுதன் கேக் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"இஞ்சபார் கள்ளன! டேய் எல்லாத்தையும் திண்டு போட்டயா? எங்கடா என்ட பங்கு?"

"இந்தா உன்ர பங்கு இருக்கு! நீ எனக்குத் தராமக் கொண்டுவந்து ஒளிச்சி வச்சதுக்கு முழுவதையும் நான் திண்டிருக்க வேணும். என்ன செய்யிற பாவமாக் கிடக்கு. இந்தா புடி உன்ர பங்கு." என்று நீட்டினான் சுதன்.

" நான் அப்பவே எடுத்து வெட்டவேணுமெண்டு நினச்சனான். அதுக் குள்ள மறந்து போனன். இஞ்சபார். ஒரே யொரு சின்னத்துண்டுதான் எனக்கிருக்கு! அப்பாக்கு இல்லையாடா?"

"அவர் இதெல்லாம் சாப்பிட மாட்டார்."

"இவனொரு பேய்! பிசாசி!"

"ஆர்டி பிசாசி! நீதான் வேதாளம்!"

இப்படி ஒரு கேக் துண்டிற்காக அண்ணனும், தங்கையும் வாய்த்தர்க்கம் செய்துகொண்டிருந்த சத்தத்தில் சுகுமார் கண்விழித்துக் கொண்டான்.

"சுதன் என்னது சத்தம்?"

"கேக் திண்டதுக்கு இவள் இந்திரா ஏசிறாள்."

"உங்க ரெண்டு பேருக்கும் தானே வாங்கிக் கொண்டு வந்தனான். சண்டை பிடிக்காம ரெண்டுபேரும் எடுக்கிற தானே!"

"அப்பா, இவன் முக்காவாசிக்கும் மேல திண்டு போட்டான்.!"

"சரிசரி உடுங்க கதைய! உனக்கு நாளொண்டு வாங்கித்து வாறன்!' இவர் வேலைக்குப் பொயித்திருவார். நீ மட்டும் தனியா வச்சி சாப்பிடு!"

இருவரையும் சமாதானப்படுத்தி விட்டு, கிணற்றடிக்குப் போய் நன்றாக அள்ளிக் குளித்துவிட்டு வந்து பூப்பூநீராட்டு விழாவுக்குப் போக ஆயத்தமானான் சுகுமார்.

(தொடரும்)

## வாசகர்களின் கவனத்திற்கு!

*"என் கணவன் எனக்கு மட்டும்தான்" தொடர்நாவலை எழுதும் ஈழத்தின் பிரபல நாவல் ஆசிரியர் யார்?*

*அவர் பெயரை தமிழ்அலையில் வெளியாகும் கூப்பனில் எழுதி அஞ்சலட்டையில் ஒட்டி அதை எமக்கு அனுப்பிவைக்கவும்.*

*, நாவல் முடிவில் மூன்று வாசகர்களுக்கு அந்நாவலாசிரியரின் புதிய மூன்று நாவல்கள் பரிசாக அனுப்பிவைக்கப்படும்.*

**கூப்பன்**

நாவலாசிரியர்
பெயர்...............................................................
அனுப்புவரின் பெயர்...............................................................
விலாசம்...............................................................
கையொப்பம்...............................................

## நகைச்சுவை முற்றம்

*தொகுப்பு அமிர்தகழியான்*



"பாகவதர் எங்கே அவசரமாகப் போகிறீர்கள்?"
"கச்சேரிக்கு!"
"பக்கவாத்தியக்காரர்களைக் காணவில்லையே!"
"அரசாங்க அதிபரைச் சந்திக்கிறதுக்குப் பக்க வாத்தியம் வாசிக்க வேணுமா?"



"உங்களுக்கு இன்னுமொரு குழந்தைக்குப் பலனிருக்கு!"
"அதெப்படிச் சாத்திரியார்! நான்தான் கருத்தடை செய்து விட்டேனே!"
"உங்க மனைவி செய்யவில்லைத்தானே!"



"உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?"
"ஆறு பிள்ளைகள்!"
"எங்கே ஒன்றைக் காணோம்!"
"கொஞ்சம் பொறுங்க. இப்பதான் அடுத்த வீட்டுக்க பிரசவம் நடந்து கொண்டிருக்கு!"



"உங்க மனைவிக்கு கருவில் இரண்டு குழந்தைகள் வளர்கின்றன. பிரசவம் கஷ்டமாயிருக்கும!"
'எனக்கும் தொழில் கஷ்டம்! ஒரு குழந்தைய இப்ப பிறக்க வையுங்க அடுத்ததப் பிறகு பாத்துக் கொள்ளலாம் டாக்டர்".



"என்கணவர் இரவு பதினொரு மணி வரை ஊர் சுற்றி விட்டு வருகிறார்."
"பரவாயில்லையே என்கணவர் இரவு பதினொரு மணிக்குத்தான் ஊர் சுற்றக் கிளம்புகிறார்."

### பாலத்தைக் காப்பாற்ற உயிரைக் கொடுங்கள்!

பல்வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள் சுற்றுலா ஒன்றிற்காகப் புறப்பட்டுப் போனா ர்கள். ஐ.நா.சபைப் பிரதிநிதி ஒருவர் சுற்று லாக் குழுவிற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்தார்..

சுற்றுலாக் குழு ஒரு தொங்கு பாலத்தின் மீது நடந்து கொண்டிருந்த போது பாலம் உடைந்து விழக் கூடிய ஆபத்துத் தென்பட்டது. ஐ.நா. பிரதிநிதி அவசரமாகச் சொன்னார் "நமது பாரம் பாலத்தில் கூடிவிட்டது. எனவே இங்கிருக்கும் நமது உயிரைப் பாதுகாக்க வேண்டுமென்றால் யாராவது ஒருவர் கீழே உடனடியாகக் குதிக்க வேண்டும்" என்றார்.

கீழே குதித்தால் உயிர் போவது நிச்சியமென்று தெரிந்தும் தனது நாட்டுக்குப் புகழ் தேடிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அமெரிக்கன் ஒருவன் "அமெரிக்கா வாழ்க" என்றபடியே கீழே குதித்து உயிர் விட்டான்.

அப்போதும் பாலம் கொஞ்சம் உடைந்து கொண்டிருக்க ஐ.நா. பிரதிநிதி இன்னுமொருவரைப் பாயுமாறு கேட்டுக் கொண்டார். உடனே ரஷ்யாக்காரன் "ரஷ்யா வாழ்க" என்றவாறே உயிர் துறந்தான்.

ஆயினும் பாலம் உடைந்து கொண்டு வர பிரதிநிதி "இன்னும் ஒரே ஒருவர் பாய்ந்து விட்டாரென்றால் மிகுதியாக உள்ள எல்லோரும் நிட்சயமாய்த் தப்பித்து விடலாம்" என்றார்.

அப்போது நமது நாட்டுக்காரன் தமிழ் ஈழத்துக்குப் புகழ் தேடிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் "தமிழ் ஈழம் வாழ்க!" என்றபடியே கீழே குதித்து உயிர் துறந்தான்.

ஆனால் பாலம் லேசாக உடைய ஆரம்பித்தது. ஐ.நா. பிரதிநிதி "இன்னும் ஒருவர் பாயந்தால் எல்லோரும் நிட்சயம் உயிர் பிழைக்கலாம்" என்றார்.

உடனே "சிறிலங்காக்காரன் எழுந்தான் "சிறி லங்கா வாழ்க" என உரத்துச் சத்தம் போட்டபடியே அருகில் நின்ற மற் றொருவனைப் பிடித்துக் கீழே தள்ளிவிட்டான்.

*ராதா*

# குழந்தைகளுக்கு தடுப்பு மருந்துகள் கொடுக்க வேண்டியதன் அவசியம் என்ன?

(இதழ் 22ல் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)



இவை இரண்டும் குழந்தையின் நான்காம் மாத முடிவில் இரண்டாவது தடவையாகவும், ஆறாம் மாத முடிவில் மூன்றாவது தடவையாகவும் கொடுக்கப்படுகின்றது. பின்பு $1^1/_2$ வயதில் நான்காவது தடவையாகவும் கொடுக் கப்படுகிறது. இவ் முக்கூட்டுத் தடுப்பூசியில் தொண் டைக்கரப்பான் (diphthenia )குக்கல் (aheepiny cough or pentusis ) ஈர்ப்புவலி (tetanw )ஆகிய நோய்க ளுக்கு எதிரான தடுப்பு மருந்துகள் காணப்படுகின்றன.

பின்பு குழந்தையின் ஒன்பதாம் மாத முடிவில் சின்னமுத்துத் தடுப்பூசி போடப்படுகிறது. மேலும் முதலாவது வயது முடிவில் மூளைக் காச்சலுக்கு எதிரான தடுப்பு மருந்து முதலாவது தடவையாகவும் 2-4கிழமைகளின் பின்னர் இரண்டாவது தடவையாகவும் இரண்டாவது வயது முடிவில் மூன்றாவது தடவையாகவும் ஆறாவது வயது முடிவில் நான்காவது தடவையாகவும் போடப்படுகின்றது.

அத்துடன் மூன்றாவது வயது முடிவில் சின்னமுத்து, ருபெல்லா ஆகிய இரண்டு தொற்றுக்கும் எதிராகத் தடுப்பு மருந்தான m.r.vaccine கொடுக்கப்படுகிறது. ஐந்தாவது வயதில் தொண்டைக் கரப்பான்,ஈர்ப்பு வலி (D.T )இளம்பிள்ளை வாதநோய்க்கு எதிரான போலியோ சொட்டுமருந்து கொடுக்கப்படுகிறது. 10-15 வயதிற்கு இடையில் வளர்ந்தோருக்கான இரு கூட்டுத் தடுப்பூசி (ய.வ.ன)போடப்படுகிறது. அத்துடன் 10-15 வயதிற்கு இடையில் உள்ள பெண் சிறு பிள்ளைகள் அனைவருக்கும் ருபெல்லா நோய்க்கெதிரான தடுப்பு மருந்து போட்டப்படுகிறது. மேற் குறிப்பிட்ட அனைத்துத் தடுப்பு மருந்துகளும் அரச மருத்துவ மனையினால் வழங்கப் படுகின்றன. இவற்றைவிட கொப்பளிப்பான்,நெருப்புக் காய்ச்சல் ,ஈரல் அதிர்ச்சி போன்ற நோய்களுக்கான தடுப்பு மருந்துகள் தனியார் மருத்துவமனைகளில் பாவனையில் உள்ளது.

மேற்குறிப்பிட்ட குழந்தைகளுக்கான தடுப்பு மருந்துகளை உரிய காலங்களில் பெற்றுக்கொள்ளு தல் வேண்டும். ஒரு தடுப்பு மருந்தினை ஒரு தடவை பெற்றுவிட்டு இரண்டாவது தடவை உரிய நேரத்தில் பெறத் தவறியிருப்பின் கவ லைப்படத் தேவையில்லை. தாமதித்து இத்தடுப்பு மருந்தினைப் பெறலாம். காலம்தாழ்த்திப் போடும் போது ஏற்கனவே முதலாவது தடவை போட்டத்தைத் திரும்பப் போடவேண்டிய அவசியம் இல்லை.

உங்கள் குழந்தைகளுக்கு டி.உ.ப போட்டு ஒரு மாதத்திற்குப் பின்னர் அவ்விடத்தில் தழும்பு வந்துள்ளதா என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும் போது தழும்பு இல்லாவிட்டால் குழந்தையின் 6ம் மாதம் டி.உ.ப தடுப்பூசியை மீண்டும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். மேலும் குழந்தைக்கு முக்கூட்டுத் தடுப்பூசி போட்டபின்பு வலி ஏற்பட்டிருந்தால் அடுத்ததடவை தடுப்பூசி போடப்போகும் போது. மருத்துவரிடமோ அல்லது மருத்துவ மாதுவிடமோ தெரியப்படுத்தி அதற்குப் பதிலாக இரு கூட்டுத் தடுப்பூசியைப் போட்டுக் கொள் ளுதல் வேண்டும். ஏனெனில் இங்கு குக்கல் தொற்றுக்கு எதிரான தடுப்பு மருந்து வலிப்பினை ஒரு சிலருக்கு ஏற்படுத்தக்கூடும்.

மேலும் காய்ச்சல் மற்றும் கடுமையான தொற்றுக்கள் இல்லாத இடத்தில் தடிமன் காணப்பட்டாலும் தடுப்பு மருந்தினைப் பெற்றுக் கொள் ளுதல் முடியும். பொதுவாக அனைத்துத் தடுப்பூசிகளுக்கும் அவை போட்டபின்பு மெல்லிய காய்ச்சல் ஏற்படுவதுண்டு. இதையிட்டுப் பயப்பட வேண்டாம். அப்படிக் காய்ச்சல் ஏற்படும் போது அக் குழந்தையின் வயதிற்கேற்ற அளவு பனடோல்சிறப் அல்லது பனடோல் குளிசையைக் கொடுக்க வேண்டும். இங்கு சில குழந்தைகளுக்குக் காய்ச்சல் வலிப்பும் ஏற்படும் தன்மை காணப்படுவதினால் அக்குழந்தைக்குத் தடுப்பு மருந்து ஏற்றிய பின்பு வரும் காய்ச்சலின் போது அவதானமாக இருக்க வேண்டும். இங்கு காய்ச்சல் மெல்லியதாகத் தொடங்கும் போதே ''பனடோல் '' கொடுத்து விட்டு மெல்லிய இளஞ் சூட்டு நீரினால் துடைத்து விட வேண்டும்.

நாம் இங்கு குறிப்பிட்ட தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்ளும் போது பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம் என்ற ஐயம் சில பெற்றோர் மனதில் காணப்ப டுகிறது. இது தவறான விடை யமாகும். இங்கு பின் விளைவுகள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. ஆனால் தடுப்பு மருந்துகளைப் பெற் றுக்கொள்ளாவிட்டால் ஏற்படக் கூடிய நோய்கள் பாரதூரமானவை. ஆகவே இதனை மனதில் கொண்டு எம் குழந்தைகளின் ஆரோக்கிய வாழ்வினை மேம்படுத்துவதற்குச் சக பெற்றோரும் தங்கள் குழந்தைகளுக்கு உரிய காலத்தில் தடுப்பு மருந்தினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**வைத்தியகலாநிதி**
**எழுமதி கரிகாலன்**

## கந்தப்போடியும் கலந்தர்லெவ்வையும்

**கந்தர்:~** பாசிக்குடாவுல ஆமிக்காறன் கேம்பு போட்டிருக்கிற சங்கதிய அறிஞ்சயா மச்சான்...

**கலந்தர்:-** ஓமாண்டா?... ஒப்பந்தத்துக்கு ஒத்துவராத செயல்தானே இது...

**கந்தர்:~** அப்ப அந்த கண்காணிப்புக் குழுவிட கண்ணில இது படல்லையாமா...

**கலந்தர்:-** புலிகள் செய்யிற விஷயம் மட்டும் தான் இந்த கண்காணிப்புக் குழுவிட கண்ணில படுதாம் மச்சான்...

**கந்தர்:~** சிறிலங்கா கண்காணிப்புக் குழு எண்டு வோட் போட்டிருக்கிறது அப்ப சரிதான் போல....

**கலந்தர்:-** சரியா சொன்னா மச்சான்.

---

போட்டியில் பங்குபெற விரும்புவோர் விடைகளை இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என வகைப்படுத்தி ஒரு தபாலட்டையில் எழுதிக் கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை அனுப்பும் வாசகர்களில் அதிஸ்டசாலிக்கு 100 ரூபா பணப்பரிசும், பாராட்டுப்பெறும் மேலும் 10 பேரின் பெயர் விபரங்கள் அலையிலும் வெளியாகும். விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 20-09-2003 ஆகும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம்.

*முகவரி*

**குறுக்கெழுத்துப்போட்டி-11**
**தமிழ்அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை**

## குறுக்கெழுத்துப் போட்டி 11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 |
| | ■ | 5 | | 6 | |
| 7 | 8 | | ■ | | 9 |
| 10 | | | ■ | 11 | |
| | | ■ | 12 | | ■ |
| ■ | 13 | 14 | | ■ | 15 |
| 16 | ■ | 17 | | | |
| 18 | | | | ■ | |

### இடமிருந்து வலம்

01.முருகன் தோணியில் வந்து இறங்கியதாகக் கூறப்படும் கடலும்,காடும், மலையும் சூழ்ந்த தென்தமிழீழத் திருத்தலம் ஒன்று.
05. தமிழ் நாட்டின் பிரபல சஞ்சிகை ஒன்று, தாமரையையும் இப்படி அழைப்பர் (குழம்பியுள்ளது)
07.இதன் உட்பொருள் நாதன் நாமம் நமச்சிவாயவே.
09.வீடு (திரும்பியுள்ளது)
10.ஒரு துளி நேரம்
11.வரம் பெற இதைப்புரிவர். முதல் எழுத்தை இழந்து வருகின்றது.
12.கொக்கட்டிச்சோலைச் சிவன் கோயிலில் இது ஓடுவது ஒரு சிறப்பம்ச மாகும்.
13.திருவள்ளுவரின் துணைவியாரின் பெயர். (குழம்பியுள்ளது)
17.வேலை அற்றவருக்கும் வாழ்வில் இது தோன்றும். (குழம்பியுள்ளது)
18.எச்சிறு பொருளிலும் பயன் உண்டு என்பதை உணர்த்த இதனைப் பல்லுடன் சேர்த்துக் கூறுவர். (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01.ஒரு செயலைச் செய்து முடிக்க எடுக்கும் தீவிர ஆர்வம்.
02.யானையின் விலை மிக்க பகுதி ஒன்று.(குழம்பியுள்ளது)
03.மின் இணைப்பை ஏற்படுத்த செருகியை இதில் செருக வேண்டும்(தலைகீழ்)
04.சிங்கத்தின் வேறு ஒரு பெயர் ( குழம்பியுள்ளது)
06.பகைவன், முனிவர்.இப் பெயரில் பட்டமும் வழங்கப்படுகின்றது.
08.வெற்றி பெற்றவருக்கு வழங்கப்படுவது. சிலர் இதில் மதுவையும் ஊற்றிக்குடிப்பர்.( தலைகீழ்)
12.இந்துக்களின் பூஜையின்போது முதலில் பாடப்படுவது.
14. இதை ஒழுங்காகக் கூட்டிப்பாடினால் இசை கேட்க இனிமையாக இருக்கும். (குழம்பியுள்ளது)
15.காதலில் தோல்வி அடைந்தவுடன் இதை எழுத எல்லோரும் முற்படுவதால் நாம்தான் சிரமப்படுகின்றோம்.
16.நெருப்பு இருக்கும் இடத்தை இது காட்டிக் கொடுத்து விடும். (தலைகீழ்)

## குறுக்கெழுத்துப் போட்டி 9ற்கான விடைகள்.

*இடமிருந்து வலம்*
01.திலீபன் 04.அந்தம்
06.சந்ததி 08.மாங்குளம்
10.குதி 11.சுயம்
13.தேன் 15.குபு
16.தவில் 17.புரட்சி

*மேலிருந்து கீழ்*
01.திரிசங்கு 02.பந்தம்
03.அதியமான் 05.தசை
07.குந்திதேவி 09.சுளகு
12.சிலம்பு 14.புதன்
16.புல்

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

**கே.அரசேஸ்வரன்**
**கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு**
**யாழ்ப்பாணம்.**

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

**01.ச.சத்தியவதனி**
பாலமுனை,மண்டூர்.
**02.வ.ஜனார்த்தனி**
தேத்தாவடி வீதி
ஆரையம்பதி-03
**03.ஐ.அஜிதன்**
மே/பா. ஐ.இன்பராஜ்.
384/26டி பார் வீதி
மட்டக்களப்பு.
**04.ம.எழிலரசி**
8ம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு,முல்லைத்தீவு.
**05.கே.மகேஸ்வரன்**
85/8,அருணகிரி வீதி
திருகோணமலை.
**06.சி.சுகாஷன**
திருவள்ளுவர் வீதி
பாண்டிருப்பு-01, கல்முனை.
**07.திரு.த.புண்ணியமூர்த்தி**
ஆங்கிலப் பிரிவு
கி.ப.கழகம், வந்தாறுமூலை
**08.வி.யசோதரன்**
தரம் 11s
மட்/மகாஜனக் கல்லூரி
மட்டக்களப்பு.
**09.பகவதி ஆறுமுகம்**
குறிஞ்சாமுனை
கன்னன்குடா,மட்டக்களப்பு.
**10அ.சிங்கராஜா**
பாடசாலை வீதி, ஓந்தாச்சிமடம்
களுவாஞ்சிகுடி.

# விடுதலைப் பாதையில் இவளும் ஒரு வித்தானாள்

## லெப் - கேணல் சிவகாமி.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாலும் தேனும் நிறைந்து காணப்படும் அழகிய சிற்றூர்தான் கதிரவெளிக் கிராமம். இக்கிராமத்தில் சின்னத்துரை தம்பதிகளுக்கு 1977ம் ஆண்டு ''எதிர்ப்பேன் எதிரியை அழிப்பேன்" என்ற வடிவில் வந்து அவதரித்தாள் லெப்கேணல் சிவகாமி. இவளுக்குப் பெற்றோர் இட்ட பெயர்தான் நிசாந்தினி. இவளை எல்லோரும் செல்லமாக அம்முனியா என்று அழைப்பர்.

இவள் தனது ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு கதிரவெளி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கற்றாள். படிப்பிலும் சரி விளையாட்டிலும் சரி நிசாந்தினி விட்டுக் கொடுத்தவள் இல்லை. பாட்டு நன்றாகப் பாடக் கூடியவள். பிறருக்கு உதவுவது மூத்தோரை மதிப்பது போன்ற நற்குணம் உடையவள்.

இவளது பாடசாலைக் காலத்தில் இன வெறிபிடித்த சிங்களக் காடையர்களின் கொடுமை தலைவிரித்து ஆடியது. கொலை, கொள்ளை, கற்பழிப்புச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு இருந்தன. எல்லாவற்றையும் கேட்டும் பார்த்தும் நன்கு அறிந்த இவளுக்கு உணர்வு ஏற்பட்டது. எதிரிகளுக்குப் பாடம் புகட்ட வேண்டும். இனியும் எமது மண்ணில் இவ்வாறான கொடுமைகள் நடக்கக் கூடாது. எமது மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும், நிம்மதியாகவும் வாழ வேண்டும் என்று எண்ணினாள். சிறு வயதினிலே பெற்றோரை இழந்து, உறவைப் பிரிந்து 1995ம் ஆண்டு விடுதலையை நோக்கி வீறு கொண்டெழுந்தாள். வேங்கைகளுள் இணைந்தாள்.



மட்/04 பயிற்சிப் பாசறையில் தன்னை இணைத்து ஆரம்பப் பயிற்சியினைத் திறன்படச் செய்து சிவகாமி என்னும் புனைப் பெயருடன் மருத்துவப் போராளியாய் பயிற்சிப் பாசறையில் இருந்து வெளியேறினாள்.

இவள் போராளிகளுடன் அன்பாகவும், பண்பாகவும், மரியாதையுடனும் பழகுவாள். நோயாளிகளைப் பெற்ற தாயைப் போன்று கவனிப்பாள். இவளின் வார்த்தையைக் கேட்டாலே நோய் தானாகச் சுகமாகிவிடும். இப்படிப்பட்ட புரிந்துணர்வு கொண்டவள்தான் எங்கள் சிவகாமி. இவள் போராட்டத்தில் இணைந்த காலத்தில்

**மலையரசி.**

உணவு கிடைப்பது மிகவும் அரிது. ஒரு நாளைக்கு ஒரு நேர உணவு கிடைக்கும். அதுவும் தேங்காய், உப்பு, மிளகாய் இல்லாத பருப்புக் கறியும் சோறும் ஆனால் அவளுக்கு அது பெரிய அமுதமாகவே இருக்கும்.

எவ்வாறு இருந்தாலும் வீட்டுக்குப் போகவேண்டும் என்ற சிந்தனையே இல்லை. எதிரியைத் தேடித் தேடி அழிப்பதே சிந்தனையாக இருக்கும். சிவகாமியின் முதலாவது தாக்குதல் நாலாம் முற்சந்தி இராணுவமுகாம் மீதான தாக்குதல். இத் தாக்குதலை அச்சம் இன்றித் திறன்படச் செய்து முடித்தாள். திறமையைக் கண்ட பொறுப்பாளர் அரசியல் பணிக்காக வாகரைக்கு நியமிக்கப்பட்டாள்.

## காலத்தால் அழியாத மாவீரர் வரலாறு



1997ம் ஆண்டு 05.11 அன்று ஜயசிக்குறு சமர் ஆரம்பமானது. அச்சமரை எதிர்கொள்வதற்காக தென் தமிழீழம் இருந்து வட தமிழீழம் நோக்கி மகளிர் அணியானது பயணத்தைத் தொடர்ந்தது. அவ்வணியில் 40பேர் கொண்ட குழுவிற்கு அணித்தலைவியாகச் செயல்பட்டு சிவகாமியும் கூடவே பயணத்தைத் தொடர்ந்தாள். மழை, வெயில் பாராது குடிக்க நீர் இன்றி உண்ண உணவின்றி நித்திரையின்றி கூட வந்த போராளிகளைத் தாக்குதலில் இழந்தும் பெரும் சிரமப்பட்டு வன்னியை வந்தடைந்தார்கள். இவர்களைத் தேசியத்தலைவர் சந்தித்து விட்டு (F.D.L ) முன்னணிப் பாதுகாப்பு நிலையில் விடப் பட்டார்கள். சிவகாமிக்கு 40பேர் கொண்ட அணியொன்று இவளுக்கு களம் புதுமையாய் இருந்ததால் தெரிந்தவர்களிடம் கேட்டு அறிந்து கொள்வாள். எதிரிப் படைகளின் எறிகணைகள் மழையாய்ப் பொழியும் வேளையிலும் தமிழீழந்தான் தனது இலக்கு என்று உறுதியுடன் இருப்பாள். முதன்முதல் தனது படையணித் தாக்குதலில் பங்கு கொண்டது. அதாவது ஓமந்தை என்னும் இடத்தில் தாக்குதல் நடந்தது. அதில் பங்கு கொண்டு காலில் விழுப்புண்ணடைந்தாள்.

பின் தளத்திற்கு அனுப்பப்பட்டவள் விழுப்புண் மாறியதும் மீண்டும் இவளால் சண்டையில் நிற்க முடியாது போய்விடவே அரசியல் வேலை செய்வதற்காக கல்லூரிக்கு அனுப்பப்பட்டாள். படிப்பு முடிவடைந்ததும் வன்னி இருந்து தென் தமிழீழம் நோக்கிய பயணத்தை மேற்கொண்டாள்.

1998ம் ஆண்டு தென் தமிழீழத்தை வந்தடைந்தவள். மட்டு அம்பாறை மாவட்ட அரசியல் துறை மகளீர் பொறுப்பாளராக மீண்டும் பணியேற்றுக் கடமையைச் செய்தாள். இரண்டாவது தடவையாக மீண்டும் 1999ம் ஆண்டு வன்னிப் பயணத்தை மேற்கொண்டாள். இவள் இயக்கத்தில் இணைந்து கொண்டநாள் முதல் வீரச்சாவு அடையும் வரைக்கும் கரும்புலியாகச் செல்வதே சிந்தனையாகும். இவளின் எண்ணத்தைத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுக்கு கடிதம் மூலம் எழுதி அனுப்பினாள். தலைவரிடம் இருந்து ஆறுதல் கடிதம் கிடைத்தது. அன்றிலிருந்து அளவே இல்லாத மகிழ்ச்சியில் இருப்பாள்.

மேஜர் தர அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டாள். பயிற்சியிலும் விளையாட்டிலும் சளைத்தவள் அல்ல. பயிற்சி முடிவடையும் தறுவாயில் ஓயாத அலைகள் - 03 தலைவிரித்து ஆடியது. எதிரிகளைக் களமாடி வெற்றி கொள்ள அனைத்துப் போராளிகளுடன் சேர்ந்து வெற்றிகரமாகத் தாக்குதலை முடித்து வந்தாள்.

இவளது பணி தென்தமிழீழத்தில் நிறைய இருப்பதால் மீண்டும் மட்டுநகர் வரவுக்காகத் தெரிவு செய்யப்பட்டு 2001.02 அன்று வன்னியிலிருந்து தரை வழியூடாகப் பதினான்கு நாட்கள் நடந்து மட்டக்களப்பு வந்தடைந்தாள். மூத்த தளபதியினால் இவளை மட்டு அம்பாறை மாவட்ட மகளிர் துணைத் தளபதியாகத் தேர்ந்தெடுத்து நியமிக்கப்பட்டாள்.

பின்னர் வேவு பணியில் ஈடுபட ஆசைப்பட்டாள். தனது எண்ணத்தைக் கருணாஅம்மானிடம் சொல்ல அதற்கு அவர் விடைகொடுத்தார்.

7பேர் கொண்ட அணிக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு விடப்பட்டாள். அன்றிலிருந்து எதிரியைத்தேடி அவனது நடவடிக்கைகளைத் துல்லியமாக வேவு எடுப்பதில் நாள் முழுவதும் ஓயாமல் ஈடுபட்டுக் கொண்டிருப்பாள்.

அன்றும் வழமைபோல் தன் பணிக்குச் செல்ல ஆயத்தமானாள் மாந்திரி ஆறுகூட மௌனம் சாதித்து விட்டது. எதிரி இயமன். உயிரைக் குடிப்பான் என்று அன்று சிவகாமி நினைக்கவில்லை. திடீரென வெடிச்சத்தம் கேட்டது. நாலாபக்கமும் இருந்து எதிரி சுட்டபடி வெளியேறினான். என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. எதிரியின் கையில் உயிருடன் பிடிபடக்கூடாது என எண்ணித் தனது துப்பாக்கி, தொலைத் தொடர்புச் சாதனம் என்பவற்றைத் தகர்த்து விட்டு 17,000 மாவீரர்களுடன் தானும் ஒரு வேங்கையாய் ஈழ மண்ணை முத்தமிட்டாள்.

2001.9.12 அன்று தான் லெப்-கேணல் சிவகாமி உட்பட ஐந்து போராளிகளின் உயிர் மண்ணை விட்டுப் பிரிந்தது ஆனால் உணர்வுகள் அல்ல.

தேசத்தின் விடுதலைக்காகவும் மக்களின் விடியலுக்காகவும் தன்னை அயராது ஈடுபடுத்தியவள் படையணி வளர்த்திட அரும்பாடுபட்டவள். இவளின் கனவு நிச்சயம் நனவாகும்.

## சென்றவாரத் தொடர்ச்சி

166. ''குரல் எடுத்ததோர் குயில் படுத்தது, குமுறி நின்று தன்வயிற்றிலே போர் தொடுத்தது" என்ற கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவிதை வரிகளால் சிறப்பிக்கப்படும் வரலாற்றுச் சம்பவம் என்ன?

**தியாக தீபம் லெப்.கேணல் திலீபன்.(இராசையா~பார்த்தீபன், ஊரெழு ) 15.09.1987 செவ்வாய் மு.ப. 9.55 தொட்டு 26~09~1987சனி காலை 10.48. வரை பன்னிரு நாட்கள் நீராகாரம் ஏதுமின்றி சாகும் வரை உண்ணா நோம்பிருந்து தற்கொடை ஆற்றியமை.**

167. ''நடிக மணி " என்றதும் நினைவிற்கு வரும் வகையில் ஈழத்தில் ''விலாசக் கூத்து" ''மரபைப் பேணி வளர்த்த வட தமிழீழக் கலைஞர்" யார்?

**நடிகமணி வி.வி. வைரமுத்து (காங்கேசன்துறை வசந்தகான சபை)**

168. யாழ்ப்பாண இராட்சிய வரலாற்றில் சிறப்புற்றிருந்ததும்,பல வரலாற்றுத் தொல்லியல் சான்றுகளைக் கொண்டமைந்ததுமான ''கதிரமலை" இன்று எப்பெயரால் அறியப்படுகின்றது?

**கந்தரோடை**

169. தமிழன் வரலாற்றை குறியீடு செய்யும் தமிழீழத் தேசியக் கொடியை வரைந்தவர் யார்?

**தமிழீழ தேசியத்தலைவரின் நண்பரும் ஓவியருமான மதுரையைச் சேர்ந்த நடராஜா.**



170. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதல் முதலாக ஒரே சயனைட்டைப் பகிர்ந்து தற்கொடையாற்றிய மாவீரர்கள் யார்?

**லெப். உமாராம், வீரவேங்கை. சுந்தர் (12.03.1986.இல் கல்முனையில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் கைது செய்ய முற்படுகையில்)**

171. '' வெள்ளிப்பாதரசம் " என்ற சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியரான ''இலங்கையர் கோன் " ஈழத்தமிழ் சிறுகதையின் முன்னோடியாகக் கருதப்படுகின்றார் இவரது இயற்பெயர் என்ன?

**ந. சிவஞானசுந்தரம்**

172. ஈழத்தில் எழுந்த முன்னோடி அறிவியல் நூலாகக் கருதத்தக்க ''வேதிநூல் " யாரால் எழுதப்பட்டது?

**''முத்தமிழ் வித்தகர்" சுவாமி விபுலானந்தர்**

## "தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம்"

(✍ கோமளமைந்தன)

173. 1981ல் யாழ் பொது நூலக எரியூட்டலுக்குப் பின்னர் சிங்களப் படைகளால் எரியூட்டப்பட்ட இரு வட தமிழீழ நூலகங்களும் எவை?

**1.பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூலகம் (1984இல்)**

**2.காரைநகர் குளோரட் நூலகம் (1986இல்)**

(தொடரும்)

தொடர் கவிதை

## ஈழத் தாய் சபதம்

எஸ். கருணானந்தராஜா (யுகசாரதி)
களுவாஞ்சிகுடி – லண்டன்

### ஆரியர் கொடுமை-மகா வம்ச காலம்

விசயனென்றொரு முரடன்-தான்
விரும்பியபடி அவன் நாட்டினிலே
தசையினிலே ஆசை கொண்டே-இளந்
தளிர்களைக் கசக்கிப் பின் தரையெறிந்தான்
வசை வருமெனப் பயந்தே-அந்த
வம்பனை அவனது தோழருடன்
திசையறியாக் கடலில்-என்றும்
திரும்பிவராவண்ணம் மரக்கலத்தில்

தந்தை அரசனவன்- உயர்
தர்மத்தைக் காத்திட அனுப்பி வைத்தார்
விந்தையில் விந்தையடா-எங்கள்
வினைப்பயனோ இல்லை விதியதுவோ
முந்தயர் கொடுமைகளோ -அந்த
மூர்க்கனைச் சூழற்புயல் கொணர்ந்தெமது
செந்தமிழ் ஈழத்திலே-கரை
சேத்ததடா மறை வேர்த்ததடா

மண்டலத்தரசியவள்-உளர்
மறத்தினள் ராவணன் வழியில் வந்தாள் ,
வண்டமிழ்ப் பொற்''குவை நீ'' -எனும்
வாயினி லினிக்கிற பெயருடையாள்
புண்டரிகத் தெழிலாள் -அந்தப்
புலையனைப் புணர்ந்திட ஆசை கொண்டாள்
பண்டைய பெருமையெல்லாம் -அந்தப்
பாவியினால் எமக் கழிந்ததுவே

ஆயிரமாயிரமாய் -இளம்
அனிச்சைகள் தனை முகர்ந் தெறிந்தவனை
நாயினை அவள் புணர்ந்தாள் -நாம்
நாடிழந்தே நடுத்தெருவில் நின்றோம்
தேயத்து வன்னியர் நாம்-தலை
திருப்பிய புறமெங்கும் அன்னியர்கள்
பேயெனச் சிரித்து நின்றார்-எங்கள்
பெருமையெல்லாம் அன்று எரித்து நின்றார்

(தொடரும்)

## இனி ஒரு விதி செய்வோம்!

உலகமொழி அத்தனையும்
ஓரமதில் சேர்ப்போம் - இனி
உலகமொழி மௌனம் என
உலகினிலே சொல்வோம்.

உலகமதம் அத்தனையும்
வேலிமதில் சாய்ப்போம் - இனி
உலகமதில் மனிதம் என்ற
புதிய மதம் செய்வோம்!

தருமமது சூது கவ்வும்
வாழ்வதனைக் கொல்வோம் - இனி
தருமமதைத் தருமம் கவ்வ
வேண்டுமெனச் சொல்வோம்.
உத்தியோக மொழியென்று
எதனையுமே சொல்வோம் - இனி
சத்தியமாய் அன்புமொழி
அகிலமதில் செய்வோம்

வீதிகளில் , வீடுகளில் -
விதிகளொன்று செய்வோம் - இனி
சாதியில்லா நீதிகளில்
போதனைகள் செய்வோம்!

கவிஞர் திக்கவயல் தர்மு.

## ஆடு நனைகிறதென்று

ஆடு நனைகிறதென்று
ஓநாய் அழுததாம்!
முஸ்லிம் பிரதேசங்களுக்குப்
பாதுகாப்பு வேண்டும்
ஜே.வி.பி. கண்ணீர் வடிக்கிறது!
சாத்தான் வேதம் ஓதுகிறதா?
சமுத்திரத்தில் மூழ்குபவன்
ஒருதுரும்பையும் எட்டிப்
பிடிப்பது போல
புலிகளுக்கு எதிராகப் பேசுவதற்கு
ஒருவாய்ப்புக் கிடைத்தது
சபை குழப்பும் ஜே.வி.பி.க்கு!
முழுஉலகும் அறியும்
இந்த உண்மையை
முஸ்லிம் சகோதரர்கள்
அறிவார்களா?
ஜே.வி.பி. எந்தக் கட்டத்திலாவது
முஸ்லிம்களுக்கு உதவியதா?
அனுதாபம் காட்டியதா?
திடீரென்று ஏன் இந்தக் கரிசனை?
பாட்டு வாச்சால்
கிழவியும் பாடுவாள்!

அன்பன்.




## செத்துவிட்டேன்!

விதி என்னை
துரத்தித் துரத்தி
தோற்கடித்த போதும் - நான்
வாழத் துடித்தேன்!

காதல் கசங்கி
கண்ணீராய்
வழிந்தபோதும் - நான்
வாழத்துடித்தேன்!

உறவுகள் போலியாகி
உள்ளம் வெதும்பி
உழன்றபோதும் - நான்
வாழத்துடித்தேன்!

எதிர்பார்ப்புக்கள்
ஏமாற்றங்களாய்
எரித்தபோதும் - நான்
வாழத்துடித்தேன்!

முதுகுச் சொற்கள்
முகம் தாக்கி
வலித்தபோதும் - நான்
வாழத்துடித்தேன்!

ஆனால்....
என் பெண்மையின்
வெண்மையில் - நீ
கருமை கண்ட போதே
நான் செத்து விட்டேன்!

க.நயனதாரா.
வெல்லாவெளி.

## வைரவரே உனக்கில்லை திருவிழா!

ஆங்காங்கே ஆலய திருவிழாக்கள்
ஆல வட்டங்களும் சாமரைகளும்
ஏன் மேளக்கச்சேரிகளும் கூட
காடு மண்டிக்கிடந்த வைரவருக்கு
ஆண்டுத் திருவிழாவாம் ஒலிபெருக்கி
சத்தங்களும் ஓங்கார ஒலிகளும்
ஓடித்திரியும் பல்புகளும் கூட.
பக்கத்துப் பார்வதியும் ரேவதியும்
அழகாய் அள்ளிச் செருகிகடும்
பக்தியுடன் போகின்றார்கள் வைரவரிடம்
இவர்களைத் தரிசிக்க பக்கத்து
கண்ணனும் சிவாவும் சிரித்த முகத்துடன்!
வைரவர்தான் பாவம்!
யார்யாரைக் கும்பிடுவது
கடந்த காலங்களை எண்ணாமல்
இழந்த நாட்களை எண்ணாமல்
அமைதி வந்தது யாரால் என்று
எண்ணாமல் கண்ணால் பார்க்கின்றார்கள்!
ஓரமாய் ஒதுங்குகின்றார்கள்!
காப்பாற்று என்று கும்பிட்ட காலம் மாறி
காலால் கடவுளைப் பார்த்து
கோலம் போடுகிறார்கள்
எந்தக் கடவுளை என்று தெரிகின்றதா
வைரவரே உனக்கில்லை திருவிழா
உன்னை வைத்து அவர்கள் திருவிழா
கொண்டாடுகிறார்கள் ஏதோ
ஆகட்டும் நீமட்டும் நாளை
காடுமண்டித் தனிமரமாய் இருப்பாய்
அடுத்த வருடம் வரும்வரை!

த.குயிலின்பன்.

## மட்-மாவட்ட அரச / அரசசார்பற்ற திணைக்களங்களுக்கு இடையேயான கிரிக்கட் போட்டி

(மதி)

கோல்டன் கில் பாம், செலான் வங்கி காத்தான்குடி ஆகியவற்றின் அனுசரணையுடன் ஆரையம்பதி வி.கழகம் நடாத்தும் மட்டக்களப்பு மாவட்ட அரச, அரச சார்பற்ற திணைக்களங்களுக்கு இடையேயான மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி கடந்த 23.08.2003 தொடக்கம் 21.09.2003 வரை ஆரையம்பதி சாண்டோ சங்கரதாஸ், ஆரையம்பதி மகா வித்தியாலய மைதானங்களில் இடம்பெற்று வருகின்றது.

23.08.2003, 24.08.2003ந் திகதிகளில் நடைபெற்ற போட்டிகளில் கிழக்குப் பல்கலைக்கழக அணியினரும், கச்சேரி அணியினருக்கும் இடையேயான முதல் போட்டியில் கிழக்குப் பல்கலைக்கழக அணியினரும், ஏறாவூர் ப.நோ.கூ.சங்க அணியினருக்கும், மட்-போதனா வைத்தியசாலை அணியினருக்கும் இடையேயான போட்டியில் ஏறாவூர் ப.நோ.கூ.ச அணியினரும் மதுவரி திணைக்கள அணியினருக்கும் ரெலிக்கொம் அணியினருக்குமான போட்டியில் மட்-மதுவரி திணைக்கள அணியினரும் கிழக்குப் பல்கலைக்கழக அணியினருக்கும் ஏறாவூர் ப.நோ.கூ.ச. அணியினருக்கும் இடையேயான மற்றும் ஒரு போட்டியில் ஏறாவூர் ப.நோ.கூ.ச. அணியினரும் வெற்றி பெற்றனர்.

இதன் படி ப.நோ.கூ.ச. அணியினரும், மட்-மதுவரித் திணைக்கள அணியினரும் இரண்டாம் சுற்றுக்குத் தெரிவாகியுள்ளனர்.


## விற்பனையாளர்கள் தேவை

அடுத்தவாரம் முதல் நாள் இதழாக வெளிவரவிருக்கும் "தமிழ் அலை" பத்திரிகையை வீடு வீடாகச் சென்று விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை.

### விற்பனையாளர்கள் தேவைப்படும் பிரதேசங்கள்


* ஆரையம்பதி
* களுவாஞ்சிகுடி
* கல்லாறு
* செங்கலடி
* வாழைச்சேனை

ஆர்வமும் சுறுசுறுப்பும் உடையவர்கள் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும். கவர்ச்சிகரமான சம்பளம், விசேட சலுகைகள் என்பன வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு
விநியோக முகாமையாளர்
''தமிழ்அலை''
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை
தொ.பே, தொலை நகல் 065.2226110
மின்னஞ்சல் tamilalai32@yahoo.com

P.D.S

## புஸ்பா சாரதி பயிற்சி நிலையம்




மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல்தர பாடசாலையான மேற்படி பயிற்சி நிலையம் தான் என்பதை மக்களாகிய சகலரும் அறிந்து வரும் வேளையில் எந்த வித கஸ்டங்களும் இன்றி குறித்த தினத்தில் சிறந்த பயிற்சியுடன் சாரதி லைசன்ஸ் பெற்றுக் கொடுக்க எமது நிறுவனம் பெயர் பெற்றுள்ளதால் உங்கள் பணத்தை எங்களிடம் தந்து பயன் பெறுங்கள். தரகரிடம் ஏமாறாமல் எங்களிடம் நேரடியாக கீழ் உள்ள விலாசத்திற்கோ தொ.பேசி இலக்கத்திற்கோ தொடர்பு கொண்டு எங்களைச் சந்தியுங்கள் உரிய பயன் பெறுங்கள்.

**குறிப்பு:-** 2002ம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடந்த போதனாசிரியர் பரீட்சையில் கிழக்கு மாகாணத்தில் திறமைச் சித்தி பெற்ற ஒரே நபர் இதன் உரிமையாளர் த.புஸ்பராசா என்பதையும் உரிய பயிற்சி உரிய வாகனத்தில் பெற்றுச் சிறந்த சாரதியாகச் செயல்படுங்கள்.

உரி.த. புஸ்பராஜா
புஸ்பா சாரதி பயிற்சி நிலையம்
இல.12 குளொபல் கட்டிடம், மார்க்ட், மட்டக்களப்பு.
கடை.தொ.பேசி, 065-2225232, Sel : 0777-248895

# 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான

## வினாக்களும் விடைகளும்



### புலமை துரித மீட்டல் - 2003
### வினாத்தாள் - 01
### பகுதி - 02 தொடர்ச்சி

*. ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் முதல் காலாண்டுப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் விபரம் கீழே அட்டவணையில் தரப்படுகிறது.

| மாதம் | பெண் ஆடைகள் | ஆண் ஆடைகள் |
|---|---|---|
| 01 | 1532 | 1375 |
| 02 | 836 | 911 |
| 03 | 2462 | 2458 |
| மொத்தம் | ...................... | ...................... |

41. முதல் காலாண்டுப் பகுதிகள் எனக் குறிப்பிடப்பட்ட மாதங்களை ஆங்கிலத்தில் எழுதுக?

42. பெண் ஆடைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

43. ஆண் ஆடைகளின் மொத்த எண்ணிக்கை யாது?







44. அக்காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

45. தை மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் மொத்த எண்ணிக்கை எத்தனை?

46. பங்குனி மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

47. இலங்கையில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்று தருக?

***.பின்வரும் படங்களில் உள்ள கருவியின் பெயரையும் அதன் வகையையும் எதிரே எழுதுக? உதாரணம் ஒன்று தரப்படுகிறது.**

| | கருவி | கருவியின் பெயர் | என்ன வகைக் கருவி |
|---|---|---|---|
| 48 |  | | |
| 49 |  | | |
| 50 |  | | |
| * |  | ஆப்பு | சாய் தள வகை |
| 51 |  | | |
| 52 |  | | |

***. சரியான விடையின் இலக்கத்தினை எதிரே எழுதுக?**

1. 750ml 2. வறுமை நிவாரணம் கொடுத்தல்
3. ஆதர் சீ கிளாக் 4. கூட்டுறவுச் சங்கம்
5. கலிலியோ 6. ஹொக்கி
7. கிராமசேவகர் 8. விஞ்ஞானி.

53. இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் ஒரு....................

54. பொருட்களை விற்றல்............................

55. "புல்லி" என்ற சொல் பயன்படுத்தப்படும் விளையாட்டு..............

56. ஒரு முழுப்போத்தல் கொள்ளும் நீரின் அளவு................

57. இலங்கையில் உள்ள விஞ்ஞானி............................

58. நன்நடத்தை சான்றிதளைப் பெறல்........................

59. தொலைநோக்கி..........................

60. சமுர்த்தி அலுவலகம்..........................

***.பின்வரும் கடிதத்தில் பெறுபவர் முகவரி, அனுப்புபவர் முகவரி ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன. அவற்றை சரியான வரிசைக்கிரம ஒழுங்கில் எழுக?**

| G6 | | கண்டி Kandy 4536 |
|---|---|---|
| ப | R | |

முத்திரை 16.50

அனுப்புபவர் முகவரி,
கண்டி,
18, பாடசாலை வீதி
க.நந்தன்.

பெறுபவர் முகவரி
27, கல்லூரி வீதி,
ச.சங்கர்
திருகோணமலை.

61. அனுப்புபவர் முகவரி..................................


62. பெறுபவர் முகவரி..............................................


63. ஒட்டப்பட்ட முத்திரையைக் கொண்டு அது எவ்வகைக் கடிதம்? ....................................

***. ஒவ்வொரு இடத்தில் இருந்தும் பெறக் கூடிய சேவை எது என்பதனைக் கோட்டினால் தொடுத்துக் காட்டுக?**


| இடம் | சேவை |
|---|---|
| 64. மாவட்டச் செயலகம் | *. பிறப்புச் சான்றிதளைப் பெறல் |
| 65. பொலிஸ் நிலையம் | *. மரம் வெட்ட அனுமதி பெறல் |
| 66. மாவட்ட தேர்தல் ஆணையாளர் அலுவலகம் | *. பசளை வகைகளை அறிதல் |
| 67. வங்கி | *. வாக்காளர் இடாப்பின் பிரதி ஒன்றைப் பெறல் |
| 68. விவசாயிகள் சேவை மத்திய நிலையம் | *. தொலைந்த அடையாள அட்டைகளைப் பற்றி பதிதல் |
| 69. பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு செய்தல் அலுவலகம். | *. சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்தல் |

***. பின்வரும் உபகரணங்கள் எந்தெந்தத் தொழில் செய்வோரால் பாவிக்கப்படுகிறது என எதிரே எழுதுக?**

70. துளைப்பதற்கு 

71. நோயை இனங்காண்பதற்கு 

72. கட்டடம் கட்டுவதற்கு 

73. நீரில் செல்வதற்கு 

***. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க?**

| | சமயத்தவர் | வழிபாட்டிடம் | நூல்கள் |
|---|---|---|---|
| 74. | சைவ சமயத்தவர் | ...................... | வேதாகமங்கள் |
| 75. | பௌத்த சமயத்தவர் | விகாரை | ...................... |
| 76. | கிறிஸ்தவ சமயத்தவர் | ...................... | பைபிள் |
| 77. | இஸ்லாமிய சமயத்தவர் | ...................... | திருக்கூர் ஆன் |

78. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் யார்?

79. பாஞ்சாலி சபதத்தின் ஆசிரியர் யார்?

80. கல்விச் செல்வம் என்பது பற்றி 6 வாக்கியங்கள் எழுதுக? ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.

## விடைகள்

41. JANUARY, FEBRUARY,MARCH
42. 4830 பெண் ஆடைகள்
43. 4744 ஆண் ஆடைகள்
44. 9574 ஆடைகள்
45. 2907 ஆடைகள்
46. 4920 ஆடைகள்
47. பியகம ஆடைத் தொழிற்சாலை
48. நாதசுரம் - காற்றுக் கருவி
49. மத்தளம் - தோற்கருவி
50. வயலின் - நரம்புக் கருவி
51. பாக்கு வெட்டி - நெம்பு வகைப் பொறி
52. உடுக்கு - தோற்கருவி
53. 8
54. 4
55. 6
56. 1
57. 3
58. 7
59. 5
60. 2
61. க.நந்தன், 18, பாடசாலை வீதி, கண்டி.
62. ச.சங்கர்,27, கல்லூரி வீதி, திருகோணமலை.
63. பதிவுத் தபால்
64. மாவட்டச் செயலகம் - மரம் வெட்ட அனுமதி பெறல்
65. பொலிஸ் நிலையம் - தொலைந்த அடையாள அட்டைகளைப் பற்றிப் பதிதல்
66. மாவட்ட தேர்தல் ஆணையாளர் அலுவலகம் - வாக்காளர் இடாப்பின் பிரதி ஒன்றினைப் பெறல்
67. வங்கி - சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்தல்
68. விவசாயசேவை மத்திய நிலையம் - பசளை வகைகளைத் தெரிவு செய்தல்
69. பிறப்பு, இறப்பு , திருமணப் பதிவு செய்தல் - பிறப்புச் சான்றிதளைப் பெறல்
70. ஓடாவி / தச்சன்
71. மேசன்
72. வைத்தியர்
73. மீனவர்
74. ஆலயம்
75. திரிபீடகம்
76. தேவாலயம்
77. பள்ளிவாசல்
78. இளங்கோ அடிகள்
79. பாரதியார்
80. 1. உலகில் உள்ள அனைத்துச் செல்வங்களிலும் மேன்மையான செல்வம் கல்விச் செல்வமாகும்.
2. கல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கிடைத்த பிறரால் திருடப்பட முடியாத சொத்தாகும்.
3. இச் செல்வத்தைப் பெற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் மதிப்புத் தேடிவரும்.
4. கல்வி ஒரு மனிதனுடைய அறியாமையைப் போக்கி, சிந்தனையை வளர்க்கிறது.
5. இக்கல்வியை ஒரு மனிதன் அனுபவ வாயிலாகவோ, கற்றல் மூலமோ பெற முடியும்.
6. கல்வியானது கற்கும் போது நுனிக் கரும்பு போல் கசக்கினும், அதன் பயனோ அடிக்கரும்பு போல் இனிக்கும்.

வினாத்தாள் -1. முற்று
வினாத்தாள் 2. தொடரும்

ச.ஜெயாகரன்
மட்/ திருப்பழுகாமம் விபுலானந்தா வித்தியாலயம்.

# காத்திரன் பதில்

01. கே: காத்திரனே! சிங்களப் படைகளின் அட்டகாசம் எப்போது குறையும்?

*த.மேகராசா(மேரா) 1ம் வருடம், கலைப்பிரிவு கி.ப.கழகம் வந்தாறுமூலை.*

**ப: செந்தமிழ் நிலம் விடியும்போது.**

02. கே: தற்போது அதிகரித்து வரும் வன்முறைகளுக்கும் / அசம்பாவிதங்களுக்கும் என்ன காரணம் காத்திரனே?

*கே. பி.கரன் - முனைக்காடு-7*

**ப: புரிந்துணர்வு இல்லாமையும், பரந்த மனப்பாண்மை இல்லாமையும்.**

03. கே: படித்தவர்களில் உண்மை, பொய், நீதி, அநீதி எது எனத் தெரியாதவர்கள் இருக்கிறார்கள் அவர்கள் எப்படித் திருந்துவார்கள் காத்திரனே?

*எஸ்.பகிரதன் அம்பிளாந்துறை.*

**ப: படித்த முட்டாள்கள் படியாத அறிவாளிகளின் செயலை உணரும்போது.**

04. கே: நமது நாட்டில் சமாதானம் எப்போது வரும் காத்திரனே?

*அ.யோகராணி மாவேற்குடா A.P.C*

**ப: நமக்கு நாடு கிடைக்கும் போது.**

05. கே: காத்திரனே! முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தைக்கும் அவரின் இரு புதல்வர்களுக்கும் கடந்த இரு மாதங்களுக்கு முன் நீதி மன்றத்தினால் மரண தண்டனை வழங்கப்பட்டபோது அழுது கொண்டு போனவர்கள் இப்போது சிரிக்கிறார்களாமே?

*த.ஜீவாகரன்(ரணில்) முதலைக்குடா.*

**ப: யார் சொன்னது இவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டதென்று, பிந்துனுவெவ தமிழ்க் கைதிகள் கொலையாளிகளுக்குத் தான் மரணதண்டனை வழங்கப்பட்டது.**

06. கே: மண்மீட்புக்காய் நம் தமிழினம் போராடி ஒரு நல்ல தீர்வு கிடைக்குமென எதிர்பார்க்கும் இவ்வேளையில் அத்தீர்வு கிடைப்பதைத் தடுக்க நினைப்பவர்கள் பற்றி உமது கருத்தென்ன காத்திரனே?

*பே.நிலூகினி ஆரயம்பதி 03*

**ப: 50 வருடங்களாக நாம் எதிர்பார்த்த ஒன்றுதான் இந்தத் தடுப்பு நடவடிக்கை இதுக்காகவேதான் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பலத்தைக் கூட்டி உரிமையை வென்றெடுக்க வேண்டும்.**

0.7 கே: முஸ்லிம் கட்சிகளுள் இரண்டு கட்சிகளுக்கு முரண்பாடு ஏற்பட்டால் தமிழர்களைச் சம்பலாக நினைக்கிறார்கள் ஏன் காத்திரனே?

*ச.நபரீபன் கொக்கட்டிச்சோலை*

**ப: அதுவா பிட்டும் தேங்காய்ப்பூவுமாக இரு சமுகத்தையும் பலர் வர்ணிப்பதால் பிட்டுக்குச் சம்பலாகத் தமிழரை நினைக்கிறார்கள்.**

**உங்கள் கேள்விகளை**
**காத்திரன் பதில்**
**தமிழ் அலை**
**கொக்கட்டிச்சோலை.**
**எனும் முகவரிக்கு அனுப்புங்கள்.**

**கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் நடாத்தும்**
**தமிழ் பேசும் மக்களின் உணர்வலையான**
**"தமிழ்அலை"**
**25வது இதழ் (இதுவரை வெளியான 25 இதழ்கள்)**
**விமர்சன ஆய்வரங்கு**

**20.09.2003 - சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு**
**மட்டக்களப்பு அரசடி தேவநாயகம் மண்டபத்தில்**
**கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத் தலைவர்**
**இரா.துரைரெத்தினம் தலைமையில் இடம்பெறும்**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**
**கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம்**

## வீரம் விளைநிலத்தில்...

சுரேஸ் பிரேமச்சந்திரன் பேசுகையில் கடந்த 1974ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரையும் போராளிகளைத் தவிர எழுபத்தி ஐயாயிரம் மக்கள் எமது தாயகத்தில் கொல்லப்பட்டனர். வடக்குக் கிழக்கு இணைப்பு என்பதுதான் எமது தாயகம். இன்று வடக்கு வேறு, கிழக்கு வேறு எனக் கூறு போட சில முஸ்லிம் அரசியல் வாதிகள் தமது இருப்பைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கில் அரசியல் நாடகம் நடிக்கின்றனர். வடக்குக் கிழக்கை எந்தச் சக்தியாலும் பிரித்து விட முடியாது. இந்தக் கதைக்கே இடமில்லை தமிழின உயிர்க்கொலைகள் வரலாற்று ஆவணமாகப் பதியப்பட்டு இறந்த குடும்ப அங்கத்தினருக்கு நிவாரணங்களை வழங்க சகல அமைப்புக்களும் ஒன்றிணைந்த ஒரு திட்டத்தில் செயல்பட்டு பாதிக்கப்பட்டவர்கள் குடும்பத்தின் கல்வி, பொருளாதாரங்களை மேம்படுத்த பாடுபட வேண்டும் எனவும் கூறினார்.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் தலைவர் இரா.துரைரெத்தினம் பேசுகையில் தமிழ் மக்கள் இவ்வாறான நிகழ்வுகளில் கலந்து கொள்ள முன்வர வேண்டும். வெறும் சம்பவங்களாக இவைகளை நினைக்காமல் சரித்திரங்களாக இக்கொலைச்சம்பவங்களை மாற்றுவதன் மூலம் எதிர்காலச் சந்ததியினர் இவற்றை நினைத்துப்பார்க்க ஏதுவாக அமையும் எனக் கூறினார்.

கடந்த 1990ம் ஆண்டு செப்டெம்பர் 5ம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்த சுமார் 49ஆயிரம் தமிழ் மக்களின் அகதி முகாமிற்குப் பொறுப்பாய் இருந்த பேராசிரியை மனோ சபாரெத்தினம் அந்த நாள் ஞாபகத்தை நெஞ் சிலே நிறுத்தி அந்த சோகம் சேர்ந்த உண்மைகளைக் கண்ணீர் மல்க எடுத்துரைத்தார். அன்று செப்டெம்பர் 5ம் திகதி காலையில் கவச வாகனம், பஸ், ஜீப்வண்டி, சகிதம் நாலா புறமுமாக சிங்கள இராணுவத்தினர் வந்தனர். ஆண்கள் வேறாக ,பெண்கள் வேறாக வரும்படி கூறி ஆண்களை ஐந்து முக மூடிகளுக்கு முன் வரிசை யாக காட்டி முகமூடியால் தலை அசைக்கப்பட்ட 158 தமிழர் களையும் மதில் சுவர் மேலால் ஏற்றி புகையிரதப் பாதையின் பக்கம் கொண்டு சென்று அங்கிருந்த பஸ் வண்டிகளில் ஏற்றிச் சென்றனர். இவர்களில் 9வயதுச் சிறுவன் தொடக்கம் 55வயது முதியவர் வரை இருந்தனர். அன்று கொண்டு சென்ற வர்கள் இதுவரை எங்கே? என்ன நடந்தது என்பதே தெரியாது. ஆனால் நாவலடியில் உள்ள கிறவல் குழியில் போட்டு எரித்ததாக பின்னர் அறிய முடிந்தது.

இவ்வாறான கொலைகள் இனிமேலும் நிகழாமல் இருக்க வேண்டுமானால் தமிழ் மக்கள் பல கோணங்களில் செல்லாமல் ஒரு தலைமையின் கீழ் ஒற்றுமையுடன் செயல்படுவதனால் மட்டுமே தடுக்க முடியும் எனக் கேட்டார்.

கிழக்குப் பல்கலைக்கழக பதில்வேந்தர் பேராசிரியை அம்மன் கிளி முருகதாஸ் அங்கு உரை நிகழ்த்தும் போது பிரித்தாளும் எம்மை அன்று தொடக்கம் இன்று வரை சிங்கள் அரசியல் வாதிகளால் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. அதில் ஒன்றுதான் தற்போது வடக்கு, கிழக்கு என இரு கூறாக துண்டாடப்பட வேண்டும் என சிங்கள பேரினவாதிகள் சிலர் முஸ்லிம் அரசியல் வாதிகளூடாக செய்ய முனைகின்றனர். இதற்கு நாம் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும் வடக்கு கிழக்கு இணைந்த மாகாணமே எமது தாயகம் என்பதில் உறுதியாக இருப்பதுதான் இன்றைய தேவை எனக் கூறினார்.

கிழக்குப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் இராஜகோபால் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், கல்வியல் கல்லூரி மாணவர்களின் கவிதைகள் ஆங்காங்கே கருத்தைக் கவர்ந்து நெஞ்சை உயர்த்தியது. மட்டக்களப்பு மக்கள் பெருமன்றத்தின் பொதுச் செயலாளர் சண்- தவராசா தமிழின உயிர்க்கொலை தினத்தை உளமார நினைவு கூர ஒத்துழைத்த அனைத்து தரப்பினருக்கும் நன்றி கூறியதுடன் இறுதியாக மட்டக்களப்பு கல்வியல் கல்லூரி மாணவிகளால் நடிக்கப்பட்ட கண்ணீர் மல்கும் உணர்வு பூர்வமான சிங்களப் படைகளால் தமிழினம் பட்ட அவலங்களளைச் சித்தரிக்கும் நாடகம் மேடையேற்றப்பட்டது.

இந்நிகழ்வுகள் அனைத்தும் அன்று காலை 10.00மணி தொடக்கம் பிற்பகல் 2.00மணி வரை கிழக்குப்பல்கலைக்கழக வளாகத்தில் இடம் பெற்றபோது பார்வையாளர்களாகவும் அதிதிகளாகவும் கலந்து கொண்ட அனைவரும் கொளுத்தும் வெயிலிலும் அலுப்புக்கள் இன்றி முகவரி தெரியாத புதை குழிகளில் சங்கமித்த தமிழின சஞ்சீவிகளை கண்ணீர் சிந்தி நினைவு கூறியமை காணக் கூடயதாய் இருந்தது.

அன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பொது இடங்களிலும், சந்திகளிலும் சோக கீதங்கள் ஒலித்தன. தமிழர்கள் என்ற காரணத்தால் கொலை செய்யப்பட்ட உறவுகளின் நினைவுகளை மீட்டிப் பார்த்தனர்.

**இதயக் கோயில் தெய்வங்கள்**
**எம் மாவீரர்கள் என்ற வரிசையில்**
**லெப்ரினன் மலரினி**
**(துரைசிங்கம் - லதா)**



**வீரச்சாவு**
**19.09.2000**

அன்னை மண்ணின் துயர் துடைக்க
அணி திரண்ட வேங்கையே மலரினி
அண்ணன் இட்ட ஆணை ஏற்று களம்
விரைந்த வீரப்புலியே மலரினி
நெஞ்சிலே விடுதலை தீ சுமந்து
விழிகளிலே விடுதலைக் கணல் தெறிக்
கனரக ஆயுதம் தோள் சுமந்து
கயவன் படை அழித்து
தாய் நிலம் மீட்க
உயிர் கொடுத்த உத்தமியே மலரினி
சாதனை படைத்து
சரித்திர நாயகராய்
மாவீரராகி மலர் மாலைகள் தோள்
சுமக்க மலர்கள் மத்தியிலே
சந்தனப் பேழையில்
மௌனித்து துயில்கையிலே –எம்
மனம் கூட மௌனித்து
அசைவற்று இருக்கிறது –ஒரு கனம்
ஈழத்து நாயகியோ நீ வாழ்ந்து
கொண்டிருக்கும் –எங்களுக்கு
வீரத்தின் போதகரோ நீ தங்கையே
வாழப் போகும் சந்ததிக்கு
வீரத்தின் விழுதுகள்
நீங்கள் மடிந்தவர்கள் –அல்ல
எம் இதயக் கோயிலில் – தினமும்
வாழ்ந்து கொண்டிருக்கும்
இதயக் கோயில் தெய்வங்கள்.

தகவல்
த.சிவதாசன்
ஞானிமடம், பூனகரி
தற்போதைய முகவரி
காவல் பணிமனை,பழுகாமம்

# மூன்றாம் ஆண்டு நினைவில்...

தாயின் மடியில் 28 – 12 – 1976



**பூபாலபிள்ளை**
**சிறிகாந்த்**

பகைவர்கரங்களில் – 12 – 09 – 2000



**கனகசபை**
**கருணாகரன்**

தாயின் மடியில் 09 – 08 – 1977

அலைதொடும் கடலோரம்
விலை மதிப்பில்லா செல்வங்கள் இரண்டு
புதை முகமாகிப் போன நாளில்
காற்று மௌனிக்க
கடல் கொந்தளித்தது.
குருதிப் பசி பிடித்தவனின்
கொடுமையில்
அறிவுச் சுடர்கள் அணைந்து போனதை
என்ன சொல்ல?
இரும்புக் குழலுக்குள் இரக்கத்தையும்
இறுக அடைத்தவர்களுக்கு
மருத்துவத்துறை என்ன
மற்றவை என்ன?
இழந்தவர்கள் நாமல்லவா
இன்றும் உணருகின்றோம்
இழப்பின் வலிமைகளை.

உங்கள்
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# அலையின் பார்வையில்




கரடியனாறு தேனகத்திற்கு வருகை தந்த நோர்வேத் தூதுவர் ஹன்ஸ்பிரட்ஸ்கர் அவர்கள் மூத்த தளபதி கேணல் கருணா அம்மான், சிறப்புத் தளபதி ரமேஸ், மட்டு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோரைச் சந்தித்தபோது.



சத்துருக்கொண்டானி 186 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட 13வது ஆண்டு நினைவு கூரலில் கலந்து கொண்ட நினை வுரையாளர்கள்

(படம்: றஜீவன்)



பகைமை வேண்டாமே!
புள்ளி மானுடன் பொறுமையோடு
உறவு கொள்ளும் கரடிக்குட்டி
தமிழின விரோதிகள் இதை அறிவார்களா!

(படம்: றஜீவன்)


கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம்

## தேரோட்டப் பெருவிழா சிறப்பு மலர் 14-09-2003

கொக்கட்டிச்சோலை
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த
உற்சவம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்



Jayathiri jewels

பிரதான வீதி
களுவாஞ்சிகுடி,
தொ.பே: 065-2250078

கொக்கட்டிச்சோலை
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த
உற்சவம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்

CHEVVANTHY Jewellery



இல.11, பிரதான வீதி
மட்டக்களப்பு.
தொ.பே. 065-2223657

கொக்கட்டிச்சோலை
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த
உற்சவம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்

மட்டக்களப்பில்
Dialog GSM
இணைப்புக்களைப்
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
Dialog GSM
இனது அங்கீகரிக்கப்பட்ட
ஒரே நிறுவனமான



THE PHONE SHOP
276/1, திருமலை வீதி
மட்டக்களப்பு
T.P: 065-2226400
0777-550947
0777-550948
kit
நாளைய உலகை இன்றே அனுபவியுங்கள்

மீன் பாடும் தேன் நாடாம் மட்டுநகர் மத்தியில் மங்காப் புகழ் கொண்ட
"LAKE VIEW INN" ஒரே கூரையின் கீழ்

* அனைத்து வகையான வைபவங்களுக்கும் சகல வசதிகளுடன் விசாலமான மண்டபம்.
* சுவையான கீழத்தேய, மேலத்தேய அறுசுவை உணவுகள் சமையல் வல்லுனர்களின் மேற்பார்வையில் பரிமாறல்.
* குளிரூட்டப்பட்ட/ சாதாரண வாவியோர அறைகள்.
* வாகனங்களை நிறுத்திக் கொள்ள விசாலமான இடவசதி.
* மிகச் சாதாரண வசதிக்கேற்ப கட்டணம்.

" LAKE VIEW INN "

தொ.பே: 065-2222339, 065-2222113 No.06B,Lioyds Avenue,Batticaloa.

Centre for Systems Studies,
#17, Arunakiri Lane, Batticaloa.
Tel: 065-23675 Email: csss@slt.lk

மட்டுநகரில் தரமான கணணிக் கல்வியை வழங்குவதோடு, தொழில்சார் கற்கை நெறிகளை பூரணத்துவமாக நடாத்தும் அரச அங்கீகாரம் பெற்ற எமது நிறுவனத்தில் கீழ்காணும் பாடநெறிகள் ஆரம்பமாகவுள்ளன.


Diploma in Information Technology
Diploma in Ms-Office

புதிய வகுப்புக்கள்: 06/09/2003 10:00 AM
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

Courses Available
VB, Java, C++, C#
Oracle, SQL Server
Ms-Windows2000/Xp
Ms-Windows2003
Word Xp, Excel Xp
PowerPoint Xp
Access Xp
AccPac, Page Maker
Graphics Designing
Web Designing
Networking
Hardware Eng.

மிகக் குறைந்த
செலவில் அதிக
இலாபம்
பெற்றுகொள்ள
தமிழ்அலையில்
விளம்பரம் செய்யுங்கள்


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| தாய்மடியில் | | தாயக மீட்பில் |
|---|---|---|
| 12 - 04 - 1982 |  | 12 - 09 - 2001 |

### லெப். அருமைநாயகி
(கந்தப்போடி தனலெட்சுமி)
வெல்லாவெளி.

தாயகம் மீட்க.....
நெருப்பாறு தாண்டினாய்..
பகைவர் நடுங்க..
படையை நடத்தினாய்..
புயலாகச் சீறி..
கொடும் பகை
அழித்தாய்..

தமிழீழ வேள்வித் தீக்கு..
ஆகுதியானாய்..
அருமைநாயகி...
உன் கனவு நனவாகும்..
தமிழீழம் மலரும்..

உன் நினைவுகளுடன்
உன் உறவுகள்
வெல்லாவெளி


IBS ®

International Business Systems Overseas (Pvt) Ltd.
No.415, Trinco Road, Batticaloa.
Voice : 065-2222596, e-mail : ibso@sltnet.lk

Certificate in Computer Awareness (CCA)
Specially designed for Students who were Waiting for O/L results.
Introduction to Computer & MS - DOS
Microsoft Windows XP
Microsoft Office 2003
Duration : 30 Days

Other Courses
Microsoft Office 2003
PC Hardware Engineering
Desktop Publishing
Web Designing
Auto CAD, Auto DESK
Visual Basic 6.0
Java
Macromedia Flash

Computers, Accesories Sales
Brand new Computers and used computer sales
Autherized Dealer
Intel, Gigabyte, Asus,Logitec, Sony, Philips, Samsung, Cannon, Hewlett Packard



Accreditation With : BCS City & Guilds CIW ECDL OCR ORACLE

BIG-S
COMPUTER SYSTEMS
Computer Accessories Sales


இப்பத்திரிகை கொக்கட்டிச்சோலை நித்தி பதிப்பகத்தில் 13.09-2003 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.